# வித்தியா

# VITHIYA

யா/ உரும்பிராய் இந்துக் கல்லூரி

J/URUMPIRAIHINDU COLLEGE

1911-2003

வித்தியாவின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

# விநாயகர் வியாபார நிலையம்
# (சந்திரன் கடை)



உங்களுக்குத் தேவையான சகலவிதமான பலசரக்குப் பொருட்கள், பாடசாலை உபகரணங்கள்,கட்டடங்களுக்குத் தேவையான கல்லு,மணல், சீமேந்து. என்பனவற்றை நியாய மான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



## இதர சேவையாக

உங்கள் குடும்பங்களில் நிலவும் சகலவைபவங்களுக்கும் தேவையான சொக்கட்டான் பந்தல்,தகரப்பந்தல்,பிளாஸ்ரிக் கதிரைகள் இரும்புக் கதிரைகள்,வான் சேவைஎன்பவற்றை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளலாம்.





கற்பகப்பிள்ளையார் வீதி.
உரும்பிராய் வடக்கு.
உரும்பிராய்.

கஜமுகன் கிராப்பிக்ஸ்,இல61,பொற்பதி வீதி, கொக்குவில்.

# உள்ளடக்கம்

1. இறைவணக்கம்
2. கல்லூரிக் கீதம்
3. அதிபரின் ஆசிச்செய்தி
4. ஆசியுரைகள்
5. வாழ்த்துரைகள்
6. சான்றோர் ஆக்கங்கள்
7. ஆசிரியர் ஆக்கங்கள்
8. மாணவர் ஆக்கங்கள
9. மலர்க்குழுவினர்
10. நன்றி மறவோம்



## பிள்ளையார் துதி

ராகமே, ஜீவனே நாதப்பொருளே கணபதியே
சீதக்களபச் செந்தாமரைப்பூ
பாதச் சிலம்பொலி பண்ணிசை பாட
மூலப்பொருளே முக்கண் ஈசா ஆதார சுருதிக்
கதிபதியே
வாழ்வும் வளமும் வழங்கும் திருவே
ஏழேழ ஜென்மமும் உருகித் தொழுவேன்.
(ராகமே..)

உரும்பிராய்க் கோயில் ஒலிதரு மணியே
ஓங்கார உன்னொளி ஒலிக்கும் திசையே
மாங்கனிப் படையல் மகா கணபதி
மழை முகில் விழியின் அருள் தரு நதியே
வித்யா மலரின் அர்ச்சனைப் பூக்கள்
வேதனே விநாயகர்
ருதகஜ - துரத, பதாதிகள், ஈசா.

# கல்லூரிக் கீதம்

மலர் கலை உரும்பிராய் இந்துக் கல்லூரி

வான் புகழ் ஓங்கியே வாழ்க

மெஞ்ஞான மன்றில் விளைஞானத் திருவை

விஞ்ஞானம் நல்கிட வாழ்க.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்

உண்மையை மாணவர்க் குணர்த்து

மெய் மகா வாக்கியமாக

மெய்ப் பொருள் காணுவதறிவு

விளங்க நிரந்தரம் வாழ்க

மணிக்கொடி உரும்பிராய் மாநகர் எடுத்தே

வான் புகழ் ஓங்கியே வாழ்க

வாழ்க! வாழ்க! வாழ்க!

இந்துக்கல்லூரி வாழ்க,

எங்கள் கல்லூரி வாழ்க.

# எங்கள் கல்லூரி முதல்வர்



## திரு. அப்பாத்துரை ஈஸ்வரநாதன்

வணிகமாணி (சிறப்பு வகுப்புச்சித்தி)
பட்டப்பின் கல்வியியல் டிப்ளோமா
இலங்கை அதிபர் சேவை தரம் - 1

**Mr. Appathurai Eswaranathan**

B. Com (Hons) Dip. in Ed
S.L.P.S - 1

# அதிபரின் ஆசிச் செய்தி

தமிழுண்டு தமிழ் மக்களுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல — தொண்டு
தமிழ் என்று தோழ்தட்டி ஆடு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்லதொண்டு
(எங்கள் தமிழ் - பாரதிதாசன்)

எமது கல்லூரி "வித்தியா" சஞ்சிகையானது 2000 ஆம் ஆண்டில் இருந்து புதுப்பொலிவு பெற்று வருடந்தோறும் எமது அனைவரது கைகளிலும் தவழ்ந்து, மணம்பரப்பி வருவதையிட்டு பேருவகை அடைகிறேன். அந்தவகையில் இவ்வருடமும் தங்குதடையின்றி இச்சஞ்சிகை வெளிவருவதில் மிக்கமகிழ்ச்சி அடைகிறேன்.

காலச்சக்கரம் வேகமாகச் சுழன்றுகொண்டிருக்கும் இவ்வேளையில் கணனி, இன்ரநெற் யுகங்கள் சமாதானம் நோக்கிய சூழல் இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு பல்சுவைக் கதம்பமலராக மிளிர்வதையிட்டு மனமாரப் பாராட்டுகிறேன்.

"கற்றோர்க்குச் சென்ற இடமெல்லம் சிறப்பு" போல எமது "வித்தியா" செல்கின்ற இடமெல்லாம் சிறப்புற அமைய வேண்டும் என்பது எனது பேரவா.

இம்மலர் வெளியீட்டுக்கு உதவிய அனைத்து கரங்களுக்கும் இதயபூர்வமான நன்றி கூறி இனிவரும் காலங்களிலும் புதுப்புது பொலிவு பெற்று வெளிவரவேண்டும் என்று எல்லாம் வல்ல ஓடயம்பதி கற்பக விநாயகனின் தாழ்வணங்கி என்றென்றும் தமிழ் மணம் பரப்பி சிறப்புற்று சீர் பெற வாழ்த்துகின்றேன்.

அ .ஈஸ்வரநாதன்
அதிபர்

# ஆசிச்செய்தி

**பேராசிரியர் எஸ்.மோகனதாஸ்**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**


உரும்பிராய் மண் செம்மையும் செழுமையும் மிக்கது. இங்கு வாழும் மக்கள் கல்வியிலும் புலமையிலும் ஆற்றலும் ஆர்வமும் மிக்கவர்கள் என்பதை நான் நன்கு அறிவேன்.

இக்கல்லூரி விழாவெடுப்பதும், அவ்விழாவை ஆவணப்படுத்தும் வகையிலே மலர் ஒன்றை வெளியிடுவதையும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். எமது கல்விச் செயற்பாடுகளை எதிர்காலத் தலைமுறையினருக்குச் சொல்ல வேண்டிய பொறுப்பு எமக்கு உண்டு. இம் முயற்சியிலே ஈடுபடும் அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் முழுமனதுடன் பாராட்டுகின்றேன்.

பாடசாலைப் பருவத்திலே, எழுத்துத் துறையில் ஆர்வமுடையவர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கும் பணியினை இத்தகைய மலர்களே செய்து வந்துள்ளது. பிற்காலத்திலே பிரபல எழுத்தாளர்களாகத் திகழ்ந்தவர்கள் தமது பள்ளிப்பருவத்திலே இத்தகைய மலர்களிலே எழுதியவர்களே எனலாம்.

ஆசிரியர்களையும் ஆய்வாளர்களையும் கொண்டு எழுதப்பட்ட படைப்புகளோடு மாணவர்களின் ஆக்கங்களும் இடம்பெறுவது நன்று.

இக்கல்லூரி வெளியிடும் "வித்தியா" மலர் எக்காலமும் நறுமணம் வீசவேண்டுமென வாழ்த்துகின்றேன்.





# இதழாசிரியரின் இயத்திலிருந்து

உயிரினங்கள் யாவற்றுள்ளும் மக்களினம் ஒன்றே உள்ளக்கருத்தை எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்றுள்ளது. பெறுவதற்கரிய இப்பேற்றை நன்முறையில் திறனறிந்து பயன்படுத்தும் சொல்வன்மையேயாகும். இவ் வன்மையாளரைச் சொல்லேருழவர் என்றும் "வில்லேருழவராகிய வீரர்களின் பகையைப் பெற்றாலும் 'சொல்லேருழவர் பகைகூடா" தென்றும் சொல்வன்மைமிக்கச் செந்நாப்போதர் (வள்ளுவர்) புகழ்ந்துரைக்கின்றார். சொல்லையே ஏராகக் கொண்டு மக்கள் உள்ளத்தை உழுது நல்ல கருத்துக்களை விதைத்துப் பண்புப் பயிரினை வளர்த்து இன்ப விளைவை அறுவடை செய்பவரே சொல்லேர் உழவர்"

உலக உயிர்களை உண்பித்து வாழ்விப்பவர் மரக்கலப்பையை ஏராகக் கொண்டவரும், மக்கள் உள்ளப் பண்பாட்டை, சொல்லை ஏராகக் கொண்டவர் உழவர் யாவருக்கும் நன்மையே பயக்கும் தூய்மையான சொற்களைச் சொல்லும் ஆற்றல் பெறுதல் போலவே, எவருக்கும் தீமையின்றி நன்மையே பயக்கும் தூய்மையான வினைகளைச் செய்து பழகல் வேண்டும். மனத்தூய்மையும் சொல் தூய்மையும், செயல்தூய்மைக்கு வழிகாட்டியாகும் ஆதலின் வினைத் தூய்மையின்றேல் ஏனைத்தூய்மைகளால் பயனில்லை

சிந்தனை வளப்பு எழுத்தின் வளப்பு சொல்லின் வளப்பே வளப்பு

"To Thine Ownself be ture"

"உனக்கு உண்மையுள்ளவனாக இருப்பாயாக"
என்பது இக்கல்லூரியின் தாரக மந்திரம்

இம்மந்திரத்தால் கட்டுண்டு எமது கல்லூரிக்கு பல்வேறு துறைகளிலும் பணி ஆற்றிய, ஆற்றி வருகின்ற பண்புடையோர் பழைய மாணவர்கள். அச்சான்றோரின்

உந்து சக்தியினாலும் உறுதுணையாலும் வருடாந்த சஞ்சிகையாக வெளிவரும் "வித்தியா" என்றென்றும் மாணவர்களின் புத்தாக்கங்களை தூண்டுவதற்கு வழிகாட்டியாக, அறிவுச்சுடர் பரப்பும் விளக்காக அமைய வேண்டும்.

"The end of all Education all trainee Should be man making"

எல்லாக் கல்விகள், பயிற்சிகள் அனைத்தினதும் முடிவு ஒரு முழு மனிதனாக ஆக்குவதுதான் என்பது விரத்துறவி விவேகானந்தரின் வாக்கு. தொழில் வாய்ப்பை உருவாக்குவது மாத்திரம் கல்வியின் நோக்கமல்ல. கல்வி ஓர் பூரண மனிதனை உருவாக்குகின்றது. மனித விழுமியங்களை பேணி வழிநடக்க உதவுவது ஒழுக்கக் கல்வி. இக் கணணியுகத்தில் "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினாற்தானே" என்னும் சங்கத்தமிழ் நூலாசிரியர் கருத்திற்கமைய இன்றைய சமூகத்தினர் புதுவிதமான கொள்கையை நிலைநாட்ட முயற்சிக்கின்றனர். இன்று நமது மக்களிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் கல்வியாளர்கள் அறிஞர் பெருமக்கள், அனுபவசாலிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து நமது மண்ணையும், மக்களையும் பாதுகாத்து எதிர்கால இளஞ்சந்ததியினருக்கு வளமான, ஒளிமயமான வாழ்விற்கு அறிவூட்ட வேண்டியது கற்றோரின் இன்றியமையாத கடமையாகும்.

ஆறாம் அறிவு பயன் பெறாதவிடத்து அவன் சாதாரண மனிதப்பிறவிதான். அந்த ஆறாம் அறிவை இழக்க நேரும் போது ஐந்தறிவு பெற்ற விலங்கிற்குச் சமன்.

வித்தை விரும்பு என்ற ஔவைமொழிக்கமைய பெறற்கரிய மானிடப் பிறவியைப் பெற்று தமது ஆறாம் அறிவை வளர்த்து உள்ளத்தைப் பக்குவப்படுத்தி செயற்கரிய செயல்களை செய்வோமாக.

*தமிழ் வாழ்ந்தால் தமிழர் வாழ்வோம்*
*தமிழர் மார்தட்டி தலை நிமிர்ந்திடுவோம்.*

அன்பே தகளியாக ஆர்வமே நெய்யாக
இன்புருகி சிந்தை இடுதிரியாக - என்புருகி
ஞானச்சுடர் விளக்கேற்றினேன் நாரணர்க்கு
ஞானத்தமிழ் புரிந்த நான்.

- பூதத் தாழ்வார்

**திருமதி சி. ஸ்ரீதரன்**
(B.A. Dip. in. Ed)
ஆசிரியர்
யா/உரும்பிராய் இந்துக்கல்லூரி.

## உப அதிபர்




செல்வி. கு. பொன்னுத்துரை
B.A (Hons) Dip. in. Ed
S.L.T.S.I

## பகுதித் தலைவர்



திருமதி ப. ஆனந்தராசா
Dip. in Agri. 1st Class
Trained (Agri) S.L.T.S.I



## கல்லூரியின் வள ஆளனியினர் 2003

**இருப்பவர்கள் இடமிருந்துவலம்:**
திரு. ம. இ. நரேந்திரா, திருமதி. சு. ஜெயரத்தினம், திருமதி சி. மகேந்திரன்,
செல்வி கு. பொன்னுத்துரை, திரு. அ. ஈஸ்வரநாதன் (முதல்வர்),
திருமதி ப. ஆனந்தராசா, திருமதி சு. சுந்தரம், திரு. செ. செந்தில்நாதன்.

**முதல்வரிசையில் நிற்பவர்கள்:**
திருமதி ஜெ. இரத்தினசிங்கம், செல்வி குணநாயகி, திருமதி ச. பகீரதன்,
செல்வி இ. சத்தியதேவி, திருமதி தி. விமலநாதன், திருமதி இ. புவனராஜகுகன்,
செல்வி மா. வசந்தினி, செல்வி யோ. சுமித்தா, செல்வி அ. மேனகா,
திருமதி ம. சிவசிதம்பரலிங்கம், திருமதி வ. சண்முகசுந்தரமூர்த்தி.

**இரண்டாம் வரிசையில் நிற்பவர்கள்:**
திருமதி சி. ஸ்ரீதரன், திருமதி க. காங்கேயன், திருமதி க. முருகையா, திருமதி க. விஜயகுமார்,
திருமதி விக்கினேஸ்வரி, திருமதி த. திருக்குமரன், செல்வி இ. விஜயானந்தி.

**மூன்றாம் வரிசையில் நிற்பவர்கள்**
திரு. அன்ரனிபீற்றர், திரு. க. திருமாலழகன், திரு. ம. வினோகாந், திரு. க. சிவசங்கர்,
திரு. சு. சுலோஜன், திரு. க. மகேஸ்வரன், திரு. சூ. கிருபா, திரு. கு. துரைராசா,
திரு. அ. ஜெயதாசன்.

**படத்தில் இடம் பெறாதோர்**
செல்வி சி. திவ்வியா, திருமதி நி. யோகேந்திரன், திரு. பொ. கதிர்காமவாசன்.
திரு. அமல்ராஜ், திருமதி, சு. சு.றமணீதரன்.

# அருளாசிச் செய்தி

உடும்பிராய் பிரதேசத்தில் அமைந்து கல்வி ஒளிபரப்பும் இந்துக்கல்லூரி வரலாற்றுப் பெருமைமிக்க கற்றவர்களும், கற்றபடி ஒழுகுபவர்களும், சமய ஆசார நெறி நிற்பவர்களும் வாழ்கின்ற பிரதேசம். இப்பிரதேசம் நாவலர் பணியினை சிரமேற்கொண்டு இந்து கலாசார நெறிபிறழாது நன்மாணாக்கரை உருவாக்கி வருகின்ற கல்விக்கூடம். வருடம் தோறும் "வித்தியா" என்ற பெயரில் மலரினை வெளியிட்டு வருகின்றது. இம்முறையும் மலர் சிறப்பாக வெளிவர உதவிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் ஆசீர்வதிக்கின்றேன்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"
2வது குருமஹா சந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிகஞானசம்பந்த
பரமாச்சார்ய சுவாமிகள்.

## கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்துச் செய்தி.

யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி வருடாவருடம் "வித்தியா" சஞ்சிகை வெளியீடு செய்வதில் பெருமகிழ்வு அடைகின்றேன். இவ்வெளியீடு மாணவர்களின் அறிவுத்திறன்களை வெளிக்கொணர்கின்றது.தலைமைத்துவத்தையும்,ஆக்கங்களையும் ஊக்குவிக்கின்றது. எழுத்தாக்கத்தை வளர்க்கின்றது. அறிஞர்கள் படைப்புக்களை உள்ளடக்குகின்றது.

ஆகவே புதிய கல்விச் சீர்திருத்தநோக்கங்களை நிறைவு செய்வதில் பெரும் பங்காற்றுகின்றது என்பது வெளிப்படை. மேலும் இச்செயற்பாடு தொடர்ந்தும் வருடாவருடம் நடைபெற பாடசாலைச் சமூகம் தொடர்ந்து ஆதரவு நல்கவேண்டுமென மனமார வாழ்த்துகின்றேன்.

திரு.இ.சிவஞானசுந்தரம்
கோட்டஉதவிக்கல்விப்பணிப்பாளர்,
கோப்பாய்.

# உரும்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம், கனடா-2003-2004

## ஆசிச்செய்தி

"வித்தியா" என்ற அழகிய பெயருடன் வெளிவரும் மலரை உரும்பிராய் இந்துக் கல்லூரி தொகுத்து, சஞ்சிகையாக வெளியிடும் பணியை மனதாரப் பாராட்டுகின்றோம்.

நாம் புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்தாலும் எமது மண்ணை, எமது கல்லூரியை மறக்கவில்லை என்பதற்கு எமது சங்கம் ஒரு சான்றாகும். 1994 இல் ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் வருடாவருடம் சிறந்த கலை நிகழ்ச்சிகளோடு கூடிய பொங்கல் விழாவை நடாத்திவருகின்றது. இதனையொட்டி எமது சிறுவர்களுக்குப் பேச்சுப் போட்டி, இசைப் போட்டி என்பவற்றையும் நடாத்திவருகின்றது. அத்துடன் ஒன்றுகூடல், விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளையும் செய்து வருகின்றது. எமது ஊர்மக்களின் புரிந்துணர்வு, கலைத்திறன், ஒற்றுமை என்பன இதன்மூலம் வளர்க்கப்படுகின்றது.

நாம் எமது கல்லூரியின் நிலை கருதி மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம். நிதி சேகரிப்புச் செய்து அடிப்படைத் தேவைகளுக்கு உதவியுள்ளோம். இன்னும் உதவ முன்வந்துள்ளோம். சில நெறிமுறைகள் மூலம் விரைவில் இவை செயற்பட்டு எமது பங்களிப்பைச் செய்யவுள்ளோம். அதேவேளையில் அதிபர், ஆசிரியர் அனைவரும் ஒன்றிணைந்து எமது கல்லூரியின்கல் விவளர்ச்சியில் அக்கறை கொண்டு பழைய எமது கல்லூரியின் தரத்திற்கு உயர்த்தவேண்டும் என்ற அன்பான வேண்டுகோளையும் விடுக்கின்றோம்.

வருடந்தோறும் நீங்கள் வெளியிடும் "வித்தியா" தரமான படைப்புக்களுடன் வெளிவர வேண்டும் என்பதே எமது அவாவாகும். ஒரு கல்லூரியின் வளர்ச்சியை மதிப்பீடு செய்வதற்கு அக்கல்லூரியின் பெறுமதியான சஞ்சிகையும் உதவுகின்றது. அந்தவகையில் இம்மலர் கடந்தகால, எதிர்காலக் கல்லூரியின் சிறப்பினை வெளிக்காட்டும் என்பதில் நம்பிக்கை கொண்டுள்ளோம். எனவே, உங்கள் சஞ்சிகைக்கு எமது பூரணமான வாழ்த்துக்களை வழங்குகிறோம்.

எமது கல்லூரியின் கல்விப்பணி! வளர்க!! வாழ்க!!!

# உரும்பழராய் இந்துக்கல்லூரி
# பழையமாணவர் சங்கம். இலண்டன்கிளை

பெருமதிப்புக்குரிய அதிபர், ஆசிரியப் பெருந்தகைகள், மாணவமணிகள், பெற்றோர், பாடசாலைச் சமூகம், மற்றும் நலன்விரும்பிகள் அனைவருக்கும் எமது அன்பான வணக்கங்கள். இந்தவருடமும் வித்தியா சஞ்சிகைக்காக ஒரு செய்தி அனுப்புவதில் பெருமையடைகின்றோம்.

ஏமது இலண்டன் கிளையின் வருடாந்த ஒன்றுகூடல் எதிர்வரும் 29.11.2003 சனிக்கிழமை நடைபெற இருக்கின்றது என்பதனையும் இதேவேளையில் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றோம். எமது இலண்டன் கிளையினரின் விருப்பப்படி புதுப்பிக்கவேண்டிய நிலையில் இருக்கும் பிரார்த்தனை மண்டபத்தை எமது சங்கத்தின் சார்பில் புதிதாகக் கட்டித்தர வேண்டிய ஆயத்தங்களைச் செய்யத் தொடங்கிவிட்டோம். கூடிய விரைவில் அதற்கான தொடக்க வேலைகளைச் செய்யலாம் என்றே எண்ணுகிறோம்.

புதிய கலையரங்க மண்டபம் எமது சங்கத்தின் பெயரால் அமையவேண்டும் என்பதே எமது அவா. எல்லோரது ஆசைகளும் நிச்சயம் விரைவில் நிறைவேறும் என்றே எண்ணுகிறோம் புதிய கட்டிடங்கள் எழும்போது புதிய புதிய தொழில்நுட்பங்கள் நிறைந்த இக்கணனி யுகத்திலே, எமது மாணவர்களும் கல்வியிலே, விளையாட்டிலே, மற்றும் சகல துறைகளிலே புதிய புதிய சாதனைகளைப் படைக்கவேண்டும். அதற்கு நாம் எல்லோரும் எம்மாலானதைச் செய்ய வேண்டும்.

உலகெங்கும் பரந்துவாழும் உரும்பிராய் இந்துக் கல்லூரியின் மைந்தர்கள் தாம் வசிக்கும் எல்லா நாடுகளிலும் பழைய மாணவர் சங்கங்களை உருவாக்கி, அவற்றினூடாக நலிவுற்றிருக்கும் எமது பாடசாலைகளுக்கு உதவ முன்வரவேண்டும் என்பது எமது நீண்டநாள் அவாவாகும்.

பல பசுமையான இளமைக்காலப் பாடசால்ல நினைவுகள் இவ்வேளையில் மனதில் தோன்றுகின்றன. படித்த வகுப்புக்களும், வகுப்பு மாணவர்களும், மாணவர்களின் குறும்புகளும், போட்டிகளும், நாடகங்களும், ஏனைய நிகழ்வுகளும் ஒருபோதும் மனதைவிட்டு அகலாமல் இருக்கின்றன.

வித்தியா சஞ்சிகை சிறப்புற அமையவும், விழாவும் மிகவும் சிறப்பாக நிகழவும் எல்லாம் வல்ல இறைவனை வணங்கி எமது நல்லாசிகளையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்புடன்

திரு.மு.து.செல்வராஜா
திரு சி. சத்தியானந்தன்
செயலாளர்
16-10-2003

# பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் வாழ்த்துக்கள்

ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு சஞ்சிகை வெளியீடு முதுகெலும்பாக அமைகிறது. மாணவர்கள் தங்கள் ஆக்கங்களை வெளிக்கொண்டு வரவும், ஆசிரியர்கள் தனது அனுபவங்களைக் கட்டுரை மூலம் வெளிக்கொண்டு வந்து மாணவர்களின் கல்விக்கு வித்தூட்டவும், இச் சஞ்சிகை வெளியீடு ஓர் அரிய வாய்ப்பாக அமைகிறது.

நான் இவ் வித்தியா வெளிவரத் தொடங்கிய 03.04.2000 , 03.04.2001, 03.04.2002 ஆகிய ஆண்டுகளிலும் முறையே "வித்தியா காலத்தின் கண்ணாடி" "உரும்பிராய் இந்துவின் வளர்ச்சியில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம்", "பாடசாலையும் அபிவிருத்திச் சங்கமும்" என்ற தலைப்புக்களில் பல பழைய, புதிய விடயங்களை பிரதிபலித்துக் காட்டியுள்ளேன். ஆதலினால் இந்த ஆண்டு 2003 இன் வித்தியாவிற்கு வாழ்த்து என்ற தலைப்பை சூட்டியுள்ளேன்.

இச் சஞ்சிகை கடந்த மூன்று ஆண்டுகளாக பரிசளிப்பு விழா, தாபகர்தின விழா ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து வெளிவந்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால் இந்த ஆண்டு "வித்தியா" விற்கு தனிச்சிறப்பு வழங்கி, தனியான ஒரு விழாவாக "நூலகவாரத்தில்" வெளியிட எண்ணியுள்ளது ஒரு பொருத்தமான வைபவம் எனக் கருதுகின்றேன்.

மேலும் இக் கல்லூரியின் வளர்ச்சியில் அபிவிருத்திச். சங்கம் மிகவும் உன்னிப்பாக இருந்து அவ்வேளையில் செயற்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். இந்த ஆண்டு பாடசாலையில் ஓடியோ, வீடியோக்கான கட்டிடம் அமைப்பதிலும் முன்நின்று உழைத்து வருகிறார்கள். எமது சங்கம் கடந்த 06.04.2002 இல் பொதுக்கூட்டத்தை நடாத்தி புதிய நிர்வாக உறுப்பினர்களை தேர்ந்தெடுத்துள்ளார்கள்.

அவர்களின் பெயர், விபரங்களை கீழே தருகின்றேன்:

| | | |
|---|---|---|
| தலைவர் | :- | திரு அ. ஈஸ்வரநாதன் |
| செயலாளர் | :- | திரு ச. ஏகாம்பரநாதன் |
| பொருளாளர் | :- | திருமதி கமலவேணி விஜயகுமார் |
| உபதலைவர் | :- | 1. திரு அ. நல்லதம்பி |
| | | 2. செல்வி குகனேசமலர் பொன்னுத்துரை |
| உபசெயலாளர் | :- | திரு ம. பேரின்பநாதன் |

## நிர்வாகிகள்

1. திருமதி புவனேஸ்வரி கனகரத்தினம்
2. திருமதி விக்ரோறியா திருச்செல்வம்
3. திருமதி டொமினிக் புனிதவதி
4. திரு இ. தங்கராசா
5. திரு வ. சிவயோகநாதன்
6. திரு த. செல்லத்துரை
7. திரு வை. கதிரவேலு
8. திரு த. தங்கராசா
9. திரு எஸ். செந்தில்நாதன்
10. திருமதி பரமேஸ்வரி ஆனந்தராசா
11. திருமதி ஜெயானி இரத்தினசிங்கம்
12. திருமதி நித்தியகலா யோகேந்திரன்

## கணக்காய்வாளர்கள்

1. திரு கா. மயில்வாகனம்
2. திரு க. திருமாலழகன்


இவர்கள் அனைவரும் நல்ல ஒத்தசையுடன் செயற்பட்டு வருகிறார்கள். அனைவருக்கும் எனது நன்றிகள்.

மேலும் இவ்வித்தியா வெளிவர அல்லும் பகலும் உழைத்த கல்லூரி அதிபர், உபஅதிபர், மலர்க்குழு அனைவருக்கும் எனது பாராட்டுக்கள். பெரும் சிரமத்தின் மத்தியிலும் இம் மலருக்கு விளம்பரங்கள் சேகரித்த அனைவரையும் நான் தனித்தனியாகப் பாராட்டுகின்றேன். (விளம்பரம் எடுப்பதில் உள்ள சிரமங்களை அறிந்தேன் என்ற வகையில்) தொடர்ந்தும் இவ்வித்தியா அழகுடன், கனதியான பொருள்களை உள்ளடங்கி வெளிவர வேண்டும் என்று ஒடையம்பதி கற்பக விநாயகரை வேண்டி, வாழ்த்துகின்றேன்.

**ச.ஏகாம்பரநாதன் J.P**
**செயலாளர்**
**பாடசாலைஅபிவிருத்திச் சங்கம்,**
**உரும்பிராய் .**




## பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்கள்



**இருப்பவர்கள் இடமிருந்து வலம்:**
திருமதி க. விஜயகுமார், வைத்தியகலாநிதி செ. இந்திரராசா,
திரு. அ. நல்லதம்பி (உபதலைவர்) திரு. அ. ஈஸ்வரநாதன் (தலைவர்),
திருமதி பு. கனகரத்தினம், செல்வி கு. பொன்னுத்துரை

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்:**
திரு.சி. கதிரவேலு, திரு. த. செல்லத்துரை, திரு. வி. சோமநாதன் (செயலாளர்),
திரு. செ. நாகரத்தினம் (பொருளாளர்)

## பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக உறுப்பினர்



**இருப்பவர்கள் இடமிருந்து வலம்:**
திருமதி. ப. ஆனந்தராசா, திருமதி க. விஜயகுமார் (பொருளாளர்)
திரு. அ. நல்லதம்பி (உபதலைவர்), திரு. அ. ஈஸ்வரநாதன் (தலைவர்)
திரு. ச. ஏகாம்பரநாதன் (செயலாளர்), திருமதி பு. கனகரத்தினம்
செல்வி. கு. பொன்னுத்துரை

**நிற்பவர்கள் இடமிருந்து வலம்**
திரு. சி. செந்தில்நாதன், திரு. வை. கதிரேவேலு, திரு. தங்கராசா,
திரு. ம. பேரின்பநாதன், திரு. த. செல்லத்துரை

# பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் கண்கள்

**திரு வி. சோமநாதன்,**
**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்**

ஒரு மனிதனுக்குக் கண்கள் எவ்வாறு முக்கியமோ, அதேபோன்று ஒரு பாடசாலையின் கண்கள் அதன் பழைய மாணவர் சங்கம் என்றால் மிகையாகாது. இக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் ஆரம்பகாலம் தொட்டு சிறப்புற இயங்கிவந்தமை யாவரும் அறிந்த உண்மை. இருப்பினும் துரதிஷ்டவசமாக 1987 முதல் நாட்டில் ஏற்பட்ட நிகழ்வுகளினால் பழைய மாணவர் சங்கம் முற்றாகச் செயலிழந்துபோனது மிகவும் வேதனைக்குரியது மட்டுமல்ல, எமது பாடசாலையும் மிகவும் கீழ்நோக்கிப் போய்விட்டது. இதைக் கண்ணுற்ற பாடசாலையின் மைந்தர்களான உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெற்றிப் பவனிவரும் நமது பழைய மாணவர்களின் அன்பு நெஞ்சங்கள், நிலை தடுமாறித் தவித்து செய்வதறியாது திகைத்து நின்றவேளையில், இப்பாடசாலையின் பழைய மாணவனும் அதிபருமாகிய திரு அ. ஈஸ்வரநாதன் அவர்கள் தனது ஆரம்பப் பாடசாலையான உடுப்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக அப்பாடசாலையை நல்ல நிலையில் வளர்த்துவிட்ட பின் வளர்க்கப்பட வேண்டிய, தான் கல்விகற்ற உடுப்பிராய் இந்துக் கல்லூரி அன்னையின் பக்கம் அவர் பார்வை திரும்பியது. அதன் பயனாக 1999 முதல் எமது கல்லூரியின் அதிபரானார். அதிபரான சில மாதங்களிலேயே பாடசாலையின் கண்களாகிய பழைய மாணவர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்துவைத்து, அதன் தலைவராக இச் சங்கத்தைச் சிறப்புற வழிநடாத்துகின்றார் என்பதை இச்சந்தர்ப்பத்தில் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இச்சங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றும் எனக்கு அங்கத்தவர்கள், அனைவரதும் ஒத்துழைப்பும் கிடைத்து வருகிறது. இச் சங்கத்தின் பொருளாளர் திரு C. நாகரத்தினம் செயற்றிறன் மிக்க ஒருவர். அவரின் அயராத முயற்சியால் ஒரு ரூபா கூட இல்லை! வங்கிக் கணக்கும் இல்லை!! என்ற நிலையில் இருந்து சங்கம் இன்று ரூபா 816,511.21 சதம் தன்னகத்தே கொண்டு இயங்கிவருவதுடன் கிடைக்கும் வட்டிப் பணத்தில் கல்லூரியின் பல்வேறு பணிகளையும் செலவுகளையும் சமன்செய்து வருகிறது என்றால் அப் பெருமை பொருளாளரையே சாரும் என்றுகூறின் மிகையாகாது.

சங்கத்தின் வங்கிக் கணக்கு வளரவும் பாடசாலையின் பல்வேறு தேவைகள் பூர்த்தியாகவும் உறுதுணையாக இருக்கும் எமது உடுப்பிராய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கனடாக் கிளைக்கும் இலண்டன் கிளைக்கும் பாடசாலைச் சமூகத்தின் சார்பிலும் எமது தாய்க் கிளையின் சார்பிலும் எனது பணிவன்புடன் கூடிய நன்றியைக் கூறுகின்றேன். மேற்படி கிளைகள் பாடசாலைக்கு ஆற்றிய அரிய தொண்டுகள் பல. அவை விரிவாக அதிபரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டபடியால் இங்கு நான் அவற்றைக் குறிப்பிடவில்லை. குறிப்பாக, கனடாக் கிளை ஆற்றிய தொண்டு அளப்பரியது. திரு S. கனகசபை அவர்களைத் தலைவராகவும் திரு T.விக்னேஸ்வரராசாவைச் செயலாளராகவும், திரு எஸ்.சிவகுமாரைப் பொருளாளராகவும் கொண்டு இயங்கும் தற்போதைய நிர்வாக உறுப்பினர்கள்

பாடசாலையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருப்பது போற்றுதற்குரியது. அதேபோல் இலண்டன் கிளைத் தலைவர் திரு M.T.செல்வராஜா செயலாளர், திரு.S.சத்தியானந்தன் பொருளாளர், திரு m.நடேசன் ஆகியோரைக் கொண்டு இயங்கும் நிர்வாக உறுப்பினர்கள் கல்லூரியின் தேவையறிந்து செய்யும் உதவி மறந்தற்குரியது.

இன்று, இன்னும் பல தேவைகளை எதிர்நோக்கி நிற்கும் எமது கல்லூரித்தாய் மைந்தர்களாகிய எமது உதவியையும் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கின்றாள். மேலும் இக் கல்லூரியின் வளர்ச்சியில் காலத்துக்குக் காலம் சிறப்பாகப் பணியாற்றிய ஆசிரியச் சமூகத்துக்கும், தொண்டர்களாக பணியாற்றும் ஆசிரியர்கள் ஆசிரியைகட்கும் பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் எனது நன்றிகள் உரித்தாகுக. விளையாட்டுத்துறை கற்றல், கற்பித்தல் பணிகள் மேன்மேலும் சிறந்து விளங்கி எமது கல்லூரி உயர் நிலையை அடையவேண்டும் எவற்றாரும் பழைய மாணவர் சங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டாலும் விளையாட்டுத் துறை, கற்றல் கற்பித்தல், மேன்மையடையும் போதுதான் பாடசாலை வளர்ச்சியடையும். ஆகவே, பழைய மாணவர்களே, நலன்விரும்பிகளே, பெற்றோர்களே, ஆசிரியப் பெருந்தகைகளே, மாணவர்களே இதுவரை நாம் ஒன்றுபட்டு செயற்பட்டது போன்று எதிர்காலத்திலும் செயற்பட்டுக் கல்லூரியை வளர்ப்போம் வாரீர்! என எல்லாம்வல்ல கற்பக விநாயகரின் பாதார விந்தங்களைப் பணிந்து அமைகிறேன்.

நன்றி !வணக்கம்

வாழ்க! வளர்க! உரும்பிராய் இந்துக் கல்லூரி



# ஆசியுரை

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி,
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, ஸ்ரீலங்கா.

கல்விச் சிறப்பையும் பண்பாட்டுச் சிறப்பையும் ஒருசேர வளர்ந்துவரும் கல்லூரிகளில் உரும்பிராய் இந்துக் கல்லூரியும் குறிப்பிடத்தக்கதாகும். இங்கு பல தடவைகளில் நான் உரையாற்றியுள்ளேன். அதிபரின் ஆளுமையும், ஆசிரியர்களின் பங்களிப்பும், மாணவர்களின் கல்வி மேம்பாடும் ஒரு சேர இணைந்திருப்பதை இக் கல்லூாயில் நான் கண்டு பெருமைப்பட்டது உண்டு. மேலும் மாணவர்களின் வாசிப்பு நலனுக்காக ''வித்தியா'' என்ற பத்திரிகையை இக்கல்லூரிச் சமூகம் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது. ''வாசிப்பினால் மனிதன் பூரணமடைகின்றான்'' என்பதை அனைவரும் நினைவில் இருத்தவேண்டும். இந்தவகையில் வெளிவரும் ''வித்தியா'' சஞ்சிகையை வாழ்த்தி, குறிப்பிட்ட சஞ்சிகையின் ஆசிரியர், உறுப்பினர்கள் அனைவரையும் பாராட்டி அமைகின்றேன்.



# வாழ்த்துரை

ப. விக்னேஸ்வரன்,
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.


புகழ்பூத்த உரும்பிராய் இந்துக் கல்லூரியின் "வித்தியா" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகிறேன். ஆறுமுகநாவலரின் சுதேசிய உணர்வின் அடிப்படையில் உருவான இக் கல்விக்கூடம் பல்லாயிரம் நன்மாணாக்கரை உருவாக்கி, இன்றும் வீறுநடையுடன் செயற்படுவதையிட்டு அகமகிழ்வடைகின்றேன்.

மாணவரிடம் மறைந்திருக்கும் பல்வேறு எழுத்தாற்றல்களையும் இச் சஞ்சிகை வெளிக்கொணர்வதுடன், அவர்களது பல்வேறு ஆளுமைகளையும், பண்புகளையும் வளர்க்கவும் உந்துசக்தியாக அமையும். இன்று புலம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழும் இந்து அன்னையின் புதல்வர்களைப் பாடசாலையுடன் இணைக்கும் பாலமாகவும் இச் சஞ்சிகை விளங்கும்.

சஞ்சிகை ஆக்கமுயற்சியில் ஈடுபடும் அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டுவதுடன், கல்லூரி மேலும் வளர்ச்சியடைய இறையருளைப் பிரார்த்திக்கின்றேன். "வித்தியா" சஞ்சிகை வருடந்தோறும் வெளிவந்து கல்லூரியின் புகழ்பரப்ப வாழ்த்துகின்றேன்.



## இலண்டன் பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்கள்



**இருப்பவர் (இ. வ)** திருமதி I. லோகநாதன், திரு. K. நித்தியானந்தன், திரு. V. பெரியதம்பி, திரு. M.T. செல்வராஜா, திரு. S. சத்தியானந்தன், திருமதி C. கணேசலிங்கம்

**நிற்பவர்கள் (இ.வ) :** திரு. C. பேரானந்தன், திரு. A. பத்மநாதன், திரு. T. தவதேவா, திரு. K. விவேகானந்தன், திரு. K.T. நாதன், திரு. A. ஸ்ரீரங்கநாதன், திரு. S. சிவலிங்கம்

**சமூகமளிக்காதோர்:** திருமதி J. சத்தியானந்தன், திரு. V. ஆறுமுகதாஸ், திரு. T. ஜீவரட்ணம், திரு. V. கிருஷ்ணகுமார்

## கனடா பழைய மாணவர் சங்க நிர்வாக உறுப்பினர்



**இருப்பவர்கள் (இ.வ) :** திருமதி S. பாக்கியராஜ், திரு. T. வரதராஜன், திரு. S. கனகசபை, திரு. T. விக்கினேஸ்வரராஜா, திரு. S. சிவகுமார், திரு. R. தங்கராஜா.

**நிற்பவர்கள் இ.வ:** திருமதி S. கனகசபை, திரு. S. இந்திரன், திரு. T. பாலச்சந்திரன், திரு. K. சரவணபவன், திரு. S. மகாலிங்கம், திரு. T. செல்வன், திருமதி K. சொக்கலிங்கம்.

**சமூகமளிக்காதோர்:** திரு. P. நரேஸ், திரு. K.S. நாதன்

# நாவலர் பெருமானுடன் இணைந்து சமயப் பணியாற்றிய காசிவாசி

திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்,
முன்னாள் அதிபர்,
இராமநாதன் கல்லூரி,
சுன்னாகம்.

பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் யாழ்ப்பாணத்தில் பல தமிழ் அறிஞர்கள், கவிராயர்கள், புலவர்கள் தோன்றி நம் மொழியைப் பேணி வளர்த்ததோடு பாரத நாடு சென்று தங்கள் பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு பெருமை தேடிக்கொண்டனர். அவர்கள் திரிகரண சுத்தியுடன் தமிழ், சமயம் வளர்க்க அரும்பாடுபட்டனர். இன்று நமக்குக் கிடைக்கின்ற நவீன தொழில்நுட்ப வசதிகள் இல்லாத ஒரு காலகட்டத்தில் கடின உழைப்பை மேற்கொண்டு, தமக்கு மாறாக உள்ளவர்களை வாதில்வென்று, கண்டனம் செய்யவேண்டிய சந்தர்ப்பத்தில் கண்டனம் செய்து குற்றம் கண்ட இடத்தில் அஞ்சாது எடுத்தியம்பிப், குற்றம் குற்றமே என வாதாடிப் பணிபுரிந்து புகழ்பெற்றனர். நாவலர் பெருமான் தன்னிகரற்ற தலைவனாக விளங்கியதோடு ஒரு சிஷய பரம்பரையையும் உருவாக்கிய பெருமைக்குரியவர். நாவலர் பெருமானுக்கு அடுத்ததாக சமயம் வளர்த்த சான்றோர் வரிசையில் முதலிடம் பெறுபவர் காசிவாசி செந்திநாத ஐயர் அவர்கள் ஆவர்.

யாழ்ப்பாணத்தில் சைவப்பற்றும், சமய வாழ்வும் சமய கலாசாரப் பண்புகளைப் பேணி வாழும் மக்கள் வாழ்கின்ற கிராமங்கள் பல. சுன்னாகத்தை அடுத்து ஏழாலை குப்பிளான் ஆகிய கிராமங்கள் சகல சிறப்புகளுடன் விளக்குகின்றன. மிக இறுக்கமான சமயப் பற்றுக் காரணமாக அங்கு புற சமயத்தவர்கள் சுலபமாக நுழையமுடியவில்லை. அந்நியர் ஆட்சிக்காலத்தில் கிணற்றடிகளிலும், வளவுகளின் மூலைகளிலும் சமையலறைகளிலும் மறைமுகமாக நடைபெற்ற வழிபாடு, நாவலருக்குப் பின் எல்லா இடங்களிலும் பரவலாக, மக்கள் கூடி ஆலயங்களிலும் பொது இடங்களிலும் நடைபெறத் தொடங்கியது. இதற்கு வித்திட்டவர் நாவலர் அவர்கள். நாவலரோடு உடன் இருந்தும் பின் தொடர்ந்தும் உத்தம சிஷ்யனாக விளங்கிய காசிவாசி செந்திநாத ஐயர் ஆற்றிய சமயப் பணி நாவலரைப் பெரிதும் கவர்ந்தது. காசிவாசியின் குடும்பப் பின்னணி அதாவது தாய் மாமன் புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த கதிர்காம ஐயர் தாய்மொழி அறிவும் பற்றும் வடமொழிப் புலமை என்பன காசிவாசியை அறிஞனாக்க உதவின. யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி நாவலருடன் அதிக தொடர்புடையது. பீற்றர் பேர்சிவல் காலத்தில் நாவலர் பெருமான் அங்கு மேல் வகுப்புகளுக்கு தமிழும் கீழ் வகுப்புகளுக்கு ஆங்கிலம் கற்பித்தார். காசிவாசியும் ஆங்கில அறிவு மிக்க நல்லாசிரியர்களிடம் யாழ் மத்திய கல்லூயில் பத்து ஆண்டுகள் வரை ஆங்கிலம் கற்று மும்மொழி வல்லுநரானார். நாவலரும் காசிவாசியும் பெரியபுராணத்தில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர். செந்திநாத ஐயரின் அறிவாற்றலைக் கண்ணுற்ற நாவலர் பெருமான் அவரைத் தனது சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராக நியமித்தார். காசிவாசியும் நன்கு கடமையாற்றி நாவலரின் நன்மதிப்பைப் பெற்று மகிழ்ந்தார் என்றால் மிகையில்லை.

ஐயர் அவர்கள் நாவலர் பெருமான் என்னென்ன முறைகளைக் கையாண்டு சமயத்தை வளர்த்தாரோ அதே பாதையில் அவரின் வலக்கரமாக விளங்கிப் பணியாற்றினார். நாவலர்வர்கள் எங்கள் சமயத்தை யாராவது தாக்கிப் பேசினால் மனம் பொறுக்க மாட்டாதவராக, சொற்பொழிவு, கண்டனம், கட்டுரைகள், விவாதம் ஆகியன மூலம் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார்கள். இதே முறைகளைப் பயன்படுத்தி ஐயர் அவர்களும் இலங்கை நேசன் பத்திரிகை மூலம் தனது கொள்கையை வெளியிட்டார்கள். அவருடைய கட்டுரைகளையும் கண்டனங்களையும் பெரியவர்கள் மிக விரும்பிப் படித்தார்கள் என்றால் மிகையில்லை. புறச் சமயத்தவர்களின் பிரசாரத்தையும் கண்டனங்களையும் எதிர்த்து வாதம் சுய்ய வல்லவர் ஐயர் அவர்களே! என நாவலர் அவர்கள் கருதி அப்பாரிய பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார்கள் நாவலரவர்கள் இட்ட பணியை விரும்பி ஏற்ற ஐயரவர்கள் புறச் சமயப் பெரியவர்களை தன்னுடன் சமய வாதஞ் செய்ய வருமாறு இலங்கை நேசன் பத்திரிகை மூலம் தெரிவித்த போதிலும் புற சமயத்தவர்கள் எவரும் முன்வரவில்லை என்பதிலிருந்து ஐயரவர்களின் ஆற்றல், அறிவு புலனாகிறது. மேலும் தனது வாதஞ் செய்ய தோற்க நேரிட்டால் தானும் தன் மாணாக்கர்களும் புற மதத்தில் சேர்ந்து அவர்களின் மதப் பிரசாரஞ் செய்வதாகவும் தெரிவித்தார்.

நாவலரவர்கள் சமய சொற்பொழிவாற்றச் செல்லுமிடங்களெல்லாம், ஐயர் அவர்கள் நாவலர் பெருமானை நிழல்போலத் தொடர்ந்து சென்று ஆழமான சமய அறிவும் திருமுறைகளை பண்ணோடு பாடும் பயிற்சியும் பெற்றிருந்தார். நாவலர் அவர்களும் தீருமுறைகளைப் பண்ணுடன் பாடுவதுதான் ஏற்றது என்று ஆணித்தரமாக வலியுறுத்தி வந்தார். அக்காலத்தில் பண்ணிசையில் புகழ் பெற்ற விளங்கிய தமிழ்நாட்டைச் சேர்ந்த சுப்பிரமணிய ஓதுவார் அவர்களையும் அவர் குழுவினரையும் இங்கு அழைத்து சகல வசதிகளையும் ஏற்படுத்தி இங்கு பணிசெய்ய அரும் சேவையாற்றினார். சுப்பிரமணிய ஓதுவாரவர்கள் பண்ணுக்கேற்ப சாரங்கி வாத்தியமும் மீட்கவல்லவர். அவருடைய மைந்தர் பொன்னோதுவாரும் பண்ணிசையில் மிக வல்லவர். செந்திநாத ஐயரவர்கள் இவ் ஓதுவார் மூர்த்திகளிடம் பண்ணிசைப் பயிற்சியும், சாரங்கி வாத்தியப் பயிற்சியும் நன்று கற்கும் பேறு பெற்றார். நாவலரவர்கள் சிவபூசை செய்யும் பொழுது உடனிருந்து திருமுறை ஓதும் பெருமை பெற்றவர் ஐயரவர்கள். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் சாரங்கி வாத்திய மகிமையை நன்கறிந்து திருமுறை ஓதும் போது சாரங்கி வாத்தியம் மீட்கப்பட வேண்டும் என்பதை நன்கு வலியுறுத்தினார்கள்.

இந்திய யாத்திரையை மேற்கொண்ட ஐயர் அவர்கள் பல தலங்களுக்கும் சென்று வழிபாடு செய்து, சைவசித்தாந்தம் பற்றி பிரசங்கமும் செய்து யாழ்ப்பாண மக்களுக்குப் பெரும் புகழீட்டினார். ஐயரவர்கள் விரும்பியவாறு நாவலரவர்கள் ஒரு நற்சாட்சிப் பத்திரம் வரைந்து அனுப்பினார். ஆதற்கு நன்றி தெரிவித்து ஒரு கடிதம் வரைந்து அப்பொழுது தென்னிந்தாவில் தலயாத்திரை செய்த சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரிடம் கொடுத்து நாவலர் பெருமானிடம் சேர்ப்பிக்குமாறு கூறினார்கள். ஆனால் துரதிஷ்டம் காரணமாக கடிதம் கிடைக்கு முன் நாவலரவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள்.

ஐயர் அவர்கள் நாவலர் பெருமான் மறைந்த செய்தி அறிந்து மனஞ்சோர், கண்ணீர் சொரிய, பாடிய பாடல்கள் ஐயர் அவர்கள் நாவலர் மீது கொண்ட அன்பைக் காட்டுகிறது.

சுன்னைக் குமார சுவாமியிடந் தோர்கடிதம்
உன்னைக் குறித்தனுப்பி புள்ளுவந்தேன் - அன்னதுன்பாற்
சேருமுன்னம் நாவலனே சென்றாய் சிவலோகம்
யாரும் பதைபதைக்க விங்கு.

நாவலர் அவர்களுடன் நெருங்கிய தொடர்புகொண்டு அவர் பணியை கடமையுணர்வோடு மேற்கொண்டு சைவசமயத்தைப் புற சமயங்களின் தாக்கத்தின் நின்று காப்பாற்றி அதனை நாவலர் பெருமான் வழிநின்று வளர்த்த காசிவாசிக்கு நாவலர் பெருமான் பிரிவு மிகவும் ஆற்றொணாத் துன்பத்தை ஏற்படுத்தியது.

தேவாரம் யான் சொலக் கேட்டு
மகிழ்ந்து சிரத்தையுடன்
பூவாதி கொண்டு புரிசிவ
பூசைப் பொலிவழகும்
பாவாணர் மெச்சப் செயும்பிர
சங்கமமும் பார்த்தினியான்
நாவார வாழ்த்திடு நாளுமுண்
டோநல்லை நாவலனே

என்ற மேற்கூறிய பாடல் கல்நெஞ்சையும் உருக்கும் தன்மை வாய்ந்ததன்றோ. கந்தபுராண படலம் யாழ்ப்பாணத்திலே உச்சக் கட்டத்தை அடைந்திருந்தது. யாழ்ப்பாணத்தில் உள்ள கோயில்கள், மடங்கள் எங்கும் கந்தபுராண படனம் ஒழுங்காக நடைபெற்றது. நாம் பெருமைப்பட வேண்டிய விடயமாகும். நாவலர் அவர்களின் மருகரும் மாணாக்கருமாகிய வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை புராணத்துக்கு உரைசெய்த பொழுது பாரத நாட்டைச் சேர்ந்த வன்தொண்டர் செட்டியர் அவர்கள் வண்ணை சிவன் கோயிலிலே அவரை கட்டித்தழுவிக் கண்ணீர் சொரிந்த காட்சி அக்காலப் புராணபடலச் சிறப்பை எழுத்துக்காட்டுகிறது. கந்தபுராணத்தில் ஊறித் திளைத்த ஐயர் அவர்கள் "கந்தபுராண நவநீதம;" என்னும் நூலை சேர் அருணாசலம் அவர்களின் விருப்பப் பிரகாரம் எழுதினார்.

நாவலர் பெருமான் வழிநின்று திருச்செந்தூரிலே 1902 ம் ஆண்டில் வைதிக சுத்தாத்துயித சைவசித்தாந்த வித்தியாசாலையை நிறுவி தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், சைவசித்தாந்தம் ஆகிய நெறிகளைக் கற்பித்தார்கள். மேலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நாவலர் பெருமான் வித்தியானுபாலன யந்திரசாலையையும், சுவாமிநாத பண்டிதர் சைவ வித்தியானுபாலன் யந்திரசாலையையும் அமைத்தது போல ஐயர் அவர்களும் தேவகோட்டைப் பெரும் புரவலர்களாகிய சோமசுந்தர செட்டியர், இராமநாதன் செட்டியர், என்பவர்கள் உபகரித்த பொருளுதவியுடன் செந்திநாதைய சுவாமி யந்திரசாலை என்ற யந்திரசாலையை தாபித்து தமிழ், சைவப் பணியாற்றினார்கள்.

நாவலர் பெருமான் எதற்கும் அஞ்சாது தனது கருத்தை எந்த சபையிலும் ஆணித்தரமாகக் கூறும் ஆற்றலுடையவர். அவர் காலத்தில் வாழ்ந்த தமிழ், சைவ அறிஞர்கள் புகழ் விரும்பாது, பலன் கருதாது, பட்டங்கள் பாராட்டுக்களை எதிர்பாராது பணியாற்றினார்கள். இன்று சமயப் பணியாற்றுபவர்கள் அவர்களைப்

பின்பற்றி வாழ்ந்தால் நாடு நலம்பெறும் என்பது திண்ணம். திருமுறைகளை மட்டும் அருட்பா எனக் கூறவேண்டும் என்ற கொள்கையுடைய நாவலர் பெருமான். அருட்பா மருட்பா வழக்கு சென்னையில் நடைபெற்ற பொழுது சகல விடயங்களையும் ஆராய்ந்து சாட்சி சொல்லி உதவி புரிந்தவர் செந்திநாதையர் அவர்களே சைவசித்தாந்தம் பற்றி ஆழமான அறிவும், ஆராய்ச்சியும் ஐயர் அவர்கள் பல நூல்களை எழுத உதவின. ஐயர் அவர்கள் எழுதிய நூல்களில் 'தேவாரம் வேதாசாரம்' என்ற ஆராய்ச்சி நூல் எல்லோரது பாராட்டையும் பெற்றது. இந் நூலைக் கற்று அதன் சிறப்பை திருமங்கலக் குடிசூரியனார் கோயிலாதீன ஸ்ரீல ஸ்ரீ முத்துக்குமார தேசிகரவர்கள் பாராட்டி சிறப்புப்பாயிரமும் வழங்கியுள்ளார். புனித கங்கைக் கரையிலே காசியிலே பத்து வருடங்கள் வாழ்ந்து ஆத்மீகத் துறையில் அதிக அனுபவம் பெற்று காசிவாசி செந்திநாத ஐயர் என அழைக்கப்பெற்றார். நாவலர் என்றால் ஆறுமுக நாவலர் எனவும் காசிவாசி என்றால் செந்திநாத ஐயர் எனவும் தமிழ் சைவ உலகம் பெருமையுடன் நினைவுகூறுவோமாக.

# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் கல்விப் பணிகள்

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
அதிபர்,
கோப்பாய் ஆசிரியர்பயிற்சிக்கலாசாலை.

யாழ்ப்பாணத்து நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் கி.பி 1822 – 1879 காலகட்டத்தில் வாழ்ந்தவராவார். ஆங்கிலேயர் ஆட்சியின் போது நிகழ்த்தப்பட்ட கலாசார ஊடுருவல்களுக்கு எதிராகத் தன்னந்தனியாளாகக் கிளர்ந்தெழுந்தவர். ஏகாதிபததியவாதிகள் சைவசமயத்தைப் புறக்கணித்ததுடன் கிறிஸ்தவ சமயத்தில் சேருபவர்களுக்கு ஊக்கமளிக்கும் பொருட்டுப் பல்வேறு சலுகைகளையும் வழங்கியிருந்தனர். மதமாற்றம் ஊக்கப்படுத்தப்பட்டது. யாழ்ப்பாண மக்கள் பேசும் மொழியாகிய தமிழ் கவனிப்பாரற்றுக் கிடக்கும் நிலை ஏற்பட்டது. ஏனெனில் ஆங்கிலம் கற்றவர்களுக்கே தொழில்வாய்ப்புக்கள் கிடைத்தன. இடைநிலைக் கல்வி, உயர்கல்வி ஆகியன பெரிதும் ஆங்கில மொழியிலேயே வழங்கப்பட்டன.

இந்நிலையில் இலங்கையின் வடபகுதி மக்களின் குறிப்பாக யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களின் மொழியையும் சமயத்தையும் காப்பாற்றுவதற்காகவும், அந்நியரின் சூழ்ச்சிகளிலும் சலுகைகளிலும் மயங்கி நிலை பிறழும் மக்களைத் தடுத்து உரிமையை உணர வைப்பதற்காகவுமே 'நாவலர்' தனது போராட்டத்தினை ஆரம்பித்தார். இந்தப் போராட்டமானது இந்தியர்களுககெதிரானது. தமது சொந்த நாட்டு மக்களின் பண்பாட்டைப் பேணுவதை வலியுறுத்தி நிற்பது. தமது முயற்சிகளில் பரவலான வெகுசன அபிப்பிராயங்களைத் தோற்றுவித்து, நிறுவனமயமாக்கலில் ஈடுபடச் செய்வது. ஆதலால் இதனை ஒரு முதன்மையான தேசியப் போராட்டம் என அழைக்கமுடியும். ஆறுமுக நாவலரின் தேசிய நோக்கினைப் பற்றி பேராசிரியர் க. கைலாசபதி பின்வருமாறு எடுத்துக்காட்டுவது குறிப்பிடத்தக்கது.

'வட இலங்கையிலே, வைதீக சமயப் பாதுகாவலராக வாழ்க்கையை ஆரம்பித்த நாவலர், படிப்படியாகப் பரிணமித்து, 'மதுவிலக்கு' பற்றிய கூற்றிலே 'இலங்கைச் சனங்கள்' என்று தேசம் முழுவதையும் மனங்கொண்டு பேசுவதைக் கேட்கின்றோம். இதுவே தேசியத்தின் பரிணாம வளர்ச்சியுமாகும். இதன் வெளிப்பாட்டை 'விவசாயம்' பற்றிய பிறிதொரு குறிப்பிலும் காணலாம். இதிலும் 'இலங்கை வாசிகள்' என்று தேசிய அடிப்படையில் அவர் எழுதியிருப்பது நோக்கத்தக்கது. சமய வாதியாயத் தொடங்கித் தேசிய வாதியாய் முகிழ்ந்த நாவலர் வாய்ச்சொல் வீரர் அல்லர். செயல் வீரரும் ஆவார். 1877 இல் பஞ்சம் ஏற்பட்ட பொழுது தர்ம சிந்தையுடன் கஞ்சித்தொட்டி உண்டாக்கியதோடு அமையாது, 'யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு வர்த்தக வேளாண் சங்கம்' என ஒரு நிறுவனத்தையும் தொடங்குவதற்கு முன்னின்றுழைத்தார். இவ்வாறே கந்தளாய் நிலத்திருத்தத் திட்டத்திலும் அதிக அக்கறை கொண்டிருந்தார். இவை யாவும் நாவலரது கண்ணோட்டமும் காட்சியும் அக்கறைகளும் அகன்று கொண்டே சென்றமையை எமக்குக் காட்டுகின்றன. இது தேசியத்தின் விரிவு என்று கூறலாம்.

நாவலர் வாழ்ந்த காலகட்டத்தில் தமிழ் இலக்கிய இலக்கண மரபைப் பொறுத்தவரையில் ஈழத்துத் தமிழர்களுக்குப் பல வழிகளிலும் வழிகாட்டுவதாகத் தமிழகம் விளங்கியது. இருப்பினும் ஆறுமுக நாவலரோ, ஈழத்தமிழ் மரபின் அடித்தளத்தில் நின்று தமிழகத்திற்கு வழிகாட்டியாக விளங்கினார். ஈழத்தில் அந்நியருக்கெதிரான முயற்சிகளில் ஈடுபட்ட போது சமயத்தையும், மொழியையும் பிரதான கருவிகளாகக் கொண்டு அவர் செயற்பட்டார். அத்தகைய செயற்பாடுகளை அவர் தமிழ் நாட்டிலும் மேற்கொண்டார். ஆயினும் ஈழத்திற்கென ஓர் இலக்கிய மரபும், தனித்துவம் பெற்ற பாரம்பரியமும் உண்மையைக் கருத்திற்கொண்டே செயற்பட்டார். தமிழகத்தின் தமிழிலக்கிய மரபிற்குள் ஈழத்தமிழ் இலக்கியத்தைச் சங்கமிக்கவிடாது ஈழத்தின் தேசியத் தமிழிலக்கிய மரபினைத் தோற்றுவிக்கத் தொண்டாற்றினார். நாவலரது இந்த முயற்சியிலிருந்தே ஈழத்தமிழிக்கிய மரபொன்று தனியாக முகிழ்ந்ததெனலாம். இவரது போராட்டப் பணி எப்போதும் சைவம், தமிழ் என்ற குறுகிய வட்டத்துள் அடங்கியதல்ல. அவற்றினை வலுவிழந்த சூழ்நிலையில் மீளமைப்புச் செய்யவும், புதிய வலுச் சேர்க்கவும் அவர் பாடுபட்டார். அவரது விடுதலை முயற்சிகள் இலங்கை முழுவதும் அந்நியருக்கெதிராகப் பரவிய எதிர்ப்பு அலைகளுடன் சங்கமமாயின.

## ஆறுமுக நாவலரின் கல்விப் பணி

யாழ்ப்பாணப் பிரதேசத்தை நிலைக்களமாகக் கொண்டு ஆறுமுக நாவலரின் கல்விப் பணி ஆரம்பமானது. இந்தப் பணியானது சைவசமயத்தை வளர்க்கவும், நெறிபிறழ்ந்த சைவ சமயிகளைத் திருத்தவும், உதவுவதுடன் யாழ்ப்பாணத்தவர்களின் மொழியாகிய தமிழ் மொழியினூடாக இதைச் சாதிக்கக்கூடியதாகவும் இருந்தது. எனவே, சமயம், மொழி, பண்பாட்டு அடித்தளத்தில் நாவலரது கல்விச் செயற்பாடுகள் அமைந்திருந்தன. அவரது காலத்தில் மிசனறிப் பாடசாலைகளின் செல்வாக்கு யாழ்ப்பாணத்தில் மேலோங்கியிருந்தது. அங்கே கிறிஸ்தவ மதக் கல்விக்கும், ஆங்கிலமொழிக் கல்விக்கும் முதலிடம் அளிக்கப்பட்டிருந்தது. கிறிஸ்தவர்களாக மதம் மாறியவர்கள் பல்வேறு சலுகைகளைக் கல்வித் துறையில் பெற்றனர். ஆங்கிலக் கல்வியில்

இலங்கையரை ஈடுபடுத்துவதன் மூலம் அவர்களது பாரம்பரியங்களிலிருந்து விடுவிக்கலாமெனக் கோல்புறூக் ஆணைக்குழுவினரும், கிறிஸ்தவ பாதிரியாரும் நம்பினர். இலங்கையில் அந்நியரது ஆட்சிக்காலங்களில், கிறிஸ்தவ மிசனெறியாரது ஆதிக்கம் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் செறிந்திருந்தது போல ஏனைய பகுதிகளில் இருக்கவில்லை. அரசாங்க உத்தியோக வாய்ப்புக்கள் யாழ்ப்பாணத்தவரிடையே ஆங்கிலக் கல்வி வெறியை ஏற்படுத்தியது. ஆங்கிலம் தெரிந்தோருக்குச் சென்ற நூற்றாண்டில் இலங்கையில் மாத்திரமன்றி இந்தியா, பர்மா, மலாயா, சிங்கப்பூர் போன்ற இடங்களிலும் உத்தியோக வாய்ப்புக்கள் இருந்தன. ஆங்கிலக் கல்வியினால் உருவாக்கப்பட்ட இச் சூழ்நிலை பாரம்பரியக் கல்வி மரபுகளுக்குப் பாதகமாகவே இருந்தது இத்தகு சூழ்நிலை நிலவிய காலகட்டத்திலேயே நாவலரது பணி ஆரம்பமானதெனலாம். தனது பிரதேசத்து மக்கள் தம் மொழியாகிய தமிழில் கல்விபெற முடியாத சூழ்நிழலயைக் கண்டு நாவலர் மனம் வருந்தினார். தனது மக்களது சமயமானது புறக்கணிக்கப்படுவதையும், கிறிஸ்தவ பாதிரிமாராலும், பிரித்தானிய அரசினராலும் சைவசமய மக்கள் ஆசை காட்டியும், வலித்தும் கிறிஸ்தவ மதத்திற்கு இழுக்கப்படுவதையும் கண்டு எதிர்ப்புணர்வு மேலிடச் சிந்தித்துச் செயற்படத் தொடங்கினார்.

சொந்தத் தேசத்தின் ஒரு பகுதி மக்களது சமயமும், மொழியும் புறக்கணிக்கப்படுவதை அவற்றிற்கு எதிரான கலாசார ஊழுருவலைத் தடுத்து நிறுத்தக் கங்கணம் கட்டிக்கொண்டார். சைவாபிமானமும், மொழிய பிரமானமும் அவரது தேசயி உணர்வினைத் தூண்டிவிட்டன. இளைஞராகவிருந்த நாவலர் அதுவும் வெஸ்லியன் பாடசாலையில் கல்வி கற்றுக் கொண்டிருந்தவர். தனது போராட்த்தினை மெதுவாக ஆரம்பித்தார். உயர்ந்த பொருளாதார நன்மைகளைப் புறக்கணித்தும் உத்தியோகங்களிலிருந்து தமது குடும்பத்தவரிடமிருந்து எவ்வித பொருளுதவியும் பெறாமலும், அக்கால இங்லிஸ் ஆட்சிக்காலத்தில் ஆங்கி அறிவினாலும், தமிழ் அறிவினாலும் பெற்ற மேம்பாட்டினால் கிடைக்கக்கூடிய பதவிகளைப் பெறாமலும், இயல்பாவே யாபேரும் நாடுகின்ற மணவாழ்க்கையை மேற்கொள்ளாமலும் சைவசமயத்தையும் அதன் வளர்ச்சிக்குக் கருவியாகிய கல்வியையும் வளர்க்க வேண்டுமெனும் பேராசை கொண்டும் நாவலர் பெருமானம் செயற்பட்டதை அவற்றின் கூற்றின் மூலமாகவே நாம் அறிந்து கொள்ளமுடிகிறது. இத்தகைய நன்னோக்கமே நாவலரைப் பொது வாழ்வில் ஈடுபடச் செய்தது. தனது தேசம் முழுவதும் அந்நியரின் ஆக்கிரமிப்புக்கு ஆளாகி அவர்களது மொழி, சமயம், பண்பாடு முதலியன கட்டாயமாகத் தமது மக்களிடையே திணிக்கப்படுவதை நாவலர் விரும்பவில்லை. வுாழையடி வாழையெனப் பேணப்பட்டு வந்த யாழ்ப்பாண மக்களது பண்பாட்டு விழுமியங்களைக் காப்பாற்றுவதற்கும் தொன்மையான சைவசமயத்தையும் தமிழ்மொழியையும் அழிந்து போய்விடாமல் தடுப்பதற்கும் நாவலர் முனைப்புடன் செயலாற்றினார். தமிழ் நாட்டில் சமண, பௌத்த மதங்கள் ஊடுருவி நின்று சைவ வைணவ மதங்களை அமுக்க முனைந்த போது மீண்டும் இந்து சமயத்தின் மறுமலர்ச்சியை ஏற்படுத்த உழைத்தவர்களான சமய குரவர்களைப் போன்று ஈழத்தில் சைவசமய வளர்ச்சிக்காக நாவலர் பாடுபட்டாரென பேராசிரியர் சு. வித்தியானந்தன் கூறுவது மிகவும் பொருத்தமானது.

ஆறுமுக நாவலரது கல்விப் பணிகளை இவ்விடத்தில் நோக்குவோமேயானால் ஆசிரியப் பணி நூலாசிரியப் பணி, பதிப்பாசிரியப் பணி, பிரசங்க புராணபடலப் பணி, பாடசாலைகளை உருவாக்கியவர் என வகைப்படுத்த முடியும். மிகவும் வலிமைமிக்க சாம்ராச்சியத்தின் ஆளுகைக்குக் கீழ் அகப்பட்டு சுதேசிய வாழ்வியலின் பன்முகக்

கூறுகளையும் அந்நியத்துவத்தின் கீழ் மெல்ல மெல்ல இழந்து கொண்டிருந்த மக்கள் மத்தியில் தேசிய எழுச்சியையும் சுதேசியப் பற்றையும் வளர்ப்பதற்காகத் தனது வாழ்வின் இன்பங்கள் அனைத்தையும் ஒறுத்துப் பணி செய்த பெருந்தகையாளராகவே நாவலரைக் காணுகின்றோம். கிறிஸ்தவப் பாதிரிமார்களினதும் ஆங்கிலேய அரசினது எதிர்ப்புக்களிற்கும் மத்தியிலே நாவலரின் போராட்டமும் பணிகளும் நடந்தேறின. யாழ்ப்பாண மக்களும் அதிகார வர்க்கத்தினரின் ஏமாற்றுகளிலும் சலுகைகளிலும் மயக்குண்டு, தம் நிலை மறந்தவர்களாய் மாறி வந்த இக்கட்டான வேளையிலேயே நாவலர் கல்வி பயிலத் தொடங்கினார். நாவலரது கல்விச் சிந்தனைகள் பற்றி ஆர். எஸ்.நடராசா அவர்கள் 'ஆறுமுக நாவலரின் கல்விக் கருத்துக்களைத் தொகுத்து நோக்கின் கல்விக்குப் பயன் அறிவு அறிவுக்குப் பயன் ஒழுக்கமாம்' எனும் அடிப்படையில் ஒழுக்க அடிப்படையிலான உலக வாழ்வின் ஈற்றில் வீடுபேறடைதலே வாழ்வின் இலக்கெனக் கொண்டார். அன்னைமொழியே போதனா மொழியாகவும் கல்வி இயன்றவரை இலவசமாகவும் வாழக் கற்கும் கல்வியாகவும் இருக்கவேண்டும். பயன்தரும் விழுமியங்களைப் புறத்தே பெறலாமாயினும் அவை 'தேசியப் பண்பாட்டு வாழ்வுக்கு உதவுவதாயிருக்க வேண்டுமன்றி, நிலைதருமாறச் செய்வதாயிருக்கக் கூடாது' என்று எடுத்துக்காட்டியிருப்பது நாவலர் கருதிய கல்வியின் நோக்கங்களைத் தெளிவுபடுத்துவதாகம்.

## நாவலரது பாடசாலைகள் அமைத்த பணி

1848 இல் ஆவணி 5 இல் வண்ணார் பண்ணையிலும் 1864 இல் அக்டோபர் 28 இல் சிதம்பரத்திலும் 1872 இல் கோப்பாயிலும் புலோலியிலும் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலைகள் நிறுவினார். 1842 இல் வண்ணார்பண்ணையை மையமாகக் கொண்டு வைத்திலிங்கச் செட்டியார் முத்துவேலுச் செட்டியார் சிறாப்பர் குருநாத முதலியார் ரகுநாத முதலியார் போன்ற உயர் குழாத்தினர் இணைந்து பாடசாலையொன்றை நிறுவினர். ஆகவே ஆகமங்கள், சாத்திரங்கள் போதிக்கத் தகுந்த ஆசிரியர்கள் இன்மையால் அப் பாடசாலையானது தமிழ் பாடசாலையாகவே இயங்கியது. ஆனாலும் நாவலர் 1848 இல் தொடக்கிவைத்த இயக்க ரீதியான சைவப் பாடசாலைகளை நிறுவும் முறைமையின் கீழ் பல தனிப்பட்டவரும் அக்கறை எடுத்தனர். வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையில் நாவலரது மாணாக்கர் பலரும் வேதனமின்றிக் கற்பித்து வந்தனர். மாணவர்களுக்கு இலவச உணவளிப்பதிலும் இலவசக் கல்வியளிப்பதிலும் பாடசாலைகளில் முயற்சி மேற்கொள்ளப்பட்டன. தரும சிந்தையுள்ள பிரபுக்களது உதவியாலும், பிடியரிசித் திட்டத்தினாலும் இப் பணிகள் ஓரளவிற்கு நிறைவேறி வந்தன.

வெஸ்லியன் ஆங்கிலப் பாடசாலையில் சைவ மாணவர்கள் அனுமதிக்கப்பட்டதன் காரணமாக 1872 இல் வண்ணார்பண்ணையில் முதன் முதலாகச் சைவ ஆங்கில பாடசாலையொன்றை ஆறுமுக நாவலர் நிறுவினார். எனினும் கிறிஸ்தவப் பாடசாலைகளைப் போன்று பொருளாதாரச் சுமைகளைத் தாங்க முடியாமையினாலும் மாணவரது வருகைக் குறைவினாலும் 1876 இல் இப் பாடசாலை மூடப்பட்டது. துர்ப்பாக்கிய சம்பவமாகும். புாடசாலைகளை நிறுவும் பணியில் பிரபுக்களையும் ஜமீன்தார்களையும் தமக்கு உதவுமாறு நாவலர் கேட்கவில்லை. நல் உள்ளம் கொண்ட சாதாரண மக்களையே உதவிக்காக நாடிநின்றார். கல்விக்கூடங்களை உருவாக்கிய நாவலரின் பணியானது காலத்தால்

அழியாதது. அவரது அடிச்சுவட்டில் இந்து-சைவ நிறுவனங்களும் தனிப்பட்ட பெரியார்களும் ஊர்கள் தோறும் சைவப் பாடசாலைகள் அமைத்துத் தொண்டு செய்தனர்.

இன்றும் அக் கலைக்கூடங்கள் ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன. ஈழத்தையும் இந்தியாவையும் ஒன்றாகக் கருதிய நாவலர் யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலும் தமது பணியினை நிறைவேற்றியிருந்தார். இருப்பினும் இலங்கையின் தேசிய கல்விக்கு வடபிரதேசத்தில் பாரிய பங்களிப்பைச் செய்த முன்னோடியாக அவர் திகழ்கிறார். கல்வியில் நவீனத்துவம் சாராத காலத்திலே தேசிய ரீதியில் சமயப் பண்பாட்டு அடித்தளத்தில் கல்வியை வளர்ப்பதற்கு அவர் ஆற்றிய பங்களிப்பானது மிகப் பெரியதாகும்.

## நாவலரின் ஆசிரியப்பணி.

நாவலரின் ஆசிரியப் பணியானது 1841ஆம் ஆண்டில் அவர் கல்வி கற்ற வெஸ்லியன் மிசன் கலலூரியிலேயே முலைவிடத் தொடங்கிற்று. பேர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளுக்கிணங்க பத்தொண்பதாம் வயதில் உயர்வகுப்புகளில் தமிழையும் கீழ்வகுப்புகளில் ஆங்கிலத்தையும் கற்பிக்கத் தொடங்கினார். பேர்சிவல் பாதிரியாருக்கு தமிழ் கறபித்ததோடு பைபிள் நூலினைத் தமிழில் மொழிபெயர்ப்பவராகவும் பணியாற்றினார். தம்மை நாடிவந்த மாணவர்கள் பெரியோர்கள் பலருக்கும் இலவசமாகவே சமய சாஸ்திரங்கள், இலக்கண இலக்கியங்கள் போன்றவற்றை பயன்கருதாது பணியாற்றினார். எனினும் பேர்சிவலின் கிறிஸ்தவக் கல்லூரிகளில் அவருக்கு பணியாற்றுவது மனநிறைவைத் தரவில்லை. 1848 செப்டெம்பரில் பாடசாலை உத்தியோகத்தை துறந்துவிட்டு தனது முழு நேரத்தையும் சமய, சமூக இலக்கியப் பணிகளில் அர்ப்பணிக்க விருப்புக்கொண்டார். நாவலரிடம் கல்வி கற்கின்ற மாணவர் பரம்பரையினரை உருவாக்கத் தொடங்கினார். தனியொருவராக நின்று சைவத்தையும் தமிழையும் பாதுகாக்கப் புறப்பட்ட நாவலருக்குப் பக்கபலமாக ஒரு மாணவ அணியினர் சேர்ந்து கொண்டனர். மேலும் கிறிஸ்தவ சமயப் பிரச்சாரங்களுக்கெதிரான நடவடிக்கைகளிலும் இவர்கள் இணைந்ததினால் மக்கள் மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்படலாயிற்று.

நாவலரின் பணிகளில் முதன்மை பெற்று விளங்குவது சமயப்பணியான போதிலும் மக்கள் மத்தியில் சமய நம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் சைவசமய கோட்பாடுகளை விளக்கி அனுட்டிக்கச் செய்யவும் பிற சமயப் பொய்ப்பிரசாரங்களுக்குப் பணியாகத் தடுக்கவும் உதவுவதாகத் தமிழ்மொழியை ஊடகமாகக் கொண்டு கல்வியறிவை வழங்க வேண்டியிருந்தமையால் தமிழ்ப்பணியும் இன்றியமையாததாயிருந்தது. 1841ல் தொடங்கிய கல்வி கற்பித்தல் பணியானது நாவலர் இறக்கும் வரையில் நீடித்ததில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில் சுடர்விட்டு எரிகின்ற தீபமே இன்றும் ஆயிரக்கணக்கான விளக்குகளுக்கு ஒளியேற்ற முடியும் எனலாம்.

நாவலரின் பணிகளில் மிக முக்கியமானது நூலாசிரியர் பணியாகும். மாணவர்களுக்கு கற்பிப்பதற்குத் தகுதியானதும் எளிமையானதுமான நூல்களின்மையால் ஏற்பட்ட கஷ்டத்தை உணர்ந்தே செயற்பட்டார். பல்வேறு ஏடுகளையும் நூல்களையும் பரிசோதித்து புதிதாக பதிப்பித்த நூல்கள் ஏறத்தாழ 81

எனக் கூறப்படுகிறது. மேலும் பாடப்பிரதிபேதம் பணியில் நாவலரது திறமை வியக்கத்தக்கது.

நாவலர் அவர்கள் தமிழ்மொழியில் புதிய மாற்றமொன்றினை உரைநடை மொழியாக ஏற்படுத்தித் தந்தமை பாரிய பணியாகும். இதுவரை காலமுமிருந்த உரைநடையின் இயல்புகளிலிருந்து மாறுபட்டு திருத்தமான முறையில் கட்டுரை எழுதிய முன்னோடி நாவலரேயாவார். தமிழுரைநடையின் தந்தை 'வசனநடை கைவந்த வல்லாளர்' என இவரைப் போற்றியுள்ளனர் நோக்கப்பாலது. வாக்கியங்களில் குறியீடுகளைப் புகுத்தி பெருமளவு இயற்சொற்களுடனே சிறுபான்மை திரிசொற்களையும் வடசொற்களையும் விரவி சூழ்நிலைகளுக்கு ஏற்றாற்போல் சிறிதாகவும் பெரிதாகவும் வாக்கியங்களை அமைத்து எளிமை நிரம்பியதாக உரைநடை செய்தவர் ஆறுமுக நாவலரேயாவார்.

நாவலரது சைவப்பிரசங்கங்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன. விழிப்புணர்வை ஏற்படுத்தின. மக்களின் தேசிய ஐக்கியத்திற்கு வழிசெய்தன. தவறவிட்ட சைவ கிரியைகளையும் வழிபாட்டு முறைகளையும் பேணச்செய்தன. இவற்றின் மூலமாக தமிழர்களுக்கு உரித்தான கலாசாரத்தைப் பின்பற்ற ஊக்கம் தந்தன. யாழ்ப்பாணத்தில் 'கந்தபுராண கலாச்சார மரபு' இன்றுவரை வளர்ச்சிபெற்று வந்ததுடன் கல்வித்துறையில் சைவத்தமிழர்களை ஒன்றுபடுத்தவும் தேசியரீதியான கல்வி வளர்ச்சியில் அவர்களது சமயக கோட்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் வாழ்விக்கவும் துணையாயிருந்தது என்பதில் ஐயமில்லை.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் ஆறாத் தொடர்புடன் முன்னெடுத்துச் சென்ற மாணவர் பரம்பரையினர் ஈழத்தில் காணப்படுகின்றனர். இத்தகைய நாவலர் பரம்பரையினர் ஆற்றிய சமய மொழி ரீதியிலான பணிகள் யாழ்ப்பாணத்தின் பண்பாட்டைப் பேணி நிலைநிறுத்திக் கொள்வதற்கு வழிவகுத்தன. இலங்கையின் தேசியக் கல்வி மரபிற்கு சமய மொழி அடித்தளத்தில் நின்று பணிசெய்து அவற்றைப் பாதுகாத்துக் கொடுத்த வகையில் நாவலர் பரம்பரையினர் சிறப்பிடம் பெறுகிறார்கள். ஏனெனில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ மதப் பண்பாடுகளையும் சிங்கள, தமிழ் ஆங்கில மொழிப் பண்பாடுகளையும் உள்ளடக்கியதாகவே இலங்கைத் தேசியக் கல்வி முறை விளங்கியது. அவற்றில் குறிப்பிடத்தக்கது தமிழ் மொழியினதும் சைவ சமயத்தினதும் பண்பாட்டு வளர்ச்சியில் நாவலரும், இவரது பரம்பரையினரும் செலுத்திய காத்திரமான பங்களிப்பு எனலாம். எனவே, இலங்கையில் நாவலரின் கல்விப் பணியானது தேசியத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் உதவியுள்ளமை கண்கூடாகும்.

# பாடறிந்து ஒழுகும் பண்பு

மனம் உடையவன் மனிதன். ஆறறிவு படைத்த மனிதனுக்கு தான் மனமும் இருக்கின்றது. இது ஒரு பொறி இல்லாத ஒரு புலன். ஆயினும் ஐம்பொறிகளுக்கு இல்லாத, ஐம்புலன்களுக்கு இல்லாத ஆற்றல் கொண்டது அது. இந்த ஆற்றலை வைத்துத் தான் "மனோவேகம்" என்ற அழகு உண்டானது. மனது மனிதனை வழி நடத்துகிறது. அது மனிதனை உயர் நிலைக்கும் கொண்டு செல்லலாம். நடு நிலைக்கும் வைத்திருக்கலாம். கீழ் நிலைக்கும் தள்ளிவிடலாம். இந்த நிலையற்ற தன்மையினால் மனதை குரங்கு என்று சொல்வார்கள். இந்த நிலையற்ற தன்மையில் இல்லாமல் நிலையான ஒரு நல்ல வழியில் அதனை இட்டுச் செல்வதற்குத் தான் நமக்கு கல்வி அறிவும் கேள்வி அறிவும் நல்லோர் இணக்கமும் என்று எல்லாம் தரப்பெறுகின்றன. அப்போது தான் நாம் வையத்துள் வாழ்வாங்கு வாழ மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ள முடியும். அவ்விதமான வாழ்வு தான் பாடறிந்து ஒழுகும் பண்பாட்டு வாழ்க்கையாகும்.

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும்

கல்லார் அறிவிலாதார்"

என்று வள்ளுவர் பாடறிந்து ஒழுகும் பண்பாட்டினைப் பற்றி குறிப்பிடுதல் நோக்கற்பாலது.

பண்டைத் தமிழர் உலக உயிர்களை 'உயர்திணை', 'அஃறிணை' என இரு பிரிவுகளாகப் பிரித்தனர். 'திணை' என்பது ஒழுக்கம். பகுத்தறிவின் துணை கொண்டு நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து தீமையை நீக்கி நன்மையை ஏற்று வாழும் மக்களை "உயர்திணை" என்றும், இத்தகைய உயர்ந்த ஒழுக்கமும் அதற்குக் காரணமாகிய பகுத்தறிவும் பெறாத உயிர்களையும் உயிரற்ற பொருட்களையும் "அஃறிணை" என்றும் பகுத்தனர்.

நல்லொழுக்கம் என்றும் நன்மையே பயக்க; தீயொழுக்கம் என்றும் தீமையே பயக்கும். ஒழுக்கம் உடையவர்களையே உயர்குடிப்பிறப்பாக கருதுவார்கள். ஒழுக்கம் இல்லாதவன் இழிந்த பிறப்பினர்கள் ஆவார்கள். எனவே மக்கட் பிறவியின் ஏற்றத்திற்கு ஒழுக்கமே காரணமாகும். அரம் போலும் கூர்மையான அறிவுடையவராயினும் ஒழுக்க நெறியில் வாழாவிட்டால் அவர்கள் மரத்திற் ஒப்பாவர். சான்றோர் வாழும் ஒழுக்க நெறியை ஒட்டி வாழத் தெரியாதவர்கள் தீயநெறி ஒழுகுவோரை எங்ஙனம் அறிவுள்ள மக்கள் இனத்தில் சேர்ப்பது.

உழவன் எதை விதைக்கிறானோ அதையே அறுவடை செய்வான். தினையை விதைத்து வந்தால் பின்னால் அதிகமாக விளைந்து வந்திருக்கும். நெல் விதைத்து வந்திருந்தால் அதிக நெல்லை

அறுவடை செய்வான். அதைப் போல மனிதன் பிறருக்கு சில தீமைகளைச் செய்தால், அதனால் பல தீமைகளை அடைவான். ''தினை விதைத்தவன் தினை அறுப்பான்; வினை விதைத்தவன் வினை அறுப்பான்'' என்ற பழமொழி மேற்கூறிய கருத்தை விளக்குகின்றது.

தீவினை செய்தோர் தீவினையை அடைந்தே தீரவேண்டும். ஆதலால் தீவினையியற்றல் பகுத்தறிவுக்கு ஒவ்வாததாயிருந்தாலும் அது பின்னால் பயக்கும் பெருந் தீவினைக்கு அஞ்சியாவது தீவினை இயற்றாது இருத்தல் வேண்டும் என்ற கருத்தில் தீவினை அச்சம் என்ற அதிகாரத்தில் திருக்குறள் போன்ற அறநூல்கள் தீவினைகளின் கொடுமைகளை உணர்த்துகின்றன.

தீயானது தொட்டால் தான் சுடும்; விட்டுவிலகினால் சுடாது. சுட்ட புண்ணிருப்பினும் நாளடைவில் ஆறிவிடும். ஆனால் ஒருவன் ஒரு தீவினையைச் செய்து விட்டு விட்டு; இனித் தீவினை செய்வதில்லை என்று இருந்தாலும், ஓடி ஒளிந்தாலும் அவன் செய்த தீவினை அவனைப் பின் தொடர்ந்து சுட்டே தீரும். தீயை விடக் கொடிதாக தீவினையை அஞ்ச வேண்டும்.

தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்.

வேறு எந்த பகையிடமிருந்தும் தப்பித்துக்கொள்ளலாம். தீவினையாகிய பகையிடமிருந்து தப்பவே முடியாது. தீவினைப் பகை, நிழல் போல நீங்காமல் பின்தொடர்ந்து சென்று வருத்தியே தீரும். ஒருவன் எங்கு சென்றாலும் அவனுடைய நிழலானது அவனை விட்டு நீங்காமல் தொடர்ந்து செல்லும். மாலையில் கதிரவன் வானத்தில் சாயச் சாய நிழல் நீளமாகிக் கொண்டே செல்லும். நிழல் எவ்வளவு நீண்டு சென்றாலும் அவனுடைய அடியை விட்டகலாது. என்னே! மனிதனுக்கும் நிழலுக்கும் உள்ள தொடர்பு. அதைப் போலவே தான் மனிதனுக்கும தீவினைக்கும் உள்ள தொடர்பும் வள்ளுவன் கூற்றும் அவ்வாறே.

''தீயவை செய்தார் கெடுதல் நிழல் தன்னை
வீயா தடியுறைந்தற்று''
என்கிறார்.

இதே கருத்தை நாலடியார் முற்பிறவியில் பறவையைக் கூண்டிலடைத்து வாழ்வோர் மறுபிறவியில் பகைவரால் சிறைபிடிக்கப்பட்டு அடிமை வேலை செய்வார் என்றும் முற்பிறவியில் நண்டின் ஊனை விரும்பி அதன் கால்களை ஒடித்த கைவிரல் மறுபிறவியில் குட்டை நோயால் பீடிக்கப்பட்டு அழுகிக் குறையும் என்றும் நகையும் இழிவரலும் பொருந்த உரைக்கிறது.

மற்றும் தீவினை செய்தாரை நிழல் போல் தீவினை பின் தொடர்ந்து வருத்துதலை சில இலக்கியங்கள் மூலம் காணலாம்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் இளங்கோவடிகளால் இயற்றப்பட்டதற்கு அவரால் கூறப்படும் முப்பெரும் காரணங்களுள் "ஊழ்வினை வந்து உருத்தூட்டும்" என்பதும் ஒன்று.

கோவலன் முற்பிறவியில், குற்றமற்ற ஒரு வாணிகன் மீது "பகை நாட்டு ஒற்றன்" என்ற குற்றம் சாட்டித் தன் நாட்டு மன்னனால் கொலை செய்வித்தான். அத்தீவினையே அவனை நிழல் போல் பின் தொடர்ந்து வந்து இப்பிறவியில் 'கள்வன்' என்ற குற்றம் சாட்டிக் கொல்விக்கிறது. முற்பிறவி, மறுபிறவி நம்பிக்கை இல்லாதோர் பின்வருமாறும் கொள்ளலாம். கோவலன் கற்புக்கரசியாகிய கண்ணகியின் வாழ்வைச் சிதைத்தான். புகார் நகரில் தான் வெய்த தீவினையை உணர்ந்து வருந்தி திருந்தி அத்தீவினையினின்றும் தப்ப மதுரை சென்றான். அக்கொடுமையை கற்புக்கடம் கண்ணகி பூண்ட பொற்புடைத் தெய்வமாகிய கண்ணகி பொறுத்துக்கொண்டாலும் தீவினையானது பின் தொடர்ந்து மதுரை சென்று பொற்கொல்லன் வாய் சொல் மூலம் துன்புறுத்தின்றது. கொல்கின்றது. தீயானது தன்னைச் சார்ந்த பொருட்களை சுட்டெரிப்பது போல, தீவினையாளரைச் சார்ந்தோரையும் துன்புறுத்தும். ஆதனால் தான் குற்றமற்ற கண்ணகியும் கோவலனைச் சார்ந்த காரணத்தினால் இன்னல்களுக்கு ஆளாகிறாள்.

தருமன் செய்த இராஜ சூய யாகத்திற்கு வந்த துரியோதனனின் உள்ளம் வருந்தும் படியாக திரௌபதை சிரிக்கின்றாள். இச்சிறு தீவினையே பெரிதாய் வளர்ந்து துரியோதனன் அவையில் திரௌபதையின் துகிலை உருவுகின்றது. பாண்டவர்களின் நாட்டைக் கவர்ந்து காட்டிற்கு ஓட்டுகிறது. பாரதப் போரை மூட்டுகிறது. திரௌபதி செய்த தீவினையின் பயனை அவளும் அவளைச் சார்ந்தோரும் அனுபவித்துவிட்டார்கள். திரௌபதை செய்த சிறு குற்றத்திற்கு இவ்வறவு பெரிய ஒறுத்தலா? இவ்வளவு தீங்கிழைத்தல் துரியோதனனுக்கு அடுக்குமா? அளவுக்கு மீறி மிக அதிகமாகச் செய்துவிட்டான். அவன் செய்த தீவினையை அவன் அனுபவிக்க வேண்டாமா? அவனைச் சார்ந்தோரையும் அழித்து அவனையும் அழித்துவிடுகிறது. அனைவரும் போர்க்களத்தில் பட்டொழிகின்றனர்.

இராமன் சிறு வயதில் அம்பின்நுனியில் களிமண் உருண்டையைச் செருக்கிக் கூனியின் முதுகில் அடித்து, வருந்தி எள்ளி விளையாடினான். ஒரு நாள் அல்ல பல நாட்கள். இராமன் வளர்ந்தான். அவன் கூனியின்பால் செய்த தீவினையும் வளர்ந்து முடி சூடவிடாமல் காட்டிற்கு துரத்தியது. அவனைச்சார்ந்த காரணத்தால் அவனுடன் காட்டிற்குச் சென்று தீவினையும் அவர்களைத் தொடர்ந்து காட்டிற்குச் செல்கிறது. சீதையைப் பிரிந்து பிரிவுத்துயரால் இராமனை வதைக்கிறது. இராமனுடைய மனைவி என்ற காரணத்தால் சீதையும் அசோக வனத்தில் சிறை வைக்கப்பட்டு வதைகிறாள்.

கைகேயி கூனியின் சூழ்ச்சியால் அறிவு திரிந்து அடாத வரங்களைக் கேட்டாள். பிடிவாதமாகக் கேட்டாள். அத்தீவினை அவளையும் அவளைச் சார்ந்தோரையும் மாங்கல்யம் இழக்க வைக்கிறது. பெற்ற மகனே அவளை வெறுத்தொதுக்கும்படிச் செய்கிறது.

சூர்பனகை சீதைக்குரிய இராமனைத் தனக்கு உரியவனாக்க முயற்சிக்கிறாள். அத்தீவினை உடனே அவளுடைய மூக்கையும், முலைகளையும் அறுத்து எறிகிறது! அவளுக்கு உதவ வந்த கர தூடணர்களையும் கொல்கிறது.

இராவணன் தன்னைச் சார்ந்தோருக்குப் பெருந் தீங்கிழைத்தவர்களுக்கு தக்க பாடம் புகட்டுவதை விடுத்து பிறன் மனையாள் சீதை மேல் காமங்கொண்டு, வஞ்சனையாகக் கவர்ந்து சிறை வைத்து வருந்தித் தனக்குரிய இக்கொடுந் தீவினை அவன் பேராசை அழிக்கிறது. அவனைச் சார்ந்தோரை அழிக்கிறது. முப்பெருங் கடவுள்களையும் வெல்லும் அவனுடைய பெரும் ஆற்றலையும் அழிக்கிறது. பெருத்த வலிமையையும் அழிக்கிறது. இறுதியாக அவன் பெற்ற முக்கோடி வாழ் நாளையும் அழித்து அவனையும் அழித்துவிடுகிறது. தீயினும் கொடிய தீவினை நிழல் போல் பின் தொடர்ந்து வருத்தாமல் யாரை விட்டது? இன்னும் எத்தனையோ இலக்கியச் சான்றுகளைக் காட்டலாம். விரிப்பின் பெருகும். "நிழல் தன்னை வீயாது அடி உறைந்தற்று" என்ற குறள் உவமை எத்தனை எத்தனை இலக்கியச் சான்றுகளை விளக்கிக் காட்டுகிறது.

தீயவற்றைப் பார்க்காமல், கேட்காமல், தீயவற்றைச் சொல்லாமல், முகராமல், அனுபவிக்காமல் இருப்பதே உண்மையான அடக்கமாகும். இக்கருத்தையே நாலடியார் பாடல் கூறுகிறது.

பிறர்மறையின் கண்செவிடாய்த் திறனறிந்து
ஏதலார் இல்கண் குருடனாய்த் - தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு.

மறை - இரகசியம், மூங்கை - ஊமை, இல் - மனைவி, அதாவது பிறர் இரகசியங்களைக் கேட்பதில் செவிடனாகவும், புறங்கூறுவதில் ஊமையாகவும் ஒருவன் வாழ்ந்தால் அதுவே அவனுக்கு அறநெறி வாழ்க்கையாய் அமையும்.

ஆதலின் மனம், மொழி, மெய்களைத் தீய நெறியில் செலுத்தாமல் அடக்கி நன்னெறியில் செலுத்தி இன்பந்துய்த்து பிறர்க்கும் பணியாற்றில் பெரு வாழ்வு வாழ்ந்து அழியாப் புகழ் நிலையாம் அமர நிலை எய்துவோமாக.

திருமதி.சி.ஸ்ரீதரன்.
(B.A. Dip.in.Edu.)
தமிழ் ஆசிரியை

# மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெற்றோரின் பங்கு

ஓர் மனிதனை ஒரு முழுமையான மனிதனாக மாற்றுவது கல்வியே. அந்தக் கல்வியை ஒருவன் ஏழமையாயினும் பணக்காரனாயினும் கற்றுக்கொள்ள வேண்டும். கற்றது மட்டுமன்றி அவன் கற்ற கல்வியின் பயனே ஒழுகவேண்டும். "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பது ஔவையார் வாக்கு கல்வியின் மேன்மையையும் கல்வி கற்கவேண்டியதன் அவசியத்தையும் விபரித்து நிற்கின்றது. அந்த வகையில் ஓர் மாணவனின் கல்வி வளர்ச்சியில் பெரும் பங்கினை உடையவர்கள், ஆசிரியர், பெற்றோர், வழிகாட்டிகள் போன்றோர். அவற்றுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் பெற்றோர்களே.

அந்த வகையில் ஓர் மாணவனை சமுதாயத்திலே ஓர் உயர்ந்த நிலைக்கு கொண்டு வருவதில் பெரும் பங்கு எம் பெற்றோருக்கு உண்டு. ஓர் தாய் பத்து மாதம் வயிற்றிலே சுமந்து பெற்றெடுத்த பிள்ளையை அழிந்து போக நினைப்பாளா? இல்லை. தன் பிள்ளை எவ்வாறு வளரவேண்டும் எதிர் காலத்திலே எவ்வாறு நடக்க வேண்டும் என்ன செய்ய வேண்டும் என்பதனை திட்டமிட்டு ஆசையோடு அக்குழந்தையை வளர்க்கிறாள். இவ்வாறு தாய் மட்டுமல்ல தந்தையும் பிள்ளையின் வளர்ப்பிலும் பராமரிப்பிலும் முக்கியமானவராகக் காணப்படுகிறார். ஓர் குடும்பத்தை நிர்வகிப்பவராகவும் அக்குடும்பத்தின் தேவைகளை அறிந்து உழைத்து நிறைவேற்றுபவராகவும் காணப்படுகிறார். அந்த வகையில் மாணவரின் கல்வி வளர்ச்சியில் தந்தையும், தாயும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர். பிள்ளைகளைப் பெற்று வளர்த்து விட்டால் மட்டும் போதாது. அவர்களை நல்வழிப்படுத்த அவர்களை ஒழுக்க நெறியில் வளர்க்க, அவர்களின் ஆளுமையை விருத்தி செய்ய அவர்களைக் கல்வியில் முன்னேற்ற வேண்டும். அந்த ஓர் செயலையோ அல்லது பொருளையோ நாம் நோக்கினால் அதிலே இரண்டு பக்கங்கள் உண்டு. ஒன்று நன்மை மற்றையது தீமை. இவற்றை நாம் உணர்ந்து அவற்றுக்கு இசைந்து ஏற்றவாறு நடப்பதற்கு எமக்கு கல்வி அறிவு முக்கியம். அந்த வகையில் ஓர் மாணவனை உயர்த்துவது கல்வியே. அந்தக் கல்வியில் பெற்றோர் மிகவும் பங்காற்ற வேண்டும். பிள்ளைகளை தைரியப்படுத்தி நற் குணங்களைச் சொல்லிக் கொடுத்து அவர்களை சிறுபிள்ளைப் பருவத்திலிருந்தே நல்ல அறங்களைக் கற்பிக்கவேண்டும். வீட்டிலே அவர்களை தங்கள் முன் மாதிரியான வாழ்க்கையினால், எடுத்துக்காட்டான செயல்களினால் வழிப்படுத்த வேண்டும். பணம் இருக்கின்றது. வசதியான வாழ்க்கை இருக்கின்றது என்று அவர்களை கல்வி கற்க விடாது அவர்களை ஆடம்பர உலகிற்கு அறிமுகப்படுத்திக் கொள்ளக்கூடாது. எவ்வளவு பணம் செல்வம் இருந்த போதும் ஒருவனுக்கு கல்வி அறிவு இல்லாவிட்டால் அவன் தனது வாழ்க்கையில் முக்கால் வாசிக் கட்டத்தை இழந்தவனாக காணப்படுகின்றான்.

இதற்கு பெற்றோர் மாணவரின் கல்வி வளர்ச்சியில் முதுகெலும்பாக இருக்கின்றனர். பிள்ளை பாடசாலை செல்கிறான் தானே அங்கு ஆசிரியர் கல்வி போதிப்பார் தானே ஏன் நாம் வீணாக கஸ்ரப்படுவான் பிள்ளை அங்கு படித்தால் மட்டும் போதும் என்ற சோம்பற் குணத்தில் அங்கு இருந்துவிடக்கூடாது. அவர்களை அவர்களின் பிரச்சினைகளை இயலாமையை அறிந்து அவற்றுக்கு ஏற்ற நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டும். "கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் மதிப்புண்டு" என்று கூறுவார்கள். ஏனென்றால் கல்வி கற்றவன் மற்றவரைப் பார்த்து பயந்து ஒதுங்கி ஒழிந்து ஓடமாட்டான். மாறாக முன்னின்று துணிவாகப் பேசக்கூடிய ஆற்றலும் திறமையும் அவனிடம் உ ண்டு. ஆகவே இவ்வாறு ஒவ்வொரு மாணவனையும் கற்றவனாக்குவதற்கு அவன் கற்றதன் படி ஒழுகுவதற்கு பெற்றோர் தான் ஊக்கமளித்து உற்சாகப்படுத்த வேண்டும். பிள்ளைகளின் மனங்களை நோகடிக்கச் செய்யாது தாழ்ந்து போகச் செய்யாது மாறாக ஆறுதல்படுத்தி அறிவுரை கூறவேண்டும். அப்போது தான் பிள்ளைக்கு என் பெற்றோர் நான் படிப்பதற்காக என்னை படிக்க வைப்பதற்காக எவ்வளவு துன்பப்படுகின்றனர், தங்கள் வேதனையை கஸ்ரத்தை துன்பங்களை மறைத்து என் கஸ்ரங்களுக்கு ஆறுதல் தருகின்றனரே அதற்காகவாவது நான் கல்வி கற்று அவர்கள் விரும்பும் ஓர் நற்பிரஜையாகி அவர்களை மகிழ்ச்சிப்படுத்த வேண்டும் என்று உணர்ந்து கொள்வர்.

ஆகவே எந்த ஒரு செயலை நாம் எடுத்துக் கொண்டாலும் முதலடி முதற்படி பெற்றோராகவே காணப்படுகின்றனர். "அறுசுவை உணவு வேண்டுமானால் அன்னை வேண்டும் அறிவு வேண்டுமானால் தந்தைவேண்டும்" எனவேதான் அன்னையும் தந்தையும் ஓர் மரமானது ஓங்கி வளர்வதற்கு பசளையும் நீரும் எவ்வாறு மூலப்பொருட்களாக அவசியமாகின்றனவோ அவ்வாறே மாணவரின் கல்வி வளர்ச்சியில் பெரும் பக்கபலமாக உள்ளனர். "மாதா, பிதா,குரு, தெய்வம்" ஆகிய வகுப்பினுள் முதலில் குரு வை அல்லது தெய்வத்தை ஏன் முதலில் வைக்கவில்லை. ஏனென்றால் எமக்கு முதல் கண்கண்ட தெய்வங்கள் அன்னையும் பிதாவும். ஆகவே அவர்கள் தான் எம் வாழ்வின் முதற் காரணம்.

எம் வாழ்வைத் திட்டமிட்டு வளப்படுத்தி வளர்க்கும் கடமை,உரிமை எம் பெற்றோர்க்கு தான் உண்டு. ஆகவே அந்த பெற்றோர்களை அடித்தளமாக அத்திவாரமாகக் கொண்ட எம் வாழ்வை ஓர் நல்ல பலம்வாய்ந்த கட்டிடத்தைப் போல் உறுதியான ஓர் வாழ்வாக பயன் மிக்கதோர் வாழ்வாக விளங்க பெற்றோரின் உதவி அவசியம். எனவே ஓர் மாணவனின் கல்வி வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு மிகவும் அவசியமான ஒன்றாக மேலோங்கிக் காணப்படுகின்றது.

செ. ஆன்றஜிதா
2005
கலைப்பிரிவு
உயர்தரம்.

# நாடக ஆசிரியர்
# ஜே. எம். சிஞ்ஜ் (J. M.SYNGE) (1871-1909)

அயர்லாந்தின் நாடக இலக்கியத்தில் சிறந்து விளங்கி ஐரிஸ் நாடக ஆசிரியருள் முதன்மையான ஒருவர் எனப் போற்றப்பெற்ற ஜே. எம். சிஞ்ஜ் புகழ் கோபுரத்தின் உச்சியில் உட்கார்ந்து கோலோசஹ்ரீங்கிய கால கட்டத்தில் காலன் அவரைக் கொண்டு சென்றது ஐரிஸ் நாடக உலகிற்கு பேரிழப்பாகும். நோபல் பரிசு பெற்ற வில்லியம், பட்லர், யாட்ஸ் போன்றவர்கள் குறிப்பிடத்தகுந்த ஐரிஸ் நாடக ஆசிரியர்களாய் சிறந்து விளங்கிய கால கட்டத்தில் சிஞ்ஜ் மிகச் சிறந்த படைப்புகளுக்கு சொந்தக்காரராய் உயர்ந்து விளங்கியதால் ஐரிஸ் நாடகத்தின் தனிப் பெரும் படைப்பாளியாக மதிக்கப்பெற்றார்.

1871 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 16ம் நாள் டப்ளின் நகரின் புறநகர்ப்பகுதியில் பிறந்தார். அவர் பிறந்து ஓர் ஆண்டு நிறைவு பெறும் முன் அவரது தந்தை இறந்துவிட்டார். இது அவரது எதிர்கால வாழ்க்கையை பெரிதும் பாதித்தது எனலாம். வழக்கறிஞராய் தொழில் புரிந்த சிஞ்ஜின் தந்தையார் விட்டுச் சென்ற சொத்தின் வழியாக ஆண்டொன்றுக்கு கிடைத்து வந்த 400 பவுண்டு வருவாயைக் கொண்டு சிஞ்ஜின் அன்னை அவரை வளர்த்து ஆளாக்கினார்.

சிறு வயதில் வீட்டிலேயே கல்வி பயின்று வந்த சிஞ்ஜ் பட்டக் கல்விக்காக டப்ளினிலுள்ள டிரினிரி கல்லூரியில் சேர்ந்து 1892 இல் பி.ஏ பட்டதாரியானார். 1893 இல் ஜெர்மனிக்குச் சென்று பிடில் வாசிக்க கற்றுக்கொண்டார். ஓராண்டுக்குப் பின்னர் பாரிசுக்குச் சென்று அங்கேயே தங்கிவிட்டார். அங்கு பிரிட்டிஷ் மற்றும் ஐரோப்பியப் பத்திரிகையில் இலக்கியக் கட்டுரைகள் எழுதி வந்தார்.அந்த சூழலில் தான் 1896 இல் அவர் பாரிசில் யாட்ஸைச் சந்திக்க நேர்ந்தது. யாட்ஸ் அப்பொழுது பெருங் கவிஞராகவும் நாடக ஆசிரியராகவும் புகழ் சேர்த்துக் கொண்டிருந்த காலம். அவர் சிஞ்ஜின் எழுத்தார்வத்தைக் கண்டு அவருக்கு சில புத்திமதிகளைக் கூறினார். "பாரிசிலிருந்து கொண்டு ரசீன் போன்றவர்களின் நாடக விமர்சனம் எழுதுவதை விடுத்து ஆரான் தீவுக்குச் செல் அங்குள்ள சூழல் உன்னை ஒரு சிறந்த படைப்பாளியாக மாற்றும்" என அவர் கூறிய யோசனையை உடனடியாக அவர் செயற்படுத்தவில்லை. இரண்டு ஆண்டுகளுக்குப் பின் 1898 இல் ஆரான் தீவுக்கு பயணமானார் ஆனால் அங்கேயே நிலையாகத் தங்கிவிடாது பாரிசுக்கும் ஆரானிக்குமாக பயணித்துக் கொண்டிருந்தார். ஐந்து முறை இவ்வாறாகச் சென்ற சிஞ்ஜிக்கு அத்தீவின் மண் வாசனை (ஆங்கிலம்) பரிச்சயமாகி அதன் மொழிநயத்துடன் சிஞ்ஜ் ஒன்றிப் போனார். அத்தீவின் பழக்க வழக்கங்கள், மக்களின் மனோபாவம், அணுகுமுறை அனைத்தும் அவருக்கு மிகவும் பிடித்திடவே அத்தீவைப் பற்றி பிற்காலத்தில் (1907) ஆரான்தீவுகள் என்ற பெயரில் இலக்கியத் தரம் மிகுந்த நூல் ஒன்றை எழுதினார். அது சிறந்த இலக்கியப் படைப்பாக போற்றப்பட்டது.

ஆரான் தீவில் அவர் அடைந்த அனுபவங்கள் அவரது நாடகப் படைப்புக்களுக்கும் பேருதவியாய் இருந்தன. அத்தீவு மக்கள் கெய்லிக் மொழி பேசுபவர்களாய் இருந்தும் அவர்களின் ஆங்கில உச்சரிப்பு சிஞ்ஜை மிகவும் கவர்ந்தது. ஆகவே

அத் தீவில் வாழும் கிராமிய மக்களைத் தனது முதல் மூன்று நாடகங்களிலும் பயன்படுத்தியிருந்தார். அவையாவன: கிளெனின் நிழல் (1903), ரைடர்ஸ் டு தி ஸீ (The Riders to the she) (1903) , மேற்கத்திய விளையாட்டுப் பையன் (1908) என்பனவாகும். அதன் பிறகு அவர் டிஸ்கர்ஸ் வெடிங் (1908) மற்றும் நாடகங்கள் படைத்தார். அவரின் அனைத்து நாடகங்களுமே உயர்ந்த படைப்புக்களாக அமைந்து ஜே. எம். சிஞ்ஜை உலக நாடக ஆசிரியராகப் போற்றித் துதி பாடின.

சிஞ்ஜ் தனது வாழ்நாளில் மணவாழ்க்கையைக் கண்டிராதவராகவே காலத்தை ஓட்டி விட்டார். அவர் இறப்பதற்கு ஓராண்டுக்கு முன்பு மேரி ஓநில் என்னும் பெயருடைய நடிகையை சந்தித்து பழகி வந்தார். திருமணம் புரிந்துகொள்ளவும் நிச்சயித்தார். ஆனால் அந்த மாமேதை 1909 ஆம் ஆண்டு மார்ச் 24 இல் டப்ளினில் காலமானார். அவர் மறைந்தாலும் அமரத்துவம் வாய்ந்த அவருடைய படைப்புக்கள் இன்றும் வாழ்கின்றன.

சி. விஜயகௌரி
2004 A/L
கலைப்பிரிவு.

**நற்பரிசு**

| | |
|---|---|
| எதிரிக்கு கொடுக்கும் நற்பரிசு | ~ மன்னிப்பு |
| பகைவனுக்கு கொடுக்கும் நற்பரிசு | ~ விட்டுக்கொடுத்தல் |
| நண்பனுக்கு கொடுக்கும் நற்பரிசு | ~ செவிமடுத்தல் |
| குழந்தைக்கு கொடுக்கும் நற்பரிசு | ~ முன் மாதிரிகை |
| தந்தைக்கு கொடுக்கும் நற்பரிசு | ~ நல்வணக்கம் |
| தாய்க்கு கொடுக்கும் நற்பரிசு | ~ அருகில்லிருத்தல் |
| எல்லாவற்றுக்கும் கொடுக்கும் நற்பரிசு | ~ தியாகம் |

# மாணவரின் வாழ்க்கையில் பாடசாலையின் பங்களிப்பு

மாணவப் பருவம் என்பது ஆரம்பத்திலிருந்து முடிவு வரை பாடசாலை நிர்வாக விதிகளுக்கமைய ஆசிரியர்களுக்கு கீழ்ப்பணிந்து அவர்களிடமிருந்து கற்க வேண்டியவற்றை கற்கும் காலமே மாணவப் பருவமாகும். இது ஆறு வயது தொடக்கம் பத்தொன்பது வயது வரையான பதின்மூன்று வருட கால எல்லையை உடையது.

மாணவர்களின் வாழ்க்கையில் பாடசாலையின் பங்குபற்றி நோக்குவோமாயின் ஒருவன் அவனுடைய வாழ்க்கையிலே ஆளுமையுடையவனாகவும், நல்ல பிரஜையாகவும், எல்லாவற்றிற்கும் மேலாக ஒழுக்கசீலராக, அறிவாளிகளாக, தலைவர்களாக, கடமையுணர்வுள்ளவர்களாக, சமுதாயத்தவர்களை வயதிற்கேற்ப சகோதரர்களாய், பெற்றோராய் மதிக்கும் மனப்பான்மை, சக மாணவர்கள், ஆசிரியர்கள் என்போரை ஒரு குடும்பமாக மதிக்கும் மனப்பான்மை போன்ற உயரிய பண்பை அவனிடம் உண்டாக்கி உயர் கோபுரம் போன்று உயர்த்தி வைப்பது பாடசாலை தான்.

பாடசாலை மூலம் பெறுவதில் பிரதானமானது ஒழுக்கம். இது உயிரிலும் மேலானது. இவ் ஒழுக்க நெறியை எல்லா இடங்களிலும் சரியான முறையில் பெறமுடியாது. ஒழுக்கங்களாவன ஆசிரியர்கள், வயதில் மூத்தோர் என்போரை கனம் பண்ணுதல், அவர்கள் தரும் வேலையை உரிய காலத்திற்குள் உரிய முறைப்படி செய்து முடித்தல், கனிவாகப் பேசுதல், நேரந்தவறாதும் ஒழுங்காகவும் பாடசாலைக்கு வருதல், தூய்மையான சீருடை அணிந்து வருதல், அமைதியாக இருத்தல் போன்றனவே பிரதான ஒழுக்கங்களாகும். பாடசாலையில் மட்டுமே இது வலுக்கட்டாயமாக பழக்கப்படுகின்றன. ஒழுக்க விதிகளிலிருந்து சிறிதளவேனும் மீறும் பட்சத்தில் உரிய முறைப்படி தண்டிக்கப்பட்டு மறுபடியும் தவறுகள் செய்யாதபடியான நிலைமை மாணவர் மத்தியில் உருவாக்கப்படுகின்றன. இப்படி ஒழுக்கமான மாணவர்கள் பின்பு சமுதாயத் தலைவர்களாக விளங்கும் பட்சத்தில் நல்ல ஒழுக்கமுள்ள சமுதாயம் தோற்றம் பெறுகிறது. தனிப்பட்ட முறையில் அவர்களுக்கு நற் பெயர் கிடைக்கிறது. தொழில் ஸ்தானங்களிலும் கூட ஒழுக்க நெறி தவறி கெட்ட பெயர் வாங்கி அவமானப்படுகின்ற வேலையை இழக்கின்ற துன்பியல் நிகழ்வுகள் அறவே இல்லாமல் செய்யப்படுகின்றது.

அடுத்து முக்கியமாக பாடசாலைகள் மூலம் மாணவர் அடையும் பயன் புத்தகக் கல்வி அறிவாகும். இன்றைய நிலையில் எத்தனையோ பேர் ஏழைகளாகவும் கற்க வசதியின்றியும் துடிக்கின்றனர். பாடசாலையானது ஏழை, பணக்காரர், சாதி, மத, பேதமின்றி யாவரிற்கும் இலவசமாக புத்தகங்கள், கல்வி உபகரணங்கள் என்பவற்றை இலவசமாக வழங்கியும் தகுதியான ஆசிரியர்கள் மூலம் வசதியான வகுப்பறையில் வசதியாகக் கற்பதற்கு பாடசாலை பெரும் பங்களிப்பை செய்து வருகின்றது. உரிய கால இடைவெளியின் பின் பரீட்சைகள் நடாத்தி மாணவர்களின் அறிவை விருத்தி செய்கின்றது. இதற்கு மேலாக திறமை அடிப்படையில் பரிசில்களை வழங்கியும் மாணவர்களை கல்வியில் ஊக்குவிப்பதும் பாடசாலையே ஆகும். மற்றைய இடங்களில் இவ்வாறு கல்வி கற்பிக்கப்படுவதில்லை.

அப்படியாயினும் பாடசாலைக் கல்வி முறை போன்று திருப்தியாகக் கற்பிக்கப்படுவதில்லை. எல்லோராலும் பாடசாலையை விடுத்து கற்க முடியாது. கல்வி அறிவு யாவற்கும் அவசியம். இவ் உலகில் வாழ பொருள் அவசியம். பொருள் வாங்க பணம் அவசியம். பணம் வேண்டுமாயின் நல்ல தொழில் அவசியம். நல்ல தொழிலிற்கு மிகவும் அவசியம் கல்வி அறிவு. இக்கல்வி அறிவிற்கு ஆதாரமாக இருப்பது பாடசாலையே. பாடசாலை மூலம் பெறும் கல்வி அறிவானது நாம் பூரண மனிதனாக விளங்கவும், பிறரிடம் ஏமாறாமல் இருப்பதற்கும், நல்ல தொழில் பெறுவதற்கும், நல்ல மனிதனாக விளங்குவதற்குமென உதவுகிறது.

அடுத்து விசேட பங்களிப்பாக நோக்கும் போது மாணவர்களின் ஆற்றல் விருத்தி செய்யும் இடமாகவும் விளங்குகிறது. பாடுகின்ற ஆற்றல், ஆடுகின்ற ஆற்றல், வரைகின்ற ஆற்றல், பேசுகின்ற ஆற்றல் இப்படியான ஆற்றல்கள் ஒவ்வொரு மாணவர்கள் மத்தியிலும் உள்ளன. ஒரு வித்தானது முளை விட்டு கன்றாகி மரமாகி காய்த்து பலன் தருமளவிற்கு அதை ஆரம்பத்திலிருந்து எவ்வாறு பராமரிக்க வேண்டுமோ அது போல இக்கலை ஆற்றல்களையும் ஆரம்பத்திலிருந்து பெரிதாக விருத்தியடைய வைப்பதில் பெரிதும் பங்காற்றுவது பாடசாலையே. பெருங் காற்று, மழை என்பவற்றிற்கு அஞ்சாது ஈடுகொடுக்கும் பெரும் விருட்சம் போல மனதிலே வரும் கூச்சம், பயம் என்பவற்றை நீக்கி கலை ஆற்றல்கள் எம்மில் பெருக விருட்சமாக எம்மில் ஓங்கி நிற்க பாடசாலை விழாக்களில் இக்கலைப்படைப்புக்களை அரங்கேற்றி அதன் மூலம் மேலும் மேலும் ஆற்றல்களை வளர்த்து எம்மை தேர்ச்சி பெற வைக்கின்றார்கள் ஆசிரியர்கள்

அடுத்து பாடசாலையின் பங்களிப்பானது மாணவர்களிற்கு மிகவும் கைகொடுக்கும் விளையாட்டுத் திறமையை வளர்க்கும் நிலையமாக விளங்குகிறது. இன்றைய காலகட்டத்தில் விளையாட்டுத்துறை திறமை மூலம் பிரபல்யமானார் மிக அதிகம். எழுத வாசிக்க தெரியாத மக்கள் கூட விறையாட்டுத் திறமைகள் மூலம் பிரபல்யமானவர்கள் அதிகம். இப்படியான விளையாட்டுத்துறையினை விசேடப்படுத்தி மாணவர் மத்தியில் அறிமுகமாக்குவதில் பிரதான பங்கு வகிப்பது பாடசாலையே. இதற்காக ஆண்டில் ஒரு நாள் விளையாட்டுப்போட்டி மாணவர் மத்தியில் வைக்கப்படுகிறது. வெற்றி பெறும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களை வழங்குவதோடு, இதற்கு மேலாக கோட்டம், வலயம், மாவட்டம், மாகாணம் ஆகிய மாவட்டங்களில் போட்டியை நடாத்தி பெறுமதியான பரிசில்களை வழங்கியும் மாணவர்களை விளையாட்டுத்துறையில் பெரும் வீரர்களாக உயர்த்துகிறது. இதை விட விளையாட்டுக்கென்று விசேடமாக மைதானம் அமைத்து விளையாட்டுக்களை பழக்குவதில் விசேட பங்கு பாடசாலைக்கு உண்டு. தனியார் விறையாட்டுக் குழுவில் இணைந்து விளையாட்டுத் திறமை பெற எல்லோராலும் முடியாது. அதற்கு பண வசதி இல்லை. பாடசாலை வாழ்க்கையில் இலவசமாகப் பெறுகின்ற விளையாட்டுப் பயிற்சிகள் யாவரையும் உயர்த்துகின்றது.

ஒரு மாணவனிற்கு வேண்டிய ஆளுமை, நிர்வாகத்திறமை, தலைமைப் பொறுப்பேற்று எதையும் முன்னின்று செய்யும் ஆற்றலை மாணவர்களிற்கு வளர்ப்பது பாடசாலையே. இத்திறமைகள் இருந்தால் மட்டுமே எந்த காரியமாயினும், எந்தவிதமான முன்னெடுப்புக்கலென்றாலென்ன, எந்த நிகழ்வுகள் என்றால் என்ன, வெற்றிகரமாக நிகழ்த்த முடியும். ஏன் சாதாரண ஒரு கடையை நடாத்துவதாயின் கூட நிர்வாகத் திறமை, ஆளுமை அவசியம். இத்திறமைகளை சும்மா இருந்தபடி யாராலும் கற்றுக்கொள்ள முடியாது. அனுபவ ரீதியாகவே பெற்றுக்கொள்ள முடியும்.

இப்பொறுப்பில் உள்ளவர்கள் என்றால் சும்மா இலகுவாக இருக்க முடியும் என்றல்ல. பல வகையான சிக்கல்கள், பிரச்சினைகள், எதிர்ப்புக்கள், முரண்பாடுகள், அவமானம் என்பனவெல்லாம் ஒன்றுவிட்ட ஒன்றாக ஆகாயத்தை மறைக்கும் கருமுகிற்கூட்டம் போல படையெடுத்து வரும் இவற்றையெல்லாம் எதிர்கொண்டு இவற்றிற்கு மேலாக காரியத்தை முன்னெடுத்துச் செல்வதே நிர்வாக ஆளுமைத் திறமையாகும். இத்திறமையை அனுபவ ரீதியாக வளர்ப்பதற்கு வேறு இடங்களில் சந்தர்ப்பமில்லை. பாடசாலையிலேயே நடக்கின்ற விழாக்கள் உதாரணமாக வாணி விழா மூலமும், மன்றங்கள் மூலமும் உதாரணமாக சமய மன்றம், தமிழ் மன்றம், மாணவர் மன்றம் இப்படியானவை மூலமும், செயற்பாட்டுத்திட்டம் மூலமும் மாணவ முதல்வர்கள் என்ற பட்டங்களை வழங்கியும் இவற்றிலே மாணவர்கள் தலைமை தாங்கி சிறப்புற நடாத்தி வைக்கின்ற சந்தர்ப்பங்களை வழங்கி ஆளுமை, நிர்வாகத்திறமை என்பவற்றை மேம்படுத்தி வைக்கின்றது.

இவ்வாறெல்லாம் சிறப்புடைய மனிதனாக நாளைய சமுதாயத்தில் ஒருவன் விளங்குவதற்கு பாடசாலையானது பதின்மூன்று வருட காலம் மாணவர்களின் முன்னேற்றத்திற்காக துறைகளிற்கேற்ப உரிய வடிவங்களெடுத்து நிற்கின்றது. பணமோ, சலுகைகளையோ எதையும் மாணவர்களிடம் எதிர்பாராது ஒரு தாய் போல விளங்குகின்ற பாடசாலை மாணவர்களின் அரிய பொக்கிசமாகும்.

பா. ஹன்ஸ்குகன்
2003 A/L
கலைப்பிரிவு

**சிறந்தவை இவை**

| | | |
|---|---|---|
| சிறந்த ஆசிரியர் | ~ | அனுபவம் |
| சிறந்த புத்தகம் | ~ | வாழ்க்கை |
| சிறந்த படிப்பு | ~ | பொறுமை |
| சிறந்த நண்பன் | ~ | கடமை |
| சிறந்த அணிகலன் | ~ | புன்னகை |
| சிறந்த பாதுகாப்பு | ~ | நேர்மை |
| சிறந்த பாதை | ~ | கல்வி |
| சிறந்த பொழுது போக்கு | ~ | சேவை |
| சிறந்த மதம் | ~ | சமத்துவம் |

# இந்துமதத்தில் ஒழுக்கக் கோட்பாடு (அறம்)

இந்து மதக் கோட்பாடுகளுள் ஒழுக்கக் (அறம்) கோட்பாடும் ஒன்று. அறம், தர்மம், ஒழுக்கம் என்பது ஒரே கருத்தினையே விளக்கி நிற்கின்றன. ஒழுக்கம் என்பது மனிதருக்கு நலம் பயப்பது. உலகைக் காப்பது. ஜீவகோடிகளைக் காப்பது. இது தெய்வத்திடம் பிறந்தது. நம்மை தெய்வத்திடம் சேர்ப்பிப்பது. எனவே ஒருவரை தெய்வமாக்குவதும் மரணத்தின் பின் நம்மைத் தொடர்ந்து வருவதும் உயிரினும் மேலாக மதிக்கப்படுவதும் இதுவே. எனவே தான் வள்ளுவப் பெருந்தகையும்

"ஒழுக்கம் விழுப்பம் தரலாள் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

எனக் கூறுகிறார். இவ் ஒழுக்கக் கோட்பாடானது இந்துமதத்தில் மட்டுமே முழுப்பரிணாமத்தோடு விவரிக்கப்படுகின்றது. வேதத்தில் காணப்படும் ஒழுக்கக் கருத்துக்களை நோக்கினால் இங்கு "ரிதம்" என்ற கருத்தில் பேசப்படுகின்றது. இந்த ரிதத்தைக் காண்பவனாக "ரிநசய கோபா" என்ற பெயரில் வருணனே அதற்குரிய தெய்வம் என சுட்டப்படுகிறது. நதிகள் ஒழுங்காகப் பாய்வதற்கும், பருவ காலம் வருவதற்கும் அதன் கட்டுப்பாடான வரையறைக்கும் வருணனே தலைவன் ஆவான். இவன் சூரியனைக் கண்ணாகக் கொண்டு பாவம் செய்பவர்களைத் தண்டிப்பவனாகவும், பாவ மன்னிப்பு கோருபவர்களை ஏற்றுக்கொள்வதாகவும் அவனது பாடல்கள் விளங்குகின்றன.

உபநிடதத்தில் இவ் அறக்கருத்துக்களை நோக்கும் போது பலவாறாகப் பேசப்படுகிறது. தைத்திரிய உபநிடதத்தில் உண்மை பேசு, அறம் செய், தந்தை, தாய், ஆசிரியரை தெய்வமாகப் போற்று போன்ற அறக்கருத்துக்களை குருகுலவாசம் நிறைவுபெற்று வீட்டிற்கு அனுப்பும் போது குரவானவரா் அறிவுரை வழங்கி ஆசீர் வதிக்கின்றார்

மேலும் தெய்வத்தை புறக்கணிக்கக்கூடாது, வீட்டுக்கு வந்த விருந்தினரை தெய்வமாகக் கருதுதல் வேண்டும், உணவை நமக்காக மட்டுமன்றி நாட்டுக்கும் பயன்படுமாறும் உணவை உற்பத்தி செய்தல் வேண்டும் என்பன போன்ற கருத்துக்கள் உபநிடதத்தில் கூறப்படுகின்றன. புராண இதிகாசங்களை நோக்கும் போது இங்கு அறக்கருத்துக்கள் அதிகமாக எடுத்தாளப்படுகின்றது. புராணங்களில் ஒன்றான "அரிச்சந்திர புராணத்தில்" உண்மை பேசு என்னும் கருத்து அரிச்சந்திரன் என்னும் பாத்திரப் படைப்பின் மூலம் காட்டப்படுகிறது.

இதிகாசத்தில் காணப்படும் இராமாயணம், பாரதம் ஆகிய நூல்களிலே ஒரு மனிதன் தன்னிலும் பெரியவர்களோடு எவ்வாறு பழகவேண்டும், சக மாணவர்களோடு எப்படி நடந்து கொள்ள வேண்டும், தன்னைவிட குறைந்தவர்களோடு எங்ஙனம் நடத்தல் வேண்டும் ஒரு அரசன் தன் நாட்டை எங்ஙனம் ஆளவேண்டும், சமுதாயம் அமைதியாக சச்சரவின்றி எப்படி வாழ வேண்டும், என்பன போன்ற விடயங்களைக் கூறுகின்றது. இவற்றில் பெரியோரை மதித்து நடக்கும் பண்பில் இராமாயணத்தில் இராமனும், பாரதத்தில் வீமனும் காட்டப்படுகின்றனர். அதாவது இராமனுக்கு முடி சூட்டுகின்ற போது கைகேயி இராமனை நோக்கி மகனே நீ பதினான்கு ஆண்டுகள் காடாளவும் உனது தம்பி நாடாளவும் வேண்டுமெனக் கூறுகின்றாள். இதைக் கேட்ட இராமன் இன்முகத்தோடு தாயின் சொல்லைத் தட்டாமல் காட்டிற்கு செல்கிறான்.

பாரதத்தில் துச்சாதனன் திரௌபதையின் துகில் உரிந்து அவளை அவமானப்படுத்தும் போது வீமன் கோபத்துடன் எழுகிறான். இதைக் கண்ட தருமன் தம்பியின் கோபத்தை தணிக்கிறான். அதன் மூலம் இருவருரிடமும் பெரியோரை மதித்து நடக்கும் பண்பு வெளிக்காட்டப்பட்டது.

சமூகத்தில் ஒருவருடைய வாழ்வில் கடைப்படிக்க வேண்டிய அறம் பற்றியும் ஏகபத்தினி விரதம் பற்றியும் இதிகாசங்கள் கூறுகின்றன. இராமாயணத்தில் இராமன் சீதையைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் மனதால் கூட நினைக்கவில்லை. ஆனால் இராவணன் சிவ பக்தனாக இருந்தும் மாற்றான் மனைவியை விரும்பிய காரணத்தினால் அழிகிறான். மேலும் பெண்களின் கற்பும் அறக்கருத்தாகக் கூறப்படுகிறது. இதற்குச் சான்றாக இராமாயணத்தில் சீதையின் வாழ்வு அமைகின்றது. அவள் கற்பை நிருபிக்க தீக்குளிக்கின்றாள்.

இதைவிட சர்வதேச சகோதரத்துவமாகிய அறக் கருத்து எடுத்துக் காட்டப்படுகின்றது. அதாவது பரதன் இராமனின் பாதுகைகளை வைத்து அரசு செய்வதையும், இராமன் சக்கரவர்த்தியின் மகனாக இருந்தும் குடிமக்களுடன் தோழமை பூண்டு ஒழுகுவதும், வாலியைக் கொன்றதும் அந்த அரசை அயோத்தியுடன் சேர்க்காது சுக்கிரிவனுக்கு கொடுப்பதும், இராவணனைக் கொன்ற பின் இலங்கையை தன்னுடையதாக்காமல் விபீடனுக்கு கொடுப்பதும், ஓடமோட்டிய குகனை தோழனாக ஏற்றதும் சர்வதேச சகோரத்துவம் என்னும் அறக்கருத்தை எடுத்துக் காட்டுகிறது.

அடுத்து கர்ணன் மூலம் நன்றி மறவாதிருக்கும் அறப்பண்பு வெளிக்காட்டப்படுகின்றது. பாரதத்தில் துரியோதனன் தன்னை மதித்து பாதுகாத்ததன் நிமிர்த்தம் செஞ்சோற்றுக் கடன் தீர்கும் பண்புடையவனாக இருப்பதுடன் தன்னிடம் யார் எந்த நேரத்தில் எப்பொருளை கேட்டாலும் கொடுக்கும் கொடை வள்ளலாகவும் காணப்படுகின்றான். அடுத்து கீதையில் கிருஸ்ணர் தர்மம் குன்றி அதர்மம் தலை தூக்கும் போது நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் நான் யுகந்தோறும் அவதரிப்பேன் என்று கூறுகின்றார்.

மேலும் ஆன்மீக வாழ்க்கை முழுமை பெற அறமே காரணமாக அமைவதை கீதை கூறும் உபதேசங்கள் வாயிலாக அறிய முடிகிறது. கிருஸ்ண பரமாத்மா அர்ச்சுனனுக்குரிய அரச தர்மத்தை விளக்கிக் காட்டும் போது அரசனது உயிரிலும் பொரிதானது அறம். போர் புரிவதால் அறம் வளர்க்கப்படுகின்றது. போரிலிருந்து விலகுவதால் மறம் மேலோங்குகின்றது. என்றும் கடமையைச் செய்பவனை எதிர்பாராதே என்றும் கூறுவதுடன் ஒருவன் நடுநிலைமை உடையவனாக, மனவலிமை உடையவனாக, பஞ்சயங்களை செய்பவனாக, அகங்காரம், மமகாரம் இல்லாதவனாக அன்பு, பொறுமை, சத்தியம், நேர்மை, கொலை செய்யாமை, முதலிய நற்பண்புகளை உடையவனே எனக்கு பிரியமானவன் என்றும் கூறுவதன் மூலம் ஒழுக்கக் கருத்துக்களை எடுத்து விளக்குவதுடன் போதனைகளுக்கு செயல் வடிவம் கொடுத்து வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிக்க வழிகாட்டுகின்றது.

இல்லற வாழ்வில் முழுமை பெற ஒழுக்கமே (தர்மமே) காரணமாக அமைகின்றன என்பதனை இந்துமதம் கூறும் வர்ணாச்சிரம தர்மத்தில் வரும் இல்லறப் பருவம் இதை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. அதாவது உலகியலோடு ஒட்டி வாழும் போது

இல்லறத்தானுக்கு பல கடமைகள் உண்டு. இக்கடமைகள் அனைத்தையும் அவன் தவறாது செய்ய வேண்டும். அதனையே வள்ளுவர்,

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை"

என்று கூறுவதிலிருந்து இல்லறத்தான் ஒருவன் இல்லறத்தை நல்லறமாக நடத்துவதற்கு ஒழுக்கமே (தர்மமே) சிறந்தது எனக் கூறலாம்.

19ம் நூற்றாண்டில் தோன்றிய மகான்கள் ஒழுக்கக் கருத்துக்களையே மிக முக்கியமாகக் கூறுகின்றனர். உதாரணமாக மகாத்மாகாந்தி, இராமகிருஸ்ணர், விவேகானந்தர் போன்றோரது வாழ்க்கையும் அவர்கள் கூறிய உபதேசங்களும் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. இன்று கூட்டுலகில் பல பிரச்சினைகள் தலைதூக்கி நிற்கும் வேளையில் இவ் ஒழுக்கக் கருத்துக்களே பலவாறாக மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருவதைக் காண்கிறோம். எந்த ஒரு விழாவிலும் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும், வேறு பல நிறுவனங்களிலும் இதுவே எடுத்துரைக்கப்பட்டு போதிக்கப்படுகின்றன. மனிதன் இவ் ஒழுக்கப் பண்புகளை மேம்படுத்திக் கொள்ள "தியானம்" போன்ற வழிவகைகளும் கீழைத்தேயத்தில் மட்டுமல்ல மேலைத்தேய மக்களாலும் பின்பற்றப்படுவதைக் காணமுடிகிறது.

எனவே இந்துமதம் கூறும் ஒழுக்கக்கோட்பாடு இவ்வுலகில் மனிதனை மனிதனாக வாழ வைத்து ஆன்மீக வாழ்க்கைக்கு இட்டுச் செல்வதற்கு அத்திவாரமாக அமைகின்றது எனக் கூறலாம்.

இ. சஜித்தா
12
உயர்தரம்2004
கலைப்பிரிவு.

வாய்மை எனப்படுவது யாதெனில் யாதொன்றும் தீமையிலாத செயல். வாய்மை என்றால் என்ன? அதன் இலக்கணம் யாது? யாருக்கும் எந்தக் காரணத்தினாலும் எந்தவிதத் தீங்கும் பயவாத தூய்மையான சொல்லைச் சொல்லுதலே வாய்மையாகும்.

(ஊக்கம்)

எண்ணிய எண்ணியால் கெய்துப எண்ணியார் திண்ணிய ராகப் பெறின். மன உறுதி படைத்தோரால் செய்யமுடியாத செயலும் அடைய முடியாத பேறும் இல்லை. இத்தகைய மனஉறுதியே வினையுறுதியாகும். இவ்வுறுதி உடையோர் யாவராலும் போற்றப்படுவர்.

# சூழல் மாசடைதல்

நாம் வசிக்கும் சுற்றாடலே சூழல் எனப்படுகின்றது. இயற்கைச் சூழல், கலாச்சாரச் சூழல் என சூழல் இரு வகைப்படும். நிலம், நீர், மண், விலங்குகள், வளிமண்டலம் என்பன இயற்கைச் சூழலாகும். மனித தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக அமைத்துக்கொண்ட சுற்றாடல் கலாச்சாரச் சூழலாகும். கட்டிடங்கள், பயிர்கள், நிலங்கள், தொழிற்சாலைகள், சமய கலை நிர்மானங்கள் கலாச்சாரச் சூழலாகும்.

18 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி காரணமாக மனிதன் தனது தேவைகளை துரிதப்படுத்துவதற்காக இயந்திரங்களைப் பாவிக்கத் தொடங்கினான். இதனால் சூழல் துரிதமாக மாறிற்று. மனிதர் தோன்றிய காலத்திலிருந்து 18 ஆம் நூற்றாண்டு வரையில் ஏற்பட்ட மாற்றங்களை விட கடந்த ஆண்டுகளில் அதன் மாற்றம் சூழலில் ஏற்பட்டது.

மனிதன் திட்டமிடாத வேலைத்திட்டத்தினால் இன்று மக்கள் வாழ்வதற்கு பொருத்தமற்ற நிலைக்கு சூழல் மாற்றப்பட்டுள்ளது. இவ்வுலகில் வாழும் நாம் சூழல் சமநிலையைப் பேணவேண்டும். இச்சூழற் சமநிலை குலைதலே சூழல் மாசடைதல் எனப்படும்.

மனிதன் சூழலில் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கை காரணமாக சூழல் மாசடைகின்றது. இலங்கையில் வன அழிப்பு, தென் கரையோரங்களில் சுண்ணக்கல் அகழ்தல், மண் அகழ்தலால் ஏற்படும் கடலரிப்பும் உதாரணங்களாகும். நீர்ப்பாசண முறைகள், சேற்று நிலங்களை நிரப்புதல், தொழிற்சாலைகளை நிர்மானித்தல், எரிபொருட்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அகழ்வுகளை மேற்கொள்ளல் போன்றன இயற்கைச் சூழல் மாசடைவதற்குரிய காரணங்களாகும்.

சூழல் மாசடைதல் பிரதானமாக மூன்று வகைப்படும். நிலம் மாசடைதல், நீர் மாசடைதல், வளி மாசடைதல் ஆகும். உலகில் சூழல் மாசடையும் வழிகளை எடுத்து நோக்குவோமாயின் கிருமிநாசினிகள், அழிவை உண்டாக்கும் அணுகுண்டுகள், குப்பை கூழங்கள், இத்துப் போன பல பெருட்கள், வாகனங்கள் தொழ்ற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகைகள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் இரசாயனக் கழிவுகளால் சூழல் மாசடைந்து வருகின்றது.

நிலத்தில் பிரதானமாக மாசடைந்த மண் வகை மனிதனைப் பாதிக்கின்றது. தற்காலத்தில் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் கிருமிநாசினிகள், களைகொல்லிகள், பங்கசுகொல்லிகள் ஆகியன இப்போது அதிகளவிற்கு பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் நகரப் பகுதியில் ஆங்காங்கு குவிக்கப்படும் கழிவுப் பொருட்களும் சூழலை மாசுபடுத்துகின்றது. இதே போன்று அன்றாட நடவடிக்கையின் போது வீடுகளிலிருந்து வெளியேற்றப்படும் குப்பை கூழங்களாலும் இத்துப்போன பொலித்தீன் பிளாஸ்டிக் போன்ற பொருட்களை ஆங்காங்கே இடுவதனால் தரை மாசுபடுகின்றது.

மனிதர்களின் செயற்பாடுகளினால் வளிமண்டலத்தில் கலக்கும் பொருட்களினால் வளி மாசடைகின்றது. வாகனங்கள் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகைகள், ஈயத்துணிக்கை போன்ற பொருட்கள் பெரும்பாலும் அடர்ந்த புகைப்படலமாக சூரிய ஒளி பூமியில் விழாது தடை செய்கின்றது. அதிவேகமாக உயரப்பறந்து செல்லும் சுப்பசொனிக் விமானங்கள், மற்றும் விண்கலங்கள் போன்றவற்றிலிருந்து வெளியேறும் நச்சு வாயுக்களாலும், குளிரூட்டிகள் பயன்படுத்தப்படுவதனால் வளிமண்டலத்தில் சேரும் குளோரோபுளோரோ காபன் போன்றவற்றினால் வளிமண்டலத்தின் மேற்படலமாக இருக்கும் ஓசோன் படையை தாக்குவதனால் துவாரம் விழலாம். இதனால் சூரிய ஒளி நேரடியாக பூமியில் விழுவதனால் உயிர்களுக்கு உயிர் ஆபத்து ஏற்படலாம். இவ்வாறான அசுத்தக் காற்றை சுவாசிப்பதனால் சுவாசத் தொகுதியை சார்ந்த நோய்களும், புற்றுநோய், இதய நோய் சார்ந்த நோய்கள் வர வாய்ப்புண்டு.

மனித வாழ்விற்கு இன்றியமையாத ஒன்று நீர் ஆகும். நீரானது கழிவுப்பொருட்கள் நீருடன் சேர்வதனாலும் நோய்க் கிருமிகள் நீரில் வாழ்வதனாலும், நச்சுத்தன்மை வாய்ந்த உலோகங்கள் சேர்வதனாலும், கிருமிநாசினிகள் நீருடன் சேர்வதனாலும், செயற்கை அசேதன பொருட்கள் சேர்வதனாலும் நீர் மாசடைகின்றது.

தற்போதய உலகம் சத்தத்தினால் மாசடைகின்றது. ஒலிபெருக்கி, தொழிற்சாலைகள், வாகனங்கள், புகையிரதம், ஆகாய விமானங்கள் போன்றவற்றினால் வெளிவிடப்படும் சத்தம் இதற்கு உதாரணங்களாகும்.

சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். மானிடப் பண்புகள், கலாச்சாரம் போன்றவற்றைப் பேணுவதால் கலாச்சாரச் சூழலை பாதுகாக்கலாம்.

நிலம் , நீர், வளி போன்றவற்றிலிருந்து சூழல் மாசடைவதை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

சில நாடுகளில் சூழலைப் பாதுகாப்பதற்கு சில சட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. எமது நாட்டிலும் சூழலைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகளிலிருந்து வரி அறவிடுவதற்கும் அழுக்குப் பொருட்களைத் தள்ளி விடுவதை தடுப்பதற்கும் சட்டங்கள் இயற்றப்பட்டு செயற்படுத்தப்படுகின்றன. அத்துடன் சூழல் காப்பு அதிகார சபை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கரையோரப் பாதுகாப்புச்சட்டம், வனவளப் பாதுகாப்புச்சட்டம், நீர் வளச் சபைச்சட்டம், ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபைச் சட்டம், போன்ற சட்டங்களை அமுல்ப்படுத்துவதன் மூலம் சூழல் பாதுகாக்கப்படுகின்றது.

தற்பொழுது அபிவிருத்தி அடைந்த நாடுகள் மட்டுமன்றி அடைந்து வரும் நாடுகள் சூழல் மாசடைதலை எதிர்நோக்கியுள்ளது. எனவே சூழல் மாசுறுவதன் தீய விளைவுகள் பற்றியும், சூழலை பாதுகாக்க வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி நன்கு விளக்கிக் கொண்டு சூழலை பாதுகாப்பது நம் எல்லோரினதும் கடமையாகும்.

சி. வினோதா
தரம் - 10 A

# இன்றைய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்

நவீன காலத்தில் விஞ்ஞானம் அதிவேகமாக முன்னேறிக் கொண்டு செல்கிறது. இன்றைய விஞ்ஞானமானது பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி முன்னேறிக்கொண்டு செல்கின்ற காலத்தில் மனிதனும் முன்னேறுகிறான். தொழில்நுட்பமானது பல புதிய உபகரணங்களை கண்டு பிடித்து எமது நேரத்தைக் குறைத்து இலகுவில் தொழில்நுட்பம் பல உதவிகளைச் செய்கின்றது. இன்றைய விஞ்ஞானமும் தொழில்நுட்பத்தையும் நோக்கும் போது மனிதன் கணனி மூலம் ஆங்கிலக் கல்வி கற்கிறான். பல கண்டுபிடிப்புக்கள் நிகழ்கின்றது. இன்றைய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் மாணவர்களுக்கு ஒரு தூண்டுதலாக அமைகின்றது. இதன் மூலமும் மாணவர்களும் தாம் அறிவில் உயர வேண்டுமென்று விரும்பிக் கல்வி கற்கத் தொடங்குவார்கள்.


விஞ்ஞான வளர்ச்சியில் பல நாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றது. இன்றைய தொழில்நுட்பம் மூலம் மனிதர்கள் எல்லோரும் இலகுவாக அறியக்கூடிய வகையில் சிறப்பாக அமைந்துள்ளது. விஞ்ஞானத்தில் மனிதன் அணுக்களைக் கண்டுபிடித்து அவற்றைப் பிரித்து அறியக்கூடிய அளவில் வளர்ச்சியடைந்துள்ளான். விஞ்ஞானிகள் பலரும் விஞ்ஞானத்தை வளர்க்க பெரும்பாடுபடுகிறார்கள். நீல் ஆம்ஸ் றோங், எட்வின் அல்றின் ஆகியோர் சந்திரனில் முதல் முதல் காலடி வைத்தார்கள். இவர்களைத் தொடர்ந்து பலர் விண்வெளிக்குச் சென்று ஆய்வில் ஈடுபடுகின்றனர். இன்றைய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பல வழிகளில் வெற்றி பெற்றுக்கொண்டு வருகின்ற காலகட்டத்தில் பல இரசாயன உபகரணங்கள், பல வகையான இயந்திரங்கள், என்பன கண்டுபிடிக்கப்பட்டு வளர்ச்சியடைந்து செல்கின்றது. இன்றைய காலகட்டத்தில் வளர்ந்து வருகின்ற விஞ்ஞானம் எமக்கு பல நன்மைகளைத் தந்தாலும் கூட அவற்றில் தீமை தருகின்ற சில செயற்பாடுகள் உள்ளன. அணுவாயுதம் கண்டுபிடிக்கப்பட்டதால் நாடுகளுக்கிடையில் மோதல்கள் ஏற்பட்டு அணுவாயுதங்களால் தாக்கப்பட்டு மனிதர்களும் இறக்கின்றார்கள். நமக்கு முன் வாழ்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்த பொருட்கள் எமக்கு இன்று உதவியாக இருக்கின்றது. முன்பு வாழ்ந்த விஞ்ஞானிகள் அறிவிலே மேம்பட்டவர்கள். விஞ்ஞானத்தின் மூலம் உலகத்திலே வாழுகின்ற மக்களின் உயிரை மாய்க்கின்ற நோய்களைக் கூட கட்டுப்படுத்தி அந்த உயிரைக் காப்பாற்றுகின்றார்கள். விஞ்ஞானத்தின் மூலமும் விஞ்ஞானிகளின் முயற்சி, ஆற்றல் மூலமும் நாடு முன்னேறிக் கொண்டு வருகின்றது. சகல துறைகளிலும் வல்ல சிறந்த துறையாக விஞ்ஞானத்துறை காணப்படுகின்றது.

நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் இன்றைய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் காரணமாக அமைகின்றது. எந்த நாட்டில் விஞ்ஞானத்தின் வளர்ச்சி வேகமாக கூடுதலாக காணப்படுகிறதோ அந்த நாடு விரைவில் வளர்சியடைந்து மிகப் பெரிய நாடாகத் திகழும். இந்த நாட்டிலுள்ள மக்கள் சுகாதாரமாகவும் சுத்தமாகவும் வாழ்ந்து வருவார்கள். இதனால் அவர்களுடைய ஆயுட்காலம் அதிகரிக்கும்.


இன்றைய தொழில்நுட்பமானது பல துறைகளிலும் முன்னேற்றமடைந்து காணப்படுகின்றது. தொழில்நுட்பம் முனனேறுவதால் மக்களின் வாழ்க்கை இலகுவாக வளர்ச்சியடைந்து செல்லும். பல பாரிய இயந்திரங்களை கண்டு பிடித்து அவற்றின் மூலம் மக்களுக்கு பல சேவைகளை வழங்கி மக்களின் வாழ்க்கையை இலகுவாக அமைக்கின்றது.

த. பாலாயினி
தரம் - 10A

## மாணவர் தலைவர்கள் சத்தியப்பிரமாணம் எடுத்தல்



## ஒழுக்க மேற்பார்வைக் குழுவினர்



# தமிழ்மொழிப்பரம்பல்

ஆதிகாலம் முதல் இன்றைய நவீன காலம் வரை அதாவது சேர, சோழ, பாண்டியர் காலம் முதல் இன்றைய கணனி யுகத்திலும் எமது தமிழ் மொழி உலகம் எங்கும் புகழ்பெற்று விளங்குகின்றது. தமிழுக்கு அமுதென்று பெயர் என்று தமிழை பல்வேறு வழிகளிலும் புகழ்ந்து கூறுகின்றனர். எமது தமிழ் மொழி உலகம் எங்கும் பரவிக் காணப்படுகின்றது. குறிப்பாக வெளிநாடுகளில் எம் தாய் மொழியாகிய தமிழ் மொழி ஓர் சிறந்த இடத்தைப் பெற்றுக் காணப்படுகின்றது. எமது தமிழ்ப் பாரம்பரியம் ஓர் சிறந்த பாரம்பரியமாகும். ஒழுக்கமும் வீரமும் நிறைந்த எம் மொழியை எவரும் அழிக்க இயலாது. அந்த வகையிலே ஔவையாரும் எம் மொழியைப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடினார். உலகிலே மிகவும் பிரசித்தி பெற்று விளங்குகின்ற நூல்கள் பல உள்ளன. அந்த வகையிலே எமது திருக்குறள் மிகவும் பிரசித்தி பெற்றுக் காணப்படுகின்றது. கிறிஸ்தவர்களின் நூலாகிய பைபிள் நூல் உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் தமிழ் மொழி பெயர்க்கப்பட்டு முதலிடம் பெறுகின்றது.

அதே போல திருக்குறள், கம்பராமாயணம் இவ்விரு நூல்களும் எல்லா நாடுகளிலும் அந்நாட்டுக்குரிய மொழிகளிலே மொழி பெயர்க்கப்பட்டு முதலிடம் வகிக்கின்றது. வள்ளுவருடைய அறக்கருத்துக்கள் எல்லோர் மனதிலும் நின்று நிலைக்கின்றது. அதனால் எம் தாய் மொழி எல்லா இடமும் பரவி தமிழராகிய எமக்கு புகழைத் தேடித் தருகின்றது. மகாத்மாகாந்தி அவர்கள் எமது மொழிக்காக தன்னை அர்ப்பணம் செய்தார். தமிழ் என்றும் அழிந்து போய் விடக்கூடாது என்பதற்காக தமிழ்க் கலாச்சாரத்தை கடைப்பிடிக்கும் இந்திய மக்களுக்காக தன் உயிரைக்கூட துச்சமென மதித்து தமிழை ஓர் பொன்னாகக் கருதி தமிழை வளர்த்தார். எமது தமிழ் எல்லோர் மனதிலும் என்றும் நின்று நிலைக்கும். சுப்பிரமணியபாரதியார் தமிழைப் பற்றி மிகவும் அழகான முறையிலே விளக்கம் கொடுக்கின்றார்.
“கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே”

தமிழைப் போணிக் காத்தவர்கள் பலர் தமிழ் மொழிக்காக தமது உயிரை மாய்த்தவர் பலர். அதனால் இன்னும் அதிகமாக தமிழருடைய வீரம், அஞ்சாநெஞ்சம் என்பன எல்லா நாடுகளிலும் பேசப்பட்டு வருகின்றது. இதனாலும் தமிழ்க் கலாச்சாரம் எல்லா இடமும் பரவியுள்ளது என்று கூறுவதில் எந்தவித ஐயமுமில்லை. குறிப்பாக மேலைத் தேய நாடுகளில் தமிழ்க் கலாச்சாரம் அங்கே வாழும் எமது தமிழர்களால் கடைப்பிடிக்கப்படுகின்றன. எந்த இடத்திலும் எம் மொழியை கைவிடாது தமிழைக் கண் போல மதித்து தமிழுக்கு புகழ் சேர்க்கின்றனர். குறிப்பாக எம் நாட்டிலிருந்து அதாவது இலங்கையிலிருந்து வெளிநாடுகளில் கல்வி கற்கச் சென்றவர்கள் பலர் அவர்களும் தமிழ் மொழியைத் தாம் சென்ற இடங்களில் பரப்பி வருகின்றனர். பண்டைக் காலத்திலே அதாவது ஆதிமனிதர் வாழ்ந்த காலத்திலே தமிழை வளர்த்தவர் பலர். இன்றைய இந்த அதிசய உலகிலே உலகம் எங்கும் தமிழ் மொழி பரவிக் காணப்படுகின்றது. கிறிஸ்தவர்களின் நூல் பரிசுத்த வேதாகமம். அந்நூல் உலகில் எங்கு சென்றாலும் தமிழ் மொழியிலே பெற்றுக் கொள்ளலாம். கம்பருடைய கவித்தத்துவம் எமது இலங்கையிலே சிங்களவர் மத்தியிலும் ஓர் சிறந்த இடத்தைப் பெறுகின்றது. நாம் கண்ட இனிய மொழிகளிலே இனிதான தமிழ்


மொழி போலக் காணோம். குறிப்பாக இப்பொழுது இடம்பெறும் கொடிய யுத்தத்தின் விளைவாக எம் மொழி எல்லா இடங்களிலும் பரவிக் காணப்படுகின்றது. குறிப்பாக பத்திரிகை, வானொலி போன்றவற்றினூடாக இச் செய்திகள் உடனுக்குடன் எல்லா நாடுகளிலும் பரவுகின்றது. அதனாலும் தமிழ் மொழி பரம்பலடைகின்றது. தமிழிற்காக இறந்த பெரியவர்கள் தமிழிற்காக பாடுபட்ட பெரியவர்கள் குறிப்பாக சுவாமி விபுலானந்தரின் சிறந்த வழிகாட்டல்களினால் தமிழ் என்றும் நிலைத்திருக்கின்றது.

எம் தமிழிற்கு அழிவு என்றதே இல்லை. குறிப்பாகக் கூறின் இந்துக்களுடைய வழிபாட்டு முறைகள், அவர்களின் பழக்க வழக்கம் முதலானவையும், கிறிஸ்தவர்களின் வணக்க முறையும் எல்லா இடங்களிலும் தமிழ் மொழியிலே போதிக்கப்படுகின்றன. சிறப்பாகக் கூறுவோமாயின் வெள்ளை இனத்தவர் வாழும் மிகவும் பிரசித்தி பெற்ற நாடுகளிலே எமது தமிழ் மொழியை விரும்பிக் கற்கின்றனர். வெளிநாடுகளில் தமிழ் மொழியிலே கல்வி கற்பிக்கப்படுகின்றது. தமிழருக்கென ஒரு கலாச்சாரம் ஒரு ஒழுங்கு கடைப்பிடிக்கப்படுகின்றது. இதனாலும் தமிழ் பரம்பலடைகின்றது. சிறப்பாகக் கூறின் எமது நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு கற்க கற்பிக்க விரைபவர்கள் பெரும்பாலானவர்கள். அவர்கள் அங்கே சென்று தமிழைக் கடைப்பிடிக்கின்றனர். தமிழிற்காக குரல் கொடுக்கின்றனர். தமிழை தம் உயிர் என நினைத்து கடைப்பிடிக்கின்றனர். தமிழிற்காக பல விழாக்கள் எடுக்கப்படுகின்றன. அதாவது தைப்பொங்கல், தீபாவளி, கிறிஸ்தவர்களுக்குரிய விழாக்கள் கிறிஸ்மஸ், உறிர்ப்பு ஞாயிறு என்று பலவிதமாக விழாக்கள் எடுக்கப்படுகின்றன. இப்படியான விழாக்களினூடாகவும் எமது மொழி பரவ வாய்ப்புண்டு. வெளி நாடுகளிலிருந்து வரும் புற இனத்தவர் எம் நாட்டுக் கலாசரத்தைக் கடைப்பிடிக்க விரும்புகின்றனர். இதனால் எம்மொழி எம்கலாச்சாரம் கூடுதலான முறையிலே பரவலடைகின்றது. தமிழுக்காக பாடுபட்டவர்கள் எம் மொழியை என்றும் அழியவிடாது எம் கையில் ஒப்படைத்துள்ளனர். நாம் எம் தமிழை எல்லா இடமும் சென்று பரப்ப வேண்டும்.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

கல்வியைக் கற்று அதன்படி வாழ்ந்தால் மட்டும் போதாது அதன்படி ஒழுக வேண்டும் என்று கூறுகின்றது இக்குறள். இதே போல குறள்கள் வேறு எந்தவிதமான புத்தககங்களிலும் வெளிவரவில்லை. ஒழுக்கத்தைப் பேணும் வகையில் குறள்கள் அமைந்துள்ளன. அதனால் தமிழ், எங்கும் என்றும் பரவும் தமிழ்ப் பரம்பலை எவராலும் தடுக்க இயலாது. பெரியவர்கள் காட்டிய பாதையிலே போகும் எம் தமிழ் மக்களுக்கும் தமிழிற்கும் அழிவு என்னும் ஒரு சொல் கிடையாது. வெள்ளையர்கள் நம் நாட்டை ஆண்ட போதும் தமிழ் மொழிக்காக பலர் குரல் கொடுத்தனர். அதனால் எம் தமிழ் மொழி அவர்கள் மத்தியிலும் பரம்பலடைந்தது. எம் தமிழ் முன்னைய காலங்களை விட இன்றைய நவீன யுகத்திலே இன்னும் கூடுதலான முறையில் அதாவது நவீன கருவிகளினூடாக உடனுக்குடன் பரவி தமிழ் நிலை நிற்கின்றது. எனவே ஆதிகாலத்தை விட இந்தக் காலத்தில் தமிழ் எல்லா இடமும் பரவிக் காணப்படுகின்றது என்று கூறுவதில் எவ்வித ஐயமுமில்லை.

ம. சுரேக்கா
2004 A/L
கலைப்பிரிவு.



பரிசளிப்பு விழாவில் நிறுவுநரின் திருவுருவப்படம்
பிரதம விருந்தினர் எம்.ரி. செல்வராஜா (ப.மா.ச)
சிறப்பு விருந்தினர் யோ. இரவீந்திரன் (பிரதிக் கல்விப்பணிப்பாளர்)
கல்லூரி முதல்வர் சகிதம் கற்பகப் பிள்ளையார் கோவிலிருந்து
கல்லூரிக்கு அழைத்து வரும் வைபவம்.

## உயர்தரமாணவர் மன்ற ஒன்று கூடல் – 2003



பிரதம விருந்தினர் திரு. கு. திருக்குமரன் – மங்கல விளக்கேற்றல்
(விரிவுரையாளர், விவசாயபீடம் யாழ். பல்கலைக்கழகம்)

# ஒழுக்கம் உயர்வு தரும்

"ஒழுக்கம் விழுப்பந் தரலாம் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்" நாம் மாணவர்கள். மாணவர்களுக்கு ஒழுக்கம், பணிவு, மதித்தல் ஆகிய பண்புகள் இருக்க வேண்டும். பாடசாலைக்கு ஒழுங்காக வரவும் என்று ஆசிரியர்கள் எங்களுக்கு ஒழுக்கத்தைப் பற்றி படிப்பிப்பார்கள். நாம் ஆசிரியர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் மதிப்பளித்தல் வேண்டும். நாங்கள் ஏதாவது ஒரு இடத்திற்குப் போனால் அங்கு முதல் நாம் ஒழுக்கமாக இருக்க வேண்டும். அப்பேத்தான் நாம் மகிழ்ச்சியாக இருக்கலாம். நாம் மாணவர்கள் நாம் பெரியவர்களுக்கு மதிப்பளித்தால் அவர் எங்களைத் தூக்கி வளர்ப்பார். நாம் அவர்களுக்கு கீழ்ப்பணிய வேண்டும். "ஒழுக்கம் விழுப்பந் தரலாம் ஒழுக்கம் உயிரிலும் ஓம்பப்படும்;" என்ற குறளைப் பார்த்தால் நாம் ஒழுக்கத்தைப் பேணி நடத்தல் தான் ஒழுக்கம். நமக்கு உயர்வு தரும். அப்படியானால் நாம் ஒழுக்கமாக வாழப் பழக வேண்டும். நாம் சிறுவயதிலிருந்து பழகிய பழக்கம் பெரியவனான பின்பும் இருக்கும். ஆகையால் நாம் சிறுவயதில் ஒழுக்கமாக இருந்தால் தான் நாம் பெரியவர்களானாலும் நல்ல பழக்கங்களை அறியலாம். "தொட்டில் பழக்கம் சுடு காடு வரை" என்ற பழமொழி நாம் பழகிய பழக்கம் தான் எமது எதிர்காலத்தையே பாதிக்கும்.

எமது பாடசாலையில் கல்வியிலும் அதிபர், ஆசிரியர்கள் தமது ஒழுக்கத்தை எப்படி பாதுகாத்து தமது மரியாதையையும் தமது புகழையும் பாதுகாத்து வருகின்ற மாதிரித்தான் மாணவர்களும் கல்வியையும் ஒழுக்கத்தையும் பாதுகாத்து வைத்திருப்பார்கள். ஆகையால் மாணவர்களாகிய நாம் அதிபர், ஆசிரியர்கள் போலவே ஒழுக்கமாகவும், பணிவாகவும் படித்தால் நமது படிப்பில் நாம் எதையும் சாதிக்கலாம். நாம் படித்து ஒரு ஆசிரியர் வேலைகளுக்காவது போய் மாணவர்களுக்கு ஒழுக்கத்தையும் பணிவையும் கற்றுக்கொடுக்க வேண்டும். முதல் ஆசிரியர் மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் பாடம் ஒழுக்கம்.

நமக்கு ஆசிரியர்கள் ஒழுக்கத்தை கற்றுத்தந்தால்தான் நாம் எங்கு சென்றாலும் ஒழுக்கமாகவும் மகிழ்சியாகவும் வாழலாம்.

நாம் பாடசாலைக்கு, கோயிலுக்கு, ரியூசனுக்கு ஏனைய வகுப்புகளுக்கு ஒழுங்காகப்போனால் தான் ஆசிரியர்களுடன் அன்பாகப் பழகலாம். ஆசிரியர்களும் எங்களுடன் அன்பாகப் பழகுவார்கள். ஆசிரியர்களுடன், மாணவர்களுடன், நண்பர்களுடன், குடுப்பத்துடனும் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருக்க வேண்டும்.

எனது அம்மா என்னை அன்பாகவும் சந்தோஷமாகவும் ஒழுக்கத்தைப் பற்றியும் சொல்லித்தந்து என்னை வளர்த்து வந்தார். நான் அவர்களுக்கு அன்பும் பணிவும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். மாணவர்களுக்கு அன்பும் பணிவும் ஒழுக்கமும் இருக்க வேண்டும். ஆசிரியர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக வந்தால் தானே நாமும் ஒழுக்கத்தைப் பற்றி படிக்கலாம். மாணவர்களாகிய நாங்களும் ஆசிரியர்களாகிய

நீங்களும் ஒழுக்கமாகவும் சமாதானமாகவும் இருந்தால் நமக்குள் ஒரு பிரச்சினையும் வராது.

மாணவர்களாகிய நாங்கள் நண்பர்களுடன் சண்டை செய்யாமல் சாமாதானமாக நடந்து கொள்ள வேண்டும். அது தான் ஒரு மாணவனுக்கு இருக்க வேண்டிய ஒழுக்கம். அந்த ஒழுக்கத்தையும் இழந்தால் அவன் ஒரு மோடன் என்று தான் சொல்லுவார்கள். ஒரு மாணவனுக்கு ஒழுக்கம் இருக்க வேண்டும் அது தான் அழகு. கல்விக்கு அழகு கசடற மொழிதல். ஆகையால் மாணவர்களாகிய நாங்கள் ஒழுக்கத்தை கடைப்பிடித்து வாழ வேண்டும். தெய்வத்தை நம்பு முயற்சி கைகூடும் என்ற பழமொழி ஒரு நல்ல பண்பைத் தான் சொல்லுகிறது. அதேமாதிரி ஒழுக்கத்திலும் ஒரு சிறந்த பண்பு இருக்கின்றது. ஒருவர் தனது காசை அதில் வைத்துவிட்டுப் போய்விட்டால் அதை நாம் எடுத்து அவரிடம் கொடுக்க வேண்டும் அதுதான் ஒரு மாணவனிடம் இருக்க வேண்டிய பண்புகள். ஒருவர் என்னிடம் ஆயிரம் ரூபா காசு தருகிறார். இதை வைத்து தா என்று ஒருவர் நம்பிக்கையாகத் தந்ததை நாம் எடுக்கலாமா? இல்லை. நாம் அதை பத்திரமாக வைத்திருந்து கொடுத்தால் தான் நேர்மையாகவும் ஒழுக்கமாகவும் வாழ முடியும்.

"ஒழுக்கம் விழுப்பந் தரலாம் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்."
"ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா"
"ஒழுக்கம் உயர்வு தரும்"

யோ. யோன்மயூரன்
தரம் - 9B

வெள்ளத்தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத்தினை துயர்வு?
குளத்தில் நீர் உயருமளவுக்குத் தாமரை அல்லி முதலிய நீர்ப் பூக்களின் செடிகளும் உயரும். நீரின் உயரம் குறையக் குறைய செடிகளின் உயரமும் குறையும். நீரின் உயர்ச்சி எவ்வளவோ அவ்வளவே நீர்ச் செடிகளின் நீளமும் அதேபோலவே மக்களும் ஊக்கம் மிக்கதான வாழ்க்கையில் உயருவர். ஊக்கம் குறைய வாழ்க்கையில் குன்றுவர். வாழ்கையின் உயர்ச்சியும் இன்பமும் புகழும் ஊக்கத்தினாலே.

## சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்த, அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், தீர்வுகளும்.

சர்வதேச வியாபாரத்தில் ஈடுபடுகின்ற அபிவிருத்தி அடைந்த, அடைந்து வருகின்ற எல்லா நாடுகளும் வியாபாரம் தொடர்பாக பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றன.

சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் வருமாறு. இந்நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் எதிர் நோக்கும் மிகப் பிரதான பிரச்சினை முதல் நிலைப் பொருட்களின் விலை வீழ்ச்சியும் விலைத்தளம்பலும் ஆகும். அதாவது இந்நாடுகள் முதல்விளைவு உற்பத்திப் பொருட்களான விவசாயப் பொருட்களை உலக சந்தைக்கு ஏற்றுமதி செய்கின்றன. உலக சந்தையில் இவற்றின் விலை வீழ்ச்சியடைதலும், அடிக்கடி விலைத்தளம்பலும் ஏற்பட்டு இவற்றின் மூலம் கிடைக்கின்ற வெளிநாட்டு வருமானம் குறைவடைகின்றது. இவ்வருமானக்குறைவு இறக்குமதி ஆற்றலை குறைக்கிறது. இந்நிலையில் அவசியமான பொருட்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாடுகளிலிருந்து கடன் பெறவேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதன் காரணமாக இந்நாடுகள் பாதிப்படைகின்றன.

அடுத்து முதல்நிலை வர்த்தகப் பொருட்களை விற்பனை செய்வதில் காணப்படுகின்ற இடையூறுகள் அதாவது சர்வதேச வியாபாரத்தில் ஈடுபடுகின்ற நாடுகள் முதல்விளைவு உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றன. அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் பொருட்களை விற்பனை செய்கையில் தமக்கிடையே போட்டி போடுவதுடன் அபிவிருத்தி அடைந்த நாடுகளுடன் போட்டி போடவேண்டியுள்ளது. இதனால் பொருள் விற்பனையில் இந்நாடுகள் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றன.

முதல்நிலை பொருட்களின் பெறுமதியின் பெரும் பகுதி அபிவிருத்தி அடைந்த நாடுகளை சென்றடைதல் அடுத்த பிரச்சினையாகும். அதாவது அபிவிருத்து அடைந்து வரும் நாடுகள் வெளிநாட்டு வியாபாரத்தின் மூலம் சம்பாதிக்கின்ற வருமானத்தின் பெரும்பகுதி அபிவிருத்தி அடைந்த நாடுகளைச் சென்றடைகிறது. ஏற்றுமதி வியாபாரத்தில் ஈடுபடும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகள் பல சேவைகளை வழங்கி அதற்காக அவர்களிடமிருந்து கட்டணங்களை அறவிட்டுக்கொள்கிறது. இதனால் வருமானத்தின் பெரும்பகுதி அபிவிருத்தியடைந்த நாடுகளைச் சென்றடைகிறது.

அடுத்து அபிவிருத்தி அடைந்த நாடுகள் சர்வதேச வியாபாரத்தில் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் வருமாறு. மூலப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் இந்நாடுகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றன. அதாவது இந்நாடுகள் கடந்த காலங்களில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிடமிருந்து மூலப்பொருட்களை பெற்றுக்கொண்டது. ஆனால் தற்காலத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் முடிவுப்பொருள் உற்பத்தியில் ஈடுபடுவதால் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மூலப்பொருட்களைப் பெறுவதில் தடைகளை எதிர்நோக்குகின்றன.

அடுத்து பெற்றோலியப் பொருட்களின் விலையுயர்வு காரணமாக அபிவிருத்தி அடைந்த நாடுகள் பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. அதாவது அபிவிருத்தி

அடைந்த நாடுகள் கைத்தொழில் பொருட்களை உற்பத்தி செய்யும் கைத்தொழில் நாடாகும். இவற்றிற்கு சக்தி மூலமாக பெற்றோலியம் பயன்படுகிறது. இந்நிலையில் பெற்றோலியப் பொருட்களின் விலையுயர்வு அபிவிருத்தி அடைந்த நாடுகளை பாதிப்படையச் செய்கிறது.

இத்தகைய நாடுகள் சர்வதேச வியாபாரத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வு காண பின்வரும் நடவடிக்கைகள் கொண்டுவரப்பட்டது. ஏற்றுமதியை பன்முகப்படுத்தல் திட்டமாகும். அதாவது ஏற்றுமதி அளவையும் வகையையும் அதிகரித்தல் ஏற்றுமதி பன்முகப்படுத்தல் எனப்படும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் ஒரு சில வகையான பொருட்களை தொடர்ந்து ஏற்றுமதி செய்கின்றன. இதனால் அந்நாடு வருமான ரீதியான அதிகரிப்பை பெற்றுக்கொள்ள முடியாது உள்ளது. இந்நிலையில் வருமான இழப்பை ஈடுசெய்யவும் அதனை அதிகரிக்கவும் ஏற்றுமதியில் பல வகையான பொருட்களை ஏற்றுமதி செய்வதுடன் அவற்றின் அளவையும் அதிகரிக்கும் நடவடிக்கையில் நாடுகள் ஈடுபடுகின்றன. இத்தகைய நடவடிக்கையே ஏற்றுமதி பன்முகப்படுத்தல் எனக்கொள்ளப்படுகிறது. இலங்கை ஆரம்ப காலம் முதல் தேயிலை, இறப்பர், தெங்குப்பொருட்கள் ஆகியவற்றையே ஏற்றுமதி செய்து வந்தது. ஆனால் தற்காலத்தில் பெருந்தோட்டப்பொருட்களின் ஏற்றுமதி மூலம் வருமானம் குறைவடைய தொடங்கியதால் வருமானத்தை அதிகரிக்க கறுவா, கராம்பு, கோப்பி, கொக்கோ, சிங்கோனா, மிளகு, பாக்கு, வெற்றிலை, ஆகியன ஏற்றுமதி பன்முகப்படுத்தல் திட்டத்தின் கீழ் ஏற்றுமதி செய்யப்பட்டன.

அடுத்து வர்த்தக உடன்படிக்கையை ஏற்றுக்கொள்ளல் ஆகும். சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுகின்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தமக்கிடையே வர்த்தக உடன்படிக்கைகளை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் வெளிநாட்டு வியாபாரத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். இவ்வர்த்தக உடன்படிக்கை வியாபாரத்தின் மூலம் தீர்வை சலுகைகளை பெற்றுக்கொள்ள முடியும். வரிவிலக்குகள் அனுமதிக்கப்படும். செலாவணிப் பிரச்சினை காணப்படமாட்டாது. போன்ற நன்மைகளை அனுபவிக்கலாம்.

அடுத்து வெளிநாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களிலிந்து நாடுகள் நிதி, பண்டம், சேவைகள் எனும் அடிப்படையில் பெறும் உதவிகள் வெளிநாட்டு • உதவிகள் எனப்படும். சர்வதேச வர்த்தகத்தில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சென்மதி நிலுவைப் பிரச்சினையை எதிர்நோக்குகின்றன. இதனை நீக்கும் வகையிலேயே வெளிநாட்டு உதவிகள் பெறப்படுகின்றன. ஏற்றுமதி வருமானம் குறைவடைவதால் இறக்குமதி செலவீனத்தை சமாளிக்க மற்றும் தேவையான பொருட்களை இறக்குமதி செய்து கொள்ளவும் வெளிநாட்டு உதவிகள் பெறப்படுகின்றன. இத்தகைய வெளிநாட்டு உதவிகளின் பிரிவுகள் கடன்கள், நன்கொடைகள் ஆகும்.

"மேற்குறிப்பிட்டவையே சர்வதேச வியாபாரத்தில் அபிவிருத்தி அடைந்த, அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினையும் அவற்றிற்குரிய தீர்வு நடவடிக்கைகளும் ஆகும்."

யோ. தினேசன்
தரம் - 11A

# கூண்டுக் கிளி ஒன்று தன் கதை கூறுதல்

பச்சைக் கிளியே வா வா வா
பாலும் சோறும் தின்ன வா
கொச்சி மஞ்சள் பூச வா
கொஞ்சி விளையாட வா

என்று ஒரு சிறுவர் கூட்டமே என்னைப் பார்த்து சந்தோசத்துடன் பாடிக்கொண்டிருக்கின்றனர். அவர்களது மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. ஆனால் எனக்கும் நான் இருப்பது ஓர் அழகான தங்கத்தட்டில் தான். உண்பதற்கு பல விதமான பழங்கள் பருகுவதற்கு பால் என்றாலும் இல்லை. எதிலும் எனக்கு நாட்டம் ஏற்படவில்லை. ஏன் தெரியுமா எனது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் என எவருமே என் அருகில் இல்லையே. எல்லையற்ற பரந்த வானிலே பறந்து திரிய எனக்குச் சுதந்திரம் இல்லையே. ஆமாம் குழந்தைகளே நான் இப்போது கூண்டில் அடைபட்டிருக்கும் பச்சைக் கிளியே தான்.

நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் கொண்டது. பச்சைக் கம்பளம் விரித்தது போன்ற கமனசததொ ஊர்கள் இன்னிசைக் கீதம் இசைத்தபடி பாய்ந்து வரும் அருவிகள் நன்கு செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள் அவற்றிலே பழுத்து மணம் பரப்பும் கனிகள் அக்காட்சிகளைப் பார்த்துக் கனிகளை உண்டு நான் உல்லாசமாகப் பறந்து கொண்டிருப்பேன்.

எப்போது விடியும் எனக் காத்திருப்பேன். விடிந்ததும் என் நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு மழலை மொழி பேசிய வண்ணம் பறப்பேன். சூரியனது பொற் கிரகணங்களையும் தென்றல் காற்றினது இதமான வருடலையும் என்றும் மறக்க முடியாத மாலை வேளையும் எனக்கு சந்திரனையும் கண்சிமிட்டி நட்சத்திரங்களையும் எனது கூட்டத்தாரையும் சேர்த்தே ரசிப்பேன்.

இன்னுமொன்றைக் கூற மறந்துவிட்டேன். சின்னச் சின்ன மழைத்துளிகளில் நனைய எனக்கு மிகவும் விருப்பம். அத்துளிகளில் நனைந்தபடி பறந்து செல்லும் போது மழைத்துளி பட்டுச் சிரிக்கும் மரங்களையும் கண்டு இரசிப்பேன். ஊங்களைப் போன்ற குழந்தைகளும் மழையில் ஆனந்தத்தோடு நனைந்து மகிழ்வதையும் கண்டு அனுபவிப்பதுண்டு. இபபோது நீங்களும் என்னைப் பார்த்து மகிழ்கிறீர்கள். ஆனால் நான் கவலைப்பட்டுக் கொண்டுடிருப்பது உங்களுக்கு தெரிகின்றதா? இல்லையே.


எத்தனை விதம் விதமான பழங்களை நீங்கள் எனக்கு தந்திருக்கின்றீர்கள். ஆனாலும் சுதந்திரகாமப் பறந்து திரிந்து மரங்களிலே பழுத்திருக்கும் கனிகளைக் கொத்தித் தின்பதிலுள்ள சுவை இதிலே கிடைத்திடுமா?அதுபோல சுதந்திரமாக தானியங்களைக் கொத்தி உண்பதில் உள்ள சுகங்கள் இங்கே உண்டா?

முன்பெல்லாம் சின்னஞ் சிறிய வயிற்றுக்கு உணவாகத் தானியங்களையும் தேடிச் செல்வேன். தனியாக அல்ல பரந்த வயல் வெளிகள் எனது நிறத்தைப் போலவே பசுமையாகிக் காட்சியளிக்கும் கதிர் சுமந்த நெல்லினங்களும் எம்மைத் தலை அசைத்து வரவேற்கும். பொன்னிறமாகக் காட்சி தரும் கதிர்களில் எதைச் சுவைப்பது

எதை கிரிவோம். நாம் கூட்டமாகச் சென்று அட்டகாசம் புரிவதனால் மனிதர் எம்மைக் கண்டதும் விரட்டுவார்கள். நாங்கள் பயந்து திரும்பிச் செல்வதாகப் போக்குக் காட்டி விட்டு மீண்டும் அவ் இடத்திற்கே வந்து சேர்ந்துவிடுவோம்.


என் நிலையை உணர்ந்து உனக்கு விடுதலை பெற்றுத்தர விரும்பும் மனித உள்ளங்களை எதிர் பார்த்து என் வாழ் நாளைக் கழித்து வருகின்றேன். எப்போ எனக்கு விடிவு கிட்டும்?

பாலும் எனக்கு தேவையில்லை
பழமும் எனக்கு தேவையில்லை
சோலை எங்கும் கூவி நிதம்
அற்றித் திரிதல் போதுமம்மா



**குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின் மதிக்கண் மறுப்போலுயர்ந்து.**
உயர் குடிக்குரிய பண்புகளெல்லாம் பெற்று உயர்ந்த நிலையெய்தி பலருக்கும் பயன்படும் நிலையிலும் பலரும் போற்றும் நிலையிலும் வாழும் நல்லோர் ஒருவரிடம் சிறு குற்றம் தோன்றினாலும் அக் குற்றம் சந்திரனின் தூய ஒளியின் மத்தியில் கருமை தெரிவது போல அக் குற்றம் யாவருக்கும் தெளிவாகவும் பெரியதாகவும் தோன்றும்.

**தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர் நிலையின் இழிந்தக் கடை.**
கல்வி, செல்வம், பதவி, புகழ் முதலியவற்றால் மலைபோல் உயர்ந்துவரும் மானம்கெடும் செயலை குன்றி மணியளவு செய்தாலும் மதிப்பிழந்து தாழ்ந்துவிடுவர்.



**பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினர்**
திரு. & திருமதி M.T செல்வராஜா (ப.மா.ச. லண்டன்) அவர்கள்
மங்கல விளக்கேற்றல்




Dr. இந்திரராஜா அவர்களால் இவ்வரங்கு
சம்பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

# சுவாமி விபுலானந்தர்

கிழக்கிலங்கையின் விடிவெள்ளி எனத் தோன்றிய சுவாமி விபுலானந்தர் அவர்களின் பிள்ளைத் திருநாமம் மயில்வாகனமாகும். இவர் சாமித்தம்பிக்கும் கண்ணம்மையாருக்கும் மகனாக அவதரித்தார். முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகள் விஞ்ஞான மாணிப்பட்டமும் பண்டிதர் பட்டமும் பெற்றவர். இவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இலத்தீன் ஆகிய மொழிகளில் வல்லுனர். மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபராக விளங்கினார். துறவு வாழ்க்கையை மேற்கொண்டு பிரபோத சைதன்யர் என்ற பட்டப் பெயரைப் பெற்றார். இலங்கைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் முதலாவது தமிழ்ப் பேராசிரியராக் விளங்கினார்.

தமிழ் மொழியின் தொன்மை பற்றியும் பரந்துபட்ட தமிழ் இலக்கிய வளம் பற்றியும் நூற்றுக்கு மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருந்தார். சங்க நூல்களைக் கற்ற பேரறிஞர். தமிழ் இலக்கண நூல்களைக் கற்றறிந்த பேராசான். ஊரைநடை எழுதுவதில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவர். சிறந்த கவி புனையும் பேராற்றல் மிக்கவர். இவரது கவிதைகள் பெரும்பாலும் சமயத்துறை தழுவியவை. எனினும் இவர் இயற்றிய யாழ் நூல், மதங்க சூளாமணி போன்ற நூல்களே இவருக்கு பெயரையும் புகழையும் பெற்றுத்தந்தன. யாழானது நரம்புக்கருவியைச் சேர்நதது. மகர யாழ், சீறி யாழ், சகோட யாழ் எனப் பல்வேறு வகை யாழ் பற்றிக் கூறப்படுகின்றது. காலப்போக்கில் மக்கள் சமூக நல ஈடுபாட்டை தமது கவிதைகளிலே காட்டி நின்றார்.

இசைத் தமிழில் மிகுந்த ஈடுபாடும் ஆராய்ச்சியும் பொருந்தியவர். இயல் இன்றி இசை இல்லை. இசை இன்றி இயல் இல்லை என்பது அவரது கொள்கை. விபுலானந்தர் இலக்கியச் சுவை என்ற கட்டுரையில் கவிதையின் ஓசை நயம் பற்றிக் கூறுகின்றார். நான்மணிமாலை, தோத்திரம், தேவபாணி, முதலான வடிவங்களையும் அவர் ஆக்கத் திறனுடன் கையாண்டுள்ளார். "ஈசன் உவர்க்கும் இன்மலர்" என்ற பாடலில் "வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்னும் பாடலில் வரும் "உள்ளக்கமலம்", "கூப்பியகை காந்தள்", "நாட்ட விழி நெய்தல்" என்னும் உயரிய உருவகங்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு நிற்கின்றன. இவரது நடையழகுக்கும் கற்பனைச் சிறப்புக்கும் ஆதாரமாக இவற்றைக் குறிப்பிடலாம்.

மொழி பெயர்ப்பு பணி மூலமும் விபுலானந்தர் தமிழ் மொழியைச் சிறப்படையச் செய்துள்ளார். இவர் பாடிய ஆங்கில வாணி என்னும் பாட்டிடையிட்ட உரைத் தொடர் நிலையானது. ஆங்கில மொழிக் கவிநயத்தினை துய்த்திட ஆங்கில மொழிப் புலமையற்றவர்களை ஆற்றுப்படுத்துவதாய் அமைந்துள்ளது. இராமகிருஸ்ண சங்கத்தின் ஆங்கில மொழி இதழ்களான வேதாந்த கேசரி, பிரபுத்த பாரதம் என்பவற்றின் ஆசிரியராகப் பணிபுரிந்து பிற மொழி பேசுவோரும் தமிழ் மொழியின் பெருமையைப் போற்றிட வழி செய்தார்.

தனது நண்பர் கந்தசுவாமிப் புலவர் இறந்த செய்தி கேட்டு "கங்கையில் விடுத்த ஓலை" என்ற நூலை இயற்றினார். "தாழ்வதும் மடிவதும் தரணியில் வந்துதித்தோர்" மாய்தல் என்னும் பேருண்மை . இறத்தல் என்னும் பேருண்மை முதலிய


நிலையாமைக் கருத்துக்களை இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இராமகிருஸ்ண சங்கத்தினூடாக காரைதீவு உப்போடை, கல்லடி, திருகோணமலை ஆகிய இடங்களில் பாடசாலைகளை அமைத்தார். தமிழ் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு சீரிய தொண்டாற்றினார். தமது இறிதி மூச்சு வரை தமிழுக்கே அர்ப்பணித்து சீரிய தமிழ்த் தொண்டாற்றி தமிழுக்கு பெருமை சேர்த்த புலவர் வரிசையில் குறிப்பிடத்தக்கவர். அன்னாரை நாம் என்னாளும் மறவோம்.

த. பாலாஜினி
தரம் - 11A

## சிந்தனைக்கு சில துளிகள்


1. தனது ஆற்றலை உணர்ந்தவன் தன்னுடைய துன்பத்தை இழந்தவன் ஆவான்.
2. நன்மையான வாழ்க்கையும் இன்பமான மரணமும் உண்மையான அருளாகும்.
3. ஒவ்வொரு மனிதனும் தான் படும் துயரத்திற்கு தானே பொறுப்பாளி.
4. தன்னை அறிவது அறிவு தன்னை மறப்பது மடமை.
5. ஆழ்ந்த அன்பிலே உண்மை மலர்கின்றது.
6. கற்புடைய பெண் வாழ்க்கையின் விளக்காகவும் வழிகாட்டியாகவும் விளங்குகின்றாள்.
7. நண்பர்களைப் பற்றி நல்லது பேசு எதிரிகளைப் பற்றி ஒன்றும் பேசாதே.
8. பிறரை விமர்சிக்கும் முன்னால் உன்னை நினை.
9. நம் பகைவனே நம்மை அறிவாளியாக்குகிறான்.
10. எவன் ஒருவன் புகழை வெறுக்கிறானோ அவனுக்கு உண்மையான புகழ் தானாக வந்தடையும்.
11. கல்வியில் செருக்கடைதல் முதன்மையான அறியாமை.
12. இதுவரை நீ என்ன செய்திருக்கிறாய் என்பதை வைத்தே உலகம் உன்னை எடை போடுகிறது.
13. இருட்டாக இருக்கிறது என்று முணுமுணுப்பதை விட ஒரு மெழுகுவர்த்தியை ஏற்றி வைப்பது மேல்.
14. தலையைக் காட்டிலும் உன் நாக்குக்கு விடுமுறை கொடு.
15. வாழ்க்கையின் வேகத்தைக் கண்டு முறிந்து போய் விடாதீர்கள் பிரச்சனைகளுக்கு வளைந்து கொடுத்து முன்னேறுங்கள்

துஷ்யந்தி யோகேந்திரன்,
A/L 2004 கலை



**இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2003**

**பிரதம விருந்தினர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள்**
(நல்லூர் பலநோக்குக் கூட்டறவுச் சங்கத் தலைவர்)
**மங்கள விளக்கேற்றும் வைபவம்**



வருடாந்த இல்லமெய்வல்லுநர் போட்டியில்
இல்ல மாணவர் தலைவர்களின் சத்தியப் பிரமாணத்தை ஏற்று
பிரதம விருந்தினர் பதிலுரை வழங்கல்.

## நாடுகளும் தலைநகரங்களும்

| நாடு | தலைநகரம் |
|---|---|
| கனடா | ஒட்டாவா |
| சுவிஸ் | பேர்ண் |
| பிரான்ஸ் | பாரிஸ் |
| நோர்வே | ஒஸ்லோ |
| ஜப்பான் | ரோக்கியோ |
| சீனா | பீக்கிங் |
| ரஷ்யா | மொஷ்கோ |
| பர்மா | ரங்கூன் |
| இந்தியா | நியூடெல்கி |
| பாகிஸ்தான் | இஸ்லாமாபாத் |
| மலேசியா | கோலாலம்பூர் |
| வங்காளதேசம் | டாக்கா |
| சுவீடன் | ஸ்ரக்கோம் |
| ஈரான் | தெ.்ரான் |
| ஈராக் | பக்தாத் |
| இஸ்ரேல் | டெல் அவேு |

இ. சுனிஸ்
கு. விஜிதன்
தி ஜென்சிராஜ்

## முதலுதவிப் பெட்டியில் இருக்கவேண்டிய பொருட்கள்

1. நுண்ணியிர் கொல்லி மருந்துகள்
   உதாரணம் (டெற்றோல், சவலோன், ஐதரசன்பர ஒட்சைட், கொண்டிசு போன்றன)
2. வலி நிவாரணி மாத்திரைகள்
   உதாரணம் (பனடோல், பரசிற்றமோல், அஸ்பிறின் போன்றவை)
1. பந்தனப்பட்டிகை
2. வலைத்துணி
3. பஞ்சு
4. சிறிய கத்திரிக்கோல்
5. சிறிய இடுக்கிக் குறடு
6. ஒட்டக் கூடிய பிளாஸ்ரர்
7. நாக ஒட்சைட்டுப் பசை
8. 1 % சோடியம் இருகாபனேற்றுக் கரைசல்
9. 1 % போரிக்கமிலம்
10. 1 % அசிற்றிக்கமிலம்
11. வெள்ளி நைத்திரேற்றுக் கரைசல்

சி. நிசாளினி
ஜெ. ஜெயவாணி
ம. சுகந்தினி
தரம் - 6B

# நகைச் சுவைத் துணுக்குகள்

1. ஒருவர் :- வாயைக் கட்டி வயிற்றைக் கட்டி பணத்தைச் சேர்த்து வைத்தேனே.
மற்றவர் :- அதுக்கென்ன?
முதலாமவர்:- திருடன் என் கையைக் கட்டி காலைக் கட்டி திருடிக்கொண்டு போய்விட்டான்.

2. மாணவன் :- நான் எதையாவது செய்தாலும் ஆசிரியர் அடிக்கிறார். செய்யாவிட்டாலும் அடிக்கிறார்.
தந்தை :- அப்படி நீ என்னதான் செய்தாய்? என்ன செய்யவில்லை?
மாணவன் :- குறும்பு செய்தேன். வீட்டுப் பாடம் செய்யவில்லை.

3. ஆசிரியர் :- அது என்ன கொப்பி முழுவதும் உப்பு, புளி என்று கடன் வாங்கின
கணக்காக இருக்குதே?
மாணவன் :- சேர்! நீங்க தானே வீட்டுக்கணக்கு கொண்டுவரச் சொன்னீர்கள்.

1. பெண்ணின் தந்தை :- என்ன தரகரே! மாப்பிள்ளையின் உடம்பெல்லாம் வெள்ளைத் துணியினால் கட்டுப் போட்டிருக்கு?
தரகர் :- நீங்க தானே அண்ணை நல்ல உடல் கட்டான மாப்பிள்ளை
வேணும் என்று சொன்னீங்கள்.

5. குரு :- முற்றுந் துறந்தவனையே என் சீடனாக ஏற்றுக்கொள்ள முடியும்.
சீடன் :- என்னால் அப்படி இருக்க முடியாது சுவாமி. எனக்கு வெட்கமாக இருக்கின்றது.

6. நோயாளி :- டொக்ரர்! நான் சாவைக் கண்டு ஒரு போதுமே பயப்பட்டதில்லை.
டொக்ரர் :- நீங்க என்னிடம் சிகிச்சைக்கு வந்ததிலிருந்தே நான் அதைப் புரிந்து விட்டேன்.

7. நோயாளி :- டொக்ரர்! உங்கள் அறையில் ஒரு எலும்புக்கூடு இருக்கின்றது ஏன்?
டொக்ரர் :- என்னிடம் முதன் முதல் சிகிச்சைக்கு வந்த நோயாளியின் நினைவுச் சின்னம் இது.

யே. தர்சன்
மா. மயூரன்
யோ. சுகிதரன்
தரம் - 8B



மக்கள் வங்கியின் yes சேமிப்குன் கணக்கை இன்றே ஆரம்பியுங்கள்.

yes சேமிபபுக் கணக்குப் பற்றி......

**ஆரம்ப வைப்புத் தொகை**

yes கணக்கை ஆரம்பிக்க ஆகக் குறைந்த ஆரம்ப வைப்ர்த் தொகை ரூபா 2000/- சிறுவர் சேமிப்புக் கணக்கை பிள்ளைக்கு 18 வயதானதும் லநள சேமிப்புக் கணக்காக மாற்றலாம்.

**கவர்ச்சிகரமான வட்டி**

வட்டி மாதந்தம் உங்கள் கணக்கில் வரவு வைக்கப்படும் ரூபா, 24.999/- வரையிலான வைப்புத் தொகைக்கு சாதாரண வட்டி வீதம்

1மூ போனஸ் வட்டி

ரூபா 1000/-க்கு மேற்பட்ட வைப்பிற்கு வட்டி வழுங்கப்படும்

**சேமிப்புக் கணக்குள்ளவர்களுக்குக் கிடைக்கும் நன்மைகள்**

உங்கள் வைப்புத் தொகை ரூபா 15.000/-க்கு மேற்பட்டால் நிலையான கட்டளைகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

ATM காட் இலவசம்

காட் சட்ட திட்டங்களுக்கு அமைய இலவச கிரடிட் காட் (தேவையான வைப்புத் தொகையுடன் 6 மாதங்களின் பின்) பீபள்ஸ் லீசிங் நிறுவனத்திடமிருந்து லீசிங் வசதி

**ஆயள் காப்புறுதி**

வைப்புத் தொகையின் 10 மடங்காக ஆகக் கூடியது ரூபா. 500 000/- ஆயள் காப்புறுதி.

**ஏனைய கடன்கள்**

6 மாதம் அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு உங்கள் கணக்கில் ஆகக் குறைந்தது ரூபா 10.000/- வைப்பில் இருக்க வேண்டும

உங்கள் வைப்புத் தொகையைப் போல் 10 மடங்கு


**[illegible]**
**கடன் வசதியை வழங்குகோம்**

உயர் கல்வி, வியாபார அபிவிருத்தி, வியாபாரத்தை ஆரம்பிக்க,வீடு அல்லது வாகனம் வாங்க, கல்விச் சுற்றுலாக்கள், விடுமுறைகள்குடும்ப நிகழ்ச்சிகள், கம்பியூட்டர் போன்ற பொருட்களை வாங்க.

**மக்கள் வங்கியின் [illegible] பரிசிழுப்பில் கலந்து கொள்ளும் வாய்ப்பு**

இக் கணக்கில் ஆகக் குறைந்தது 7பா.10.000/- ம் வைப்புத் தொகையாக இருப்பின் ஜயஸ்ரீ பரிசிழுப்பில் கலந்து கொள்ளும் தகுதியையும் பெறலாம்.






## நிதிக்காலாண்டுப் பகுதியில் ஒருமுறை நீங்கள் பணத்தை மீளப்பெற்றாலும் வட்டிக்கு 50% போனஸ்!

எமது புதிய முற்போக்கு சேமிப்புக் கணக்கு ஒரு நிலையான வைப்போ அல்லது சாதாரண சேமிப்புக் கணக்கோ அல்ல. மாறாக, இவை இரண்டினதும் சிறப்பு அம்சங்களை உள்ளடக்கியதாக உள்ளது. முற்போக்கு சேமிப்புக்கணக்கொன்றை நஜங்கள் ஆரம்பிக்கும் போது உங்களுக்குக் கிடைக்கும் வட்டி நாளாந்தம் கணிக்கப்பட்டு மாதாந்தம் வரவிலிடப்படுகிறது. அதாவது உங்கள் வட்டிக்கும் வட்டி கிடைக்கிறது. அத்தோடு இன்னும் பல நன்மைகளும் உள்ளன.

நிதிக்காலாண்டுப் பகுதியில் ஒரு முறை நீங்கள் பணத்தை மீளப்பொற்றிருந்தாலும் உங்கள் வட்டிக்கு மேலதிகமாக 50மூ போனஸ் வட்டி கிடைக்கிறது. இது கிட்டத்தட்ட நிலையான வைப்பொன்றை ஒத்ததாக உள்ளது. ஆனால் நிலையான வைப்பொன்றிலிருந்து உங்களுக்கு தேவையேற்படும் போது பணத்தை மீளப்பெறுவதாயின் வட்டி இழப்பின்றி பெறமுடியாது. இக்கட்டத்தில் தான் முற்போக்கு சேமிப்புக்கணக்கு ஒரு சேமிப்புக் கணக்கின் பரிமாணத்தைப் பெறுகிறது.

நீங்கள் ஒரு தடவைக்குமேல் பணத்தை மீளப்பெற்றாலும்கூட சேமிப்பு கணக்குரிய வட்டி வழங்கப்படுகிறது. ஆகவே சேமிப்புக் கணக்கொன்றின் சலுகைகளையும் நிலையான வைப்பொன்றின் உயர் வட்டியையும் ஒருங்கே பெற்றுக்கொள்ள இன்றே எமது கிளைகள், சேவை நிலையங்கள், மினிகொம் நிலையங்கள் ஏதாவதொன்றில் முற்போக்கு சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள்.

## கொமர்ஷல் வங்கி

உங்கள் ஆதாயமே எங்கள் நோக்கம்.

## விஞ்ஞான ஆய்வுகூடத்தில் உள்ள ஆபத்தை விளைவிக்கக் கூடிய சில இரசாயனத் திரவியங்களின் பட்டியல்

1. சோடியம் ஆசனைட்டு
2. புரோமின்
3. ஐதரோகுளோரிக் கமிலம்
4. நைத்திரிக் கமிலம்
5. சல்பூரிக்கமிலம்
6. தயோ சயனைட்டு வகைகள்
7. ஐதரோ காபன் [illegible]
8. அனிலின்
9. பேரியம் உப்புகள்
10. குளோரோபோம்
11. போமல்டிகைட்டு
12. பீனோல்
13. பாதரசம்
14. சோடியம்
15. பொசுபரசு

(தகவல்:- பாடசாலை விஞ்ஞான கூட பாவனைக்காக அறிவுறுத்தல் கோவையிலிருந்து)

அ. துவாரகா
சி. சிவானுஜா
தரம் - 10B

# அறிவுக்கு விருந்து

## குருதி

1 குருதியை நன்னிலையில் வைத்திருக்க உதவும் கனியுப்பு எது?
இரும்பு

2 குருதியிலிருந்து அல்பு மீன்கள் சிறுநீருடன் வெளியேறுவது எந்நோய்க்கு அறிகுறியாகும்?
நெப்பிறைற்றிஸ்

3. குருதிச் சுற்றோட்டத்தை கண்டுபிடித்தவர் யார்?
வில்லியம் ஹார்வே

4. குருதியை நான்கு வகையாக பிரித்தவர் யார்?
லான்ஸ்ரைனர்

5. பயம், கோபம், உணர்ச்சிவசப்படும் சந்தர்ப்பங்களில் உதவும் அகச்சுறப்பு எது?
அதிரினலின்

6. மூளையில் காணப்படும் வெப்பவாங்கி மையம் எனப்படுவது எது?
பரியகம்

## விஞ்ஞான விளக்கங்கள்

1. வெப்ப வலய பிரதேசத்தில் காணப்படும் பழங்கள் அதிக சுவையாகக் காணப்படுவது ஏன்?
ஆவியுயிர்ப்பினால் பிரதேசத்தில் காணப்படும் நீர் இழக்கப்படுவதனால் கரைசலின் கனவளவு குறைய கரையத்தின் செறிவு அதிகரிக்கும். இதனால் பழங்கள் சுவையாகக் காணப்படும்.

2. கடல் நீரில் நீண்ட நேரம் குளிக்கும்போது தோல் சுருங்கி காணப்படுவது ஏன்?
உப்புநீரின் செறிவு எமது உடற்கலங்களின் சாற்றின் செறிவிலும் பார்க்க கூட. இதன் காரணமாக உடற்கலங்களிலிருந்து நீர் புறப்பிரசாரணம் காரணமாக வெளியேற்றப்படும். எனவே தோல் சுருங்கிக் காணப்படும்.

3. இதயத்தில் துவாரம் உள்ளவர் நீண்ட நேரம் பயணம் செய்யமுடியாது காரணம் என்ன?
வலது இதய அறையில் தாழ்த்தப்பட்ட குருதியும் இடது இதய அறையில் ஒட்சியேற்றப்பட்ட குருதியும் காணப்படும். பிரிசுவரில் துவாரம் ஏற்படும் போது ஒட்சியேற்றப்பட்ட குருதியும் தாழ்த்தப்பட்ட குருதியும் கலக்கப்படுகின்றது. இதனால் ஒட்சிசன் குறைந்த குருதி உடற்கலங்களுக்கு பாய்வதன் காரணமாக அதிகளவு சக்தி பெறமுடியாது. இதனால் இளைப்பு ஏற்படுகின்றது.

4. ஈரல் வாயில் நாளத்திலும் பார்க்க ஈரல் நாளத்தில் யூரியாவின் செறிவு அதிகமாகும் காரணம் யாது?
அமினோஅமிலங்கள் ஈரல் வாயில் நாளத்தினூடாக ஈரலை அடைந்து இங்கு உடைக்கப்பட்டு யூரியாவை தோற்றுவிக்கின்றது. யூரியா ஒரு கழிவுப் பொருள் ஆகையால் சிறுநீரகத்தினுள் கடத்தப்படுவதற்காக குரதிச் சுற்றோட்டத்தினுள்

விடுவிக்கப்படும். இதன் காரணமாக ஈரல் நாளத்தில் யூரியாவின் செறிவு அதிகமாகும்.

5. வாழைக்குலைக்கு நீலப் பொலித்தீன் கட்டப்படுவது ஏன்?
நீல நிறக்கதிர்களின் முன்னிலையில் ஒளித்தொகுப்பு வீதம் அதிகரிப்பதனால் காய்களில் உணவு சேமிக்கப்படுகின்றது. இதனால் வாழைக்காய் பெருக்கின்றது. இதனால் வாழைக்காயை மூடிக்கட்டுவது உண்டு.

6. தடிமன் காலங்களில் எம்மால் மணத்தை உணரமுடியாது இருப்பது ஏன்?
தடிமன் காலங்களில் சீதமென் சவ்வுகளின் தடிப்பு அதிகரிப்பதனால் பதார்த்தங்கள் புலன் மயிர்களைத் தூண்ட முடியாது. இதனால் மணத்தை உணர முடியாமல் உள்ளது.

7. விமானங்களில் பயணம் செய்யும்போது சுவிங்கம் போன்ற இனிப்புகளை உட்கொள்வது ஏன்?
நடுக்காதையும் தொண்டையையும் இணைப்பது ஊத்தேக்கியாவின் குழாய் இது நடுக்காதின் வளியின் அமுக்கச் சமநிலையை பேணுவதற்கு உதவும்.
விமானங்களில் பிரயாணஞ் செய்யும் போது வளி அமுக்கம் குறைவு படுவதனால்
வெளிக்காதின் அமுக்கம் குறையும். இதனால் சமநிலை குழப்பப்படுகின்றது. சுவிங்கத்தை சப்பும்போது கீழ்த்தாடை அசைக்கப்படுவதனால் நடுக்காது வெளிக்காது சமநிலை பேணப்படும்.

8. பிடரியில் பலமாக தாக்கப்பட்ட ஒருவர் இறக்க நேரிடலாம் காரணம்?
நீள்வளைய மையவிளையப் பகுதி இச்சையின்றிய செயற்பாடுகளை கட்டுப்படுத்தும். பிடரியில் பலமாகத் தாக்கும் பொழுது இச்சையின்றிய செயற்பாடுகள் நிற்க மரணம் ஏற்படும்.

9. மாரி காலங்களில் ஆடு மாடுகளின் மயிர்கள் சிலிர்த்து காணப்படுவது ஏன்?
இவ் விலங்குகள் மாறா வெப்பநிலையுடைய விலங்குகள். சூழலில் வெப்பநிலை குறையும் பொழுது தனது உடல் வெப்பநிலையை மாறாது வைத்திருத்தல் அவசியமாகும். எனவே மயிர்கள் சிலிர்க்கப்படுவதனால் வளிப்படையின் தடிப்பு அதிகரிக்கப்படுவதனால் வெப்ப இழப்பு தடுக்கப்படும்.

10. கடுமையான தேக அப்பியாசம் செய்யும் போது இதயத்துடிப்பு அதிகரிப்பு ஏற்படுவது ஏன்?
கடுமையான தேக அப்பியாசத்திற்கு அதிகளவு சக்தி தேவை. இச்சக்தியானது
கலங்களில் உணவு மூலக்கூறுகள் எரிக்கப்படுவதனால் பெறப்படும். கலங்களுக்கு
உணவும் ஒட்சிசனும் குருதி மார்க்கமாகவே எடுத்துச்செல்லப்படுகின்றது. இவ்வாறு எடுத்துச் செல்லப்படுவதற்கு குருதி அதிகளவு பம் பண்ணப்படும். இதனால் இதயத்துடிப்பு அதிகரிக்கும்.

S. வினோதா
தரம் - 11A

# சிறுகதை

## அழகு

சோபிகா, சுயித்தா எனும் நண்பிகள் இருந்தார்கள். இவர்கள் இருவரும் ஒரே கிராமத்தில் அருகருகே இருப்பவர்கள். இவர்கள் ஒரே பாடசாலை ஒரே வகுப்பில் ஒரே இடத்தில் இருப்பவர்கள். எங்கு சென்றாலும் இருவரும் செல்வார்கள். இவர்கள் இருவரும் இணைபிரியாத நண்பிகள். சோபிகா உயர்ந்த அந்தஸ்த்துள்ள குடும்பத்துப் பெண். நல்ல பணக்காரி அத்தோடு மிகவும் அழகும் வாய்ந்தவள். கிட்டத்தட்ட நடிகை மீனா மாதிரி. ஆனால் சுயித்தா சாதாரண விவசாயியின் மகள். அழகு குறைந்தவள். சோபிகாவை விட சுயித்தா படிப்பில் மிகவும் கெட்டிக்காரி. சோபிகாவிற்கு விளங்காத பாடத்தை சுயித்தா சொல்லிக் கொடுப்பாள். சுயித்தாவிற்கு சோபிகா படிப்பிற்கு பண உதவி செய்வாள். இவர்களை யாராலும் பிரிக்க முடியாது. “பூவும் வாசமும்” போல பழகுவார்கள். சோபிகா சுயித்தாவிடம் உயர்வு, தாழ்வின்றி பழகுவாள். இருவரும் எதையும் ஒருவருக்கொருவர் ஒழிக்கமாட்டார்கள் எதையும் பகிர்ந்து கொள்வார்கள். சோபிகாவின் சைக்கிளில் தான் சுயித்தாவும் செல்வாள். இவர்கள் இப்படிப் பழகுவது சோபிகாவின் வேறு நண்பிகளுக்கு பிடிக்கவில்லை. இவர்களை பிரிக்க முயன்றனர். சோபிகாவை வேறு நண்பிகள் அழைத்து ஏய் நீ ரொம்ப அழகு நீ உயர்ந்த அந்தஸ்த்துள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் பணக்காரி நடிகை மீனா மாதிரி நீ சுயித்தாவுடன் பழகுவது சேர்வது வெட்கமாய் இல்லை என அரித்துக் கொட்டினார்கள். இதையெல்லாம் பெரிதாக எடுக்கவில்லை சோபிகா. மீண்டும் சுயித்தாவுடன் பழகினாள். இதைக் கண்ட சோபிகாவின் நண்பிகளுக்கு பிடிக்கவில்லை. மீண்டும் மீண்டும் வற்புறுத்தி பிரிக்க முயன்றனர். “கரைப்பவர் கரைத்தாள் கல்லும் கரையும்” என்பதற்கு ஏற்ப சோபிகா மனம் மாறினாள். வழமை போல் சுயித்தா பாடசாலை வருவதற்கு ஆயத்தமாய் சோபிகாவைப் பார்த்தபடி நின்றாள். தூர சோபிகா வருவதைக் கண்டாள். சுயித்தா நிற்பதைக் கண்ட சோபிகா தலையை மறுபக்கம் சாய்த்த படி தெரியாமல் சென்றாள். சுயித்தா அதிர்ச்சியுற்றாள். சரி அவள் ஏதோ கோபத்தில் போய்விட்டாள். பாடசாலையில் போய் கேட்போமென நினைத்த படி பஸ்சில் பாடசாலைக்கு சென்றாள்.

வகுப்பிற்கு சென்ற சுயித்தா சோபிகா வேறு நண்பிகளுடன் சிரித்து கதைத்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள். சோபிகாவின் அருகே சென்று ஏய் உனக்கு என்ன நடந்தது என வினாவி சோபிகாவின் கையைப் பிடித்தாள் சுயித்தா. ஆனால் சோபிகாவோ கையை உதறி என்னுடன் கதைக்க வேண்டாம் என கோபத்தோடு கூறினாள். இதைக்கேட்ட சோபிகாவின் நண்பிகள் ஓ........ என நக்கலாக சிரித்தனர். இதைக் கேட்ட சுயித்தாவின் கண்ணில் கடலாய் கண்ணீர் பெருகியது. இப்படியே நாட்கள் வாரம் ஆகின. வாரங்கள் மாதங்களாகின. இருவரும் கதைப்பதே இல்லை. தனித்தனியே பாடசாலை செல்வார்கள். சோபிகா பாடசாலைக்கு ஆயத்தமாகிவிட்டு வழமை போல் அம்மா கையில் வேலை இருந்த படியால் அடுப்பில் கேற்றலில் தண்ணீர் கொதித்துள்ளது ஊற்றிக் குடி என்றாள். இதைக் கேட்ட சோபிகா

கோபத்துடன் தன்னிலும் உயரமாயுள்ள கேற்றலை இழுத்து எடுத்தாள். தண்ணீர் நிறைய நின்றது தெரியாது கேற்றல் தவறுப்பட்டு சோபிகாவின் உடம்பு முழுவதும் ஊற்றப்பட்டது. அம்மா அம்மா ஐயோ ஐயோ...... என்று கதறினாள். தாய் உடனே ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றாள். அங்கே வாட்டில் சோபிகா மறிக்கப்பட்டாள். சுய நினைவற்று படுத்திருந்தாள். நடிகை மீனா மாதிரி இருந்த சோபிகா கோலம் மாறி மிகவும் கறுத்துப் போய் படுத்திருந்தாள். இதை அறிந்த சுயித்தா துடிதுடித்தாள். ஆஸ்பத்திரிக்கு சென்றாள். அங்கே சோபிகா கோலம் மாறி இருப்பதையும் சுய நினைவு அற்று படுத்திருப்பதையும் உணர்ந்தாள். சுய நினைவு வந்தவுடன் முழித்துப் பார்த்தாள். முன்னால் சுயித்தா நிற்பதைப் பார்த்தாள். கட்டிப்பிடித்து அழுதாள். என்னை மன்னித்து விடு சுயித்தா நான் வேறு ஆட்கள் கூறியதைக் கேட்டு உன்னுடன் கதைக்காமல் விட்டேன். என்னை மன்னித்துடு. நான் வடிவாக இருந்ததால் உன்னை வெறுத்தேன். ஆனால் இப்ப கறுத்துப் போயிருக்கிறேன் என்றாள். சரி சரி இதையெல்லாம் பெரிதாக எடுக்கக்கூடாது என ஆறுதல் கூறினாள். முகத்தில் இருப்பது அழகு அல்ல உள்ளத்தில் இருப்பது தான் அழகு என சோபிகா பின்பு தான் உணர்ந்து கொண்டாள்.

M. கரிகரன்
2004 A/L
கலைப்பிரிவு.

## அறிவுக்கு விருந்து

### குருதி

1. குருதியை நன்னிலையில் வைத்திருக்க உதவும் கனியுப்பு எது?
   இரும்பு
2. குருதியிலிருந்து அல்பு மீன்கள் சிறுநீருடன் வெளியேறுவது எந்நோய்க்கு அறிகுறியாகும்?
   நெப்பிறைற்றிஸ்
3. குருதிச் சுற்றோட்டத்தை கண்டுபிடித்தவர் யார்?
   வில்லியம் ஹார்வே
4. குருதியை நான்கு வகையாக பிரித்தவர் யார்?
   லான்ஸ்ரைனர்
5. பயம், கோபம், உணர்ச்சிவசப்படும் சந்தர்ப்பங்களில் உதவும் அகச்சுறப்பு எது?
   அதிரினலின்
6. மூளையில் காணப்படும் வெப்பவாங்கி மையம் எனப்படுவது எது?
   பரியகம்

# கட்டாயக் கல்வியின் பிரயல்யம்

தற்கால உலகு துரிதமாக மாற்றமடைந்து வருகின்றது. அதற்கேற்ப இலங்கையும் முன்னேறி வீறு நடை போட வேண்டியுள்ள இக்கால கட்டத்தில் கல்வித்துறையில் முக்கிய இடம் பெற்று விளங்குகின்றது. அவரவர் கல்வியை தாமே பெற்றுக்கொள்ள வேண்டும்.

கட்டாயக் கல்வியினை எடுத்து நோக்கவோமானால் 5 எயது தொடக்கம் 16 வயது வரையான பிள்ளைகளுக்கு கட்டாயக் கல்வி அவசியமான ஒன்றாகும். அக்கல்வியை எல்லா மாணவர்களும் கற்றுப் பயனடைய வேண்டும் என்பதற்காக இது அரசாங்கத்தினால் வலியுறுத்தப்பட்டுள்ளது. 5 தொடக்கம் 14 வயதிற்குட்பட்ட கட்டாயக் கல்வி பயிலும் பிள்ளைகளில் 4% மான பிள்ளைகள் பாடசாலைக்கு போவதில்லை. அதற்குரிய அடிப்படைக் காரணம் சமூக பொருளாதாரமாகும். வறுமை காரணமாக பிள்ளைகள் வேலைக்குச் சென்று குடும்ப வருமானத்தை ஈடுசெய்யவேண்டியுள்ளது. ஏனைய காரணமாக பல பிள்ளைகளுக்கு பிறப்புச் சான்றிதழ் இல்லாமையால் பாடசாலை அனுமதி மறுக்கப்படுகிறது.

இவ்வாறு கல்வி இல்லாதவர்களின் தொழில் பரிதாபத்திற்குரியது ஆகும் நிலையை நோக்கினால் இலங்கையில் தொழில் கல்வி, ஏட்டுநிலைக் கல்வி என்பவற்றை வழங்குவதற்கு 3000 நிறுவனங்களும் அமைப்பாண்மைகளும் காணப்படுகின்றன. அரசு சாரா நிறுவனங்கள், அமைச்சுக்கள், தனியார் நிறுவனங்கள் போன்றவையும் இப்பணியில் நாட்டம் கொண்டு செயலாற்றுகின்றன. அதே வேளை நாட்டில் காணப்படும் வேலையின்மையின் அளவும் 60000 பேரை சவால் கொள்ளும் வகையில் கல்வி பயிற்சி வழங்குவோரை ஒருங்கிணைப்பதற்கான ஒரு வயது அபிவிருத்தித் திட்டம் நடைமுறையில் கொண்டு வரப்படும்.

தொழில் வழிகாட்டல் பாடசாலை மட்டத்தில் மேற்கொள்ளப்படும் நிலையிலும் தேசிய ரீதியில் இதன் பயனுறிதித் தன்மையைப் பாதிக்கும் நிலைமைகளும் காணப்படுகின்றன. ஒரு போதும் பாடசாலை செல்லாதவர்களின் தொகை கணிசமானதாயுள்ளனது. தொழில் செய்யக் கூடிய வயதினரில் கணிசமானோர் பாடசாலை செல்வதில்லை. 10 - 14 வயதுக்குட்பட்டோரில் 30 % தினரும் 15 - 19 வயதுக்குட்பட்டோரில் 50% தினரும் பாடசாலை செல்வதில்லை. இவர்கள் பெரிதும் வறுமையால் குடும்பங்களில் உதவி, வழிகாட்டல் எதும் அற்றவர்கள். இவர்கள் பாடசாலை வழிகாட்டல் சேவை என்னும் ஒளி வீச்சினுள்ளும் வரமுடியாது இருக்கின்றனர். தெருவோரப்பிள்ளைகள் குழந்தைக் கடல்கள் குழந்தை விலை மக்கள் டீபாதைப் பொருள் நுகர்வாளர் எயிட்ஸ் நோயாளர் கைவிடப்பட்டோர் என்றே பல் துயரப் பண்புகளுடன் வாழ்வதற்குரிய வாய்ப்புக்களை அகற்றும் தகமையும் பாடசாலை மட்ட வழிகாட்டற் சேவை பெறமாட்டாது உள்ளனர். இலங்கையில் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் தீங்குறும் வாழ்வு நிலைமையை பின்வருமாறு அட்டவணைப்படுத்திக் காட்டியுள்ளனர். அதாவது வீட்டுப் பணியாளர்களாக 6 வயது தொடக்கம் 10 வயதான பிள்ளைகள் 10000 - 15000 பிள்ளைகள் கல்வி கற்காது வேலை செய்கின்றனர். வீதியில் திரியும் சிறுவர்களின் தொகை 10000. இடம்பெயர்ந்து முகாம்களில் வசிக்கும் பிள்ளைகளின் தொகை 20000. பாலியல் வர்க்கத்தில் ஈடுபடும் சிறுவர்களின் தொகை 30000. பாடசாலை செல்லாத சிறுவர்களின் தொகை 300000. பெரும் தொகையான பிள்ளைகளுக்கு கட்டாயக்

கல்வி இன்மையால் இவர்கள் இச் செயல்களைச் செய்து கொண்டு தமது வாழ்வை சூழ்சியிட முறையில் நடாத்திச் செல்கின்றன. ஆனால் 21 ஆம் நூற்றாண்டில் இவ்வாறு கட்டாயக் கல்வி கற்காத மாணவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளது. இதற்கு காரணம் பாடசாலைக்காகவே இலவச உடை வழங்கல், இலவச புத்தகம் வழங்குதல்,மற்றும் வேறு நிறுவனங்கள் வறுமைப்பட்டோருக்கும் உதவி செய்தல் போன்ற காரணங்களினாலே இன்று இலங்கையில் கட்டாயக் கல்வி பிரபல்யம் அடைந்துள்ளது.

இலங்கையில் கல்வியானது எல்லா மக்களினதும் அதே சமயம் நூற் கல்வி நோக்கி, பெருந் தொகையானோரை தோல்வியுறச் செய்தும் வருகின்றது. நூற் கல்வியில் உயர் மட்டத்தில் தகுதி பெறும் சிறு தொகுதியினர் மாத்திரமே வெற்றி பெற்றோராகவே நல்ல தொழிலையும் உயர் வருமானத்தையும் சமூக அந்தஸ்தையும் மகிழ்சிசியையும் பெறுகின்றனர். மருத்துவர், கணக்காளர், பொறியியலாளர், சட்ட வல்லுனர், உயர் தொழில்நுட்ப வியலாளர், விரிவுரையாளர் போன்றோரை கொண்ட சிறு தொகுதியினரின் முன்னேற்றத்திற்கு கல்வி வளங்களை அதிகமாக பயன்படுத்துகின்றனர். பாடசாலை மட்டத்தில் முறையான கல்வியை க.பொ.த சாதாரண மட்டத்தில் 11 வருடங்களும் க.பொ.த உயர்தர மட்டத்தில் 13 வருடங்களும் பெற்ற பின்னும் தொழில் உலகினால் அவர்கள் இழுக்கப்பட்டுள்ளனர். ஒரு அரசாங்க வேலை செய்வதற்குகூட தற்போதைய கால கட்டத்தில் உயர்தர வகுப்பில் கல்வி கற்று சித்தியடைந்திருந்தால்தான் ஒருவனுக்கு வேலை கிடைக்கும். அரசாங்கத்தின் கட்டாயக் கல்வியானது இன்று உலக நாடு முழுவதும் பிரபல்யம் பெற்று விளங்குவதனை நாம் கண்ணூடாகக் காணக் கூடியதாக உள்ளது. எனவே நாட்டின் வருங்காலத் தூண்கள் மாணவர்களே.

இ.சுபாஜினி
கலைப்பிரிவு
தரம் 13



## வாய்ச்சொல்லில் வீரர்


உள்ளத்தில் ஒன்று வைத்து
உடம்பெல்லாம் பொய் வைத்து
கள்ளத்தோடு பழகிடுவார்
கயவர் இன்றுலகில்!

நல்லது உள்ளத்தில் இல்லை
நயமான செயலுமில்லை
பள்ளத்தில் பலரைத் தள்ளும்
பாவிகள் இன்றுலகில்!

நல்லதைச் செய்யவும் விடார்
தானுமதை நன்றாய் செய்யார்
உள்ளதெல்லாம் மாற்றி
ஊரம் பலப்படுத்துவார்!

உத்தமராய் ஊரில் நடிப்பார்
உரியதொன்றும் செய்யார்
பத்தனாய்க் காட்சியளிப்பார்
பாதகம் செய்யக் கூறார்!

அத்தனையும் அவருள் பொய்
அப்படியில்லையென்பார் மெய்
சத்தியமாய் அவனையெல்லாமின்று
சவுக்காலடிப்பது நன்று!



## சமாதானம்

தானம் வேண்டும் சமாதானம் வேண்டும்
தரணிக்கு வேண்டும் மகத்தான தானம்
போர் தந்த அவலங்கள் உணர வேண்டும்
சமாதானத்தின் பெருமை காணல்
வேண்டும்.

நெஞ்சங்களின் கீறல்கள் மறைய
வேண்டும்
சோகத்தின் சாயல்கள் ஒழிய வேண்டும்
வாடிய மனங்கள் தெம்படைய வேண்டும்
தென்றலில் புதுமணம் வீசி வரவேண்டும்.

பேராசையினால் போர் தொடுத்தான்
அசோகன்
பட்ட பின்பு துடித்தான் துன்பத்தில்
வீழ்ந்து
நாசகார ஆயுதங்கள் வேண்டாம்
தரணிக்கு
சமாதான அணிகலங்கள் பூட்ட வேண்டும்.


விடியலுக்கு விடிவெள்ளி சிமிட்டுது
உதயத்தில் ஆதவனும் வரல் வேண்டும்
திரை போட்ட தடையங்கள் இல்லாமலே
சமாதானப் புறாவே வந்திடல் வேண்டும்.

சமாதானக் குரல்கள் ஓங்க வேண்டும்
நல்லெண்ணம் கோலம் இடவேண்டும்
இனமத பேதங்கள் விலக வேண்டும்
ஒற்றுமை வாழ்வு நாடி வரல் வேண்டும்.

நிலாஜினி

ச ி ி ா ஜ ி ன ி 2 0 0 0


## உதைபந்தாட்ட 16 வயது அணியினர்



கோட்ட மட்டத்தில் முதன்மை அணியாக (சம்பியன்)
2003 இல் தெரிவு செய்யப்பட்டவர்கள்

உதைப்பந்தாட்ட அணிகளின் பயிற்சி ஆசிரியர்கள்
திரு. ம. இ. நரேந்திரா, திரு. ம. வினோகாந்

## உதைப்பந்தாட்ட 14 வயது அணியினர்



## போராட்டம்

இறைவனுக்கோ உலகத்தோடு போராட்டம்
உலகத்திற்கோ மக்களோடு போராட்டம்
மக்களுக்கோ வாழ்க்கையோடு போராட்டம்
வாழ்க்கைக்கோ காலத்ததோடு போராட்டம்
காலத்திற்கோ மனிதனோ போராட்டம்
மனிதனுக்னே கல்வியோடு போராட்டம்
கல்விக்கோ பட்டத்தோடு போராட்டம்
பட்டத்திற்கோ பதவியோடு போராட்டம்
பதவிக்கோ ஆட்சியோடு போராட்டம்
ஆட்சிக்கோ அரசியலோடு போராட்டம்
சட்டத்திற்கோ நீதியோடு போராட்டம்
நீதிக்கோ உண்மையோடு போராட்டம்
உண்மைக்கோ உயிரோடு போராட்டம்
உயிருக்கோ எமனுடன் போராட்டம்
எங்கும் போராட்டம் எதிலும் போராட்டம்
மனித வாழ்க்கையே ஓர் போராட்டம்

பாக்கியதுரை கார்த்திகா
தரம் - 10A

## இனிய புத்தாண்டே வருக

பூவிழி சிமிட்டி புன்னகை
பூத்திட புதியதொரு
வருடமாய் என் இதயங்
கவர்ந்து வருக! வருக!

புதன் என்ற பூவாய்
எம் இதயங்களில் கவர்ந்திட
இரண்டாயிரத்து மூன்றே - எம்
இதயம் என்னும் கோவிலுக்குள் வருக! வருக!

பாலன் பிறந்த நாளில்
பிறந்த புதுவருடம் எங்கும்
நிறைந்து வருக! வருக!

ம. பௌசிகா
தரம் - 7A

# மனித மனம்

மனித மனமொரு குரங்கு
தாவுவதும் தங்குவதும்
இயல்பு

மனித மனமொரு கடல்
ஆர்ப்பரிக்கும் அமைதிகொள்ளும்
சுபாவம்

மனித மனமொரு குறைகுடம்
நிறைதலும் தளம்புதலும்
குணம்

மனித மனமொரு வெற்றிடம்
தாங்குவதும் தவிக்க விடுவதும்
பண்பு

மனித மனமொரு மைல்கல்
வெற்றிக்கும் தோல்விக்கும் இடையிலான
நடுகல்

மனித மனமொரு மலர்
மலர்வதும் மடிவதும்
அன்றாட நிகழ்வு

மனித மனமொரு சிறை
இன்பங்களின் துன்பங்களின்
தரிப்பிடம்

நிறுத்தலுக்கும் துரத்தலுக்கும்
கடிவாளம்
கட்டுப்பாட்டிற்கு வெகுதூரம்.

ச. சயிந்தன்
தரம் - 9B

வித்தியா பல்லாண்டு காலம் வாழ்க.

# வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

- சகலவிதமான நுகர்வுத் தேவைகளுக்கும் மொத்த,சில்லறை விற்பனை நிலையங்கள்
  நீர்வேலி,கோப்பாய்,ஊரெழு,அச்செழு,உரும்பிராய்
- வங்கிச் சேவைகளுக்கு
  நீர்வேலி கிராமிய வங்கிகள்,கோப்பாய், உரும்பிராய்.
- இரும்பு விற்பனை நிலையம்,கட்டிடப் பொருட்கள்,கனரகப் பொருட்களுக்கு நீர்வேலி
- சிறுவர்கள் ஆடவர்,பெண்களின் ரெடிமெற் ஆடைகள், துணிவகைகள்,பாடசாலை உபகரணங்கள்,அலங்காரப் பொருட்கள்,பிளாஸ்ரிக் கதிரைகள் என்பவற்றுக்கு
  நீர்வேலி,கோப்பாய்,உரும்பிராய்
- வாகன சேவைக்கும், வாடகைக் கதிரைச் சேவைக்கும்
  நீர்வேலி மொத்த நிலையம்
- எரிபொருள் தேவைகளுக்கு
  கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையம்
- பல்பொருட்களுக்கு
  நீர்வேலி ,கோப்பாய்,உரும்பிராய்
- நிழற்பிரதி சேவைக்கு தொலைபேசி சேவைக்கு
  நீர்வேலி. தொ. பே. இல. 070-212337
  070-213020



உள்ளூர்,வெளியூர் சேவைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.

**மக்கள் சேவையே வலி.கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் சேவை**


"கூட்டுறவே நாட்டுயர்வு"

நீர்வேலி

வித்தியாவின் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்

# Eric Ganesh

## எரிக்கணேஸ்



நவ நாகரிக அழகுக் கேற்ப கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குவதில் முன்னோடிகளாகத் திகழ்பவர்கள்.

T.P 021.222 2486

564,566 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

---

வித்தியாவே உன்பணி சிறக்க வாழ்த்துகின் றோம்.

# ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்

## SKY ELECTRONIC SYSTEM

சகல விதமான கொம்பியுட்டர்களும் ஒரு வருட உத்தரவாதத்துடனும், ரீ.வி,டெக்,உட்பட அனைத்து மின் உபகரணங்களையும் ஒரே இடத்தில் நியாய விலையில் பெற்றிட நம்பிக்கையான ஸ்தாபனம்




இல-10
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே.சி-021-222 5349

---

வித்தியா தொடர்ந்தும் வலம்வர வாழ்த்தும்

# சிவசம்பு களஞ்சியம்





எல்லா வகையான ஆயுர் வேத மருந்துப் பொருட்கள்,மங்கல நிகழ்வுகளுக்கு தேவையான அர்ச்சனைப் பொருட்கள்,மற்றும் இதர பொருட்களையும் ஒரெ இடத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இல 3, கிரான்பசார் வீதி,
யாழ்ப்பாணம்.

---

வித்தியாவின் பணி மேன் மேலும் வளர வாழ்த்தும்

# நாகரத்தினம் &சன்ஸ்



உங்களுக்குத் தேவையான அனைத்து மின் உபகரணங் களையும்,பெற்றுக்கொள்வதுடன் உள்நாட்டு,வெளிநாட்டு தொலைபேசி வசதிகளையும் நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்

தொ.பே.- 021 222 2406

தொ. தகவல் – 021 222 2406

127,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வித்தியாவே நீ என்றென்றும் நலமாக வாழி

# சிவசக்தி பல்பொருள் வாணிபம்




நீங்கள் விரும்பும் அனைத்து வகையான
புதினப்பத்திரிகைகள், வாரமலர்கள்,
என்பவற்றுடன் பலசரக்குப் பொருட்கள்,
மின்னியல் உபகரணங்கள்,இரும்புப்
பொருட்கள், பழவகைகள்என்பவற்றை
ஒரே இடத்தில் நியாய விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.

**பலாலி வீதி,**
**உரும்பிராய்ச் சந்தி,**
**உரும்பிராய்.**

வித்தியாவுக்கு எமது இதயம் கனிந்த
நல்வாழ்த்துக்கள்.



# குட்லக் தையலகம்



நவநாகரீகங்களுக் கேற்ப துணி
வகைகளை கண்கவர் முறையில்
உடனுக்குடன் தைத்து பெற்றுக்
கொள்ள நீங்கள் நாட வேண்டிய
இடம்.

பலாலி வீதி,
உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.

வித்தியாவின் பணி சிறக்க வாழ்த்தும்



# சீமாட்டி

# SEEMATI

**தரமான பட்டுப் புடவைகளின்**
**கைராசியான ஸ்தாபனம்அனைத்துப்**
**புடவைகளின் மொத்த சில்லறை**
**வியாபாரிகள்.**

**122,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்**
**15,நவினசந்தை,மங்கைசில்க், யாழ்ப்பாணம்.**
**8,நவீனசந்தை,மங்கை சில்க்.சுன்னாகம்.**

இந்துவின் வித்தியா இதழ் மலர
வாழ்த்துகின்றோம்.

# லிங்கன் கிறீம் ஹவுஸ்





சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட அனைத்து ஐஸ்கிறீம் வகைகள்,கேக்,பீடா, பட்டர் என்பனவற்றை வழங்குவதில் முன்னோடியாகத் திகழ்பவர்கள்.

119,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

வித்தியா மேன் மேலும் மிளிர வாழ்த்துக்கள்

# தனபாலசிங்கம் ரேட் சென்ரர்.




நீங்கள் விரும்பும் அனைத்து வகையான பலசரக்குப் பொருட்கள் எவர்சில்வர்,அலுமினிய பாத்திரங்கள் பிளாஸ்ரிக் பொருட்கள்என்பவற்றை நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

பலாலி வீதி.
உரும்பிராச் சந்தி.
உரும்பிராய்.

வித்தியாவே நீ தொடர்ந்தும் வலம்வர
வாழ்த்துகின்றோம்.



# மணியம் பல்பொருள் விற்பனை நிலையம்



துவிச்சக்கர வண்டிகளுக்குத் தேவையான உதிரிப்பாகங்கள், மின் உபகரணங்கள், இரும்புப் பொருட்கள் என்பவற்றை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.

வித்தியா சீரும் சிறப்பும் பெற
வாழ்த்துகின்றோம்.

# செல்வா தேநீர்ச்சாலை



நீங்கள் விரும்பிய வேளைகளில் சுவையான சிற்றுண்டிகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

பலாலி வீதி,
உரும்பிராய்ச் சந்தி,
உரும்பிராய்.

# பாடசாலை

ஒன்றுபட்ட சமூகம் உருவாகிட
ஒவ்வோர் மனதையும் திசை திருப்புவதும்
கல்வி
அக்கல்விதனை நாம் உணர்வோடு பெற்றிட
கலங்கரை விளக்காய் வழி காட்டுவது
பாடசாலை

வண்ண வண்ண நினைவுகளோடும்
சின்னச் சின்ன கனவுகளோடும் - நம்
எதிர்காலம் எனும் குறிக்கோளோடு
அவனிதனில் இசை பாட அரண் அமைப்பது
பள்ளி

வசந்த காலப் பறவைகளாய் வானிலே
பறந்திடவும்
இசை பாடும் குயில்களாய் உலகெலாம்
உலவிடவும்
எம் நம்பிக்கையோடும் கல்வி எனும்

இறக்கைகளைக் கொண்டு

வரும்கால நினைவுகளை நம்மில்
உருவாக்குவது பள்ளி

மறக்க முடியாத இனிமை கொண்ட
அனுபவங்களை
பிரிக்க முடியாத நட்பான உறவுகளையும்
எதிர்ப்புக்களை எதிர்கொள்ளும் மனஉறுதியும்
நம்மில் உரமாய் ஊட்டுவது பள்ளி

அவனிதனில் அன்பு எனும் பண்பு கொண்டு
நம் வாழ்விற்கே இலக்கணம் வகுக்கும்
கல்விதனை
தன் உயிரையே உணவாய்த்தரும் தாய்
போல்
மாணவர் நமக்கு அள்ளித்தருவதே பள்ளி

வானத்து விண்மீன்கள் போலும் கடற்கரை
மணல் போலும்
அளிக்க முடியாத மாணவச்செல்வங்களை
உருவாக்குவது பள்ளி
அப்பள்ளிதனை என்றுமே அழியாது நாம்
பாதுகாக்க
நம் மனங்களில் நிலையாய் நிற்கவேண்டியது
கல்வி ஒன்றே.

ப. கார்த்திகா
தரம் - 11B

## பாடசாலை

**GOD**

| | | | | |
|---|---|---|---|---|
| G | - | Guardian | – | பாதுகாவலன் |
| O | - | Operator- | - | நடத்துபவன் |
| D | - | Destroyer | - | அழிப்பவன் |

**SCHOOL**

| | | | | |
|---|---|---|---|---|
| S | - | Sincerity | - | விசுவாசம் |
| C | - | Capacity- | - | இயலுமை |
| H | - | Honesty - | - | நேர்மை |
| O | - | Obealience | - | பணிவு |
| O | - | Orderliness | - | ஒழுங்கு |
| L | - | Learning | - | கற்றல் |

**NEWS**

| | | |
|---|---|---|
| N | - | North |
| E | - | East |
| W | - | West |
| S | - | Sout |

# மறைந்த மாவீரர் நினைவுகள்

தமிழ்த்தாய் குலமகனாய் தன்மான சிகரமாய்
கொடுமைகள் கிழித்தெறிய கோரமாய் அமராடி
தன்மானம் காக்கவென தன்னுடல் இழந்து
தாய்மண் செந்தழுக்க இன்னுயிரை விருந்தாக்கி
சோதனை வேதனை யாவுமே தூசாக்கி

தாய்நாடே இலட்சியமாய் குருதியிலே நீராடி
ஆட்டிலறி பீரங்கி புக்காரா சகடை
யாவுமே வேதனை பலமாக தந்தும்
பிற்படி வையாது ஜீவன் உள்ளவரை
பகைவன் பட்டாளம் ஏங்கியே மாழவும்
தாமே ஆயுதமாய் வெடித்த சாதனைகள்


நிகரற்ற தமிழனின் அழியாத நித்திலங்கள்
வல்லரசு நாடெல்லாம் உம்புகழ் மெச்சின
வாய்மை ரகசியங்கள் அம்பலம் ஆக்கின
தமிழன் தன்மானம் மண்ணிலே வீசிடும்
உங்கள் தியாகங்கள் நெஞ்சிலே நின்றிடும்.

# நூலகம்


அறிவுக் களஞ்சியமாய் அறிவாளி தாய்மடியாய்
கைமாறு கேளாத செல்வ களஞ்சியமாம்
றாக்கையில் நூல்களாய் ஜென்ம திரவியங்கள்
பற்றுவோர் மூளையில் அறிவாய் பளிச்சிடும்
அறிவியல் மெய்யியல் பொதுவியல் சரித்திரம்
சொல்லாத இரகசியம் விரிவாய் செப்பிடும்.

மொழியியல் மகிமை சாந்தமாய் பதித்திடும்
பைந்தமிழ் வாசனை சாந்தமாய் தந்திடும்
இன்மொழி கதைகள் எளிதாய் செப்பிடும்
தர்மமே தழைக்க தானமே ஆகிடும்
ஆன்மீகம் ஓங்கிட ஒருவனாய் நின்றிடும்
உத்தமர் வாழ்ந்திட புகழிடம் தந்திடும்.

பா. ஹரன்ஸ்குகன்
2003 A/L
கலைப்பிரிவு.



19 வயதுப்பிரிவு மென்பந்து குழு வீரர்கள்



உதைப்பந்தாட்ட 18 வயதுப் பரிவினர்

(வலய மட்டப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்ட அணி)

# கவிதைத் தொகுப்பு

## செயற்படு

செயற்படு பெண்ணே சுதந்திரம் பற்றி-
-எழுதியதை எரித்துவிடு!
விடுதலைக்கு குரல் கொடுக்கிறாயா?
இப்போதே நிறுத்து!
அவற்றை உன் மூதாதையரும்
செய்தார்கள்!
நீ புதுமைப் பெண்
அதை நிருபிக்க புறப்படு!
உன் ஒவ்வொரு அறிவிலும்
வெற்றி முரசொலிக்கட்டும் !

## புதுமைப் பெண்

பெண்ணே உன் அடிமைத்தனத்தை
விட்டெறிந்து விரைந்தெழு!
கண்ணகி எனும் காரிகை போல்
கொடியவரை எரித்திடு!
கற்பிற் சிறந்தவளாய் உலகம்
எங்கும் உன் புகழைப்பரப்பி!
பாரதியின் புதுமைப் பெண்ணாய்
நீ விரைந்தெழு!

## தாய்க்குலம்

கோடையில் மழையான கோதைகள்
கோவிலில் சிலையான பாலைகள்
பாதைகளில் பாடுகின்ற
-பாரிதாபம் அகலவில்லை!

பள்ளிகளில் பாலியல் வன்முறை
படைமுகாம்களில் சோதனை
உள்ளமிலா பேய்களினால்
உருக்குலையுதே தாய்க்குலம்

## மனிதனாகிப் பேசுவாயோ?

நிலவு மகள் உலாவிவர மௌன
மொழி பேசும்
குழுமிநின்று விண்மணிகள்
கண்சிமிட்டிப்பேசும்
கரை தவழும் கடலலைகள்
தரைகளுடன் பேசும்
கருமைநிற முகில் பேசி மழைக்காற்று
வீசும்
மழைக்கால வண்டு வந்து
மலர்களுடன் பேசும்
மலையருவி சலசலத்து வழிநெடுகப்
பேசும்
விடிகாலை குடில் ஓரம் குருவிகளும்
பேசும்
குறுகுறுத்த விரல் அசைவில்
இசைக்கருவி பேசும்
இனியவனே நீயுமினி மானிடனாய்ப்
பேசு
மனச்சுமைகள் மறைந்துவிடும்
மனந்திறந்து பேசு!

மகேந்திரன் சுதர்சனா
2003 A/L
கலைப்பிரிவு.

# பொது அறிவு

1. இலங்கையின் மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட ஆண்டு எது?
   1988
2. இலங்கையின் கிறிக்கற் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் யார்?
   திலங்க சுமதி பால
3. இலங்கையின் தற்போதைய விண்வெளி விஞ்ஞான ஆலோசகர் யார்?
   சந்திர ஜெயரட்ன
4. கிழக்கு இலங்கையிலிருந்து தயாரிக்கப்பட்டுள்ள முதல் தமிழ் திரைப்படம் எது?

   அன்புள்ள அவள்
5. இலங்கையில் கட்டுப்படுத்தப்பட்டுள்ள இரு நோய்கள் எவை?
   சின்னமுத்து, போலியோ
6. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் யார்?
   எம். எல். ஏ. காதர்
7. கல்விக் கல்லூரிகளில் கணனி விஞ்ஞானக் கல்வியை ஆரம்பிப்பதற்கு உதவி வழங்கவுள்ள நிறுவனம் எது?
   உலக வங்கி
8. மகரகமை தேசிய கல்வி நிறுவனத்தின் (NIB) பணிப்பாளர் யார்?
   லக்ஷ்மன் ஜயதிலக
9. இலங்கைப் பெண்களில் கல்வியறிவு மிக்கவர்களின் வீதம் யாது?
   85
10. இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் எத்தனை?
    12
11. இலங்கையில் சோயா உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்து வரும் நிறுவனம் எது?
    சோயா புட்ஸ் நிறுவனம்
12. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் யார்?
    பேராசிரியர் ஜகத் விக்கிரம சிங்க
13. இலங்கைத் தேயிலையை பெரிதும் விரும்பும் இரு நாடுகளின் பெயர் தருக?
    ஜப்பான், ஜெர்மனி
14. சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்திச் சங்கத் தலைவர் யார்?
    சோஹண இலங்க ரத்ன
15. கண்டி மாவட்டத்தில் ஆயிரம் கோடி ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாரிய குடிநீர்த் திட்டத்திற்கு உதவும் நிறுவனம் எது?
    உலக வங்கி
16. கொழும்பில் மகளிர் அனாதை இல்லம் அமைந்துள்ள இடம் எது?
    வெள்ளவத்தை
17. யாழ்ப்பாண மாநகர சபையின் பிரதி மேயர் யார்?
    என். ரவிராஜ்
18. ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் தமிழ் நிகழ்ச்சிப் பணிப்பாளர் யார்?
    எஸ். வன்னியகுலம்
19. கொழும்பு லயன்ஸ் கழகம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?
    1982
